www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜூலை - 2004
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



கல்வி :
தனியார்மயக்
கனவு கலைகி



நாய்க்கடி மருந்துத் தட்டுப்பாடு :
மருத்துவத் துறையைக்
கவ்வும்

## ஏகாதிபத்திய வெறிநாய்

படிப்பகம்


www.padippakam.com













## தண்ணீர்: தேவை ஓர் முழுமையான கொள்கை

பக். 68 ரூ.15

விவசாயத்தைக் கம்பெனிமயமாக்கும் நோக்கத்துடனும், அவர்களுக்குச் சேவை செய்யும் விதத்திலும்தான் தேசிய தண்ணீர்க் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கிறது என்கிறார் நூலாசிரியர். எனினும், உலகநீர் வளத்தைக் கைப்பற்ற ஏகாதிபத்திய நிறுவனங்கள் வகுத்துள்ள சதித்திட்டத்தை இந்நூல் அம்பலப்படுத்தவில்லை. இந்நூலின் சுற்றுச் சூழலியல் கண்ணோட்டம் தன்னார்வக் குழுக்களின் பார்வையைப் பிரதிபலிக்கிறது.

*நூல் ஆக்கம், கருத்து :* **சேது**
*வெளியீடு :* **நீர்வளம் மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்புக் கூட்டமைப்பு, கரூர்,**
பதிவு எண் 48, ரெங்கநாதபுரம் (அஞ்சல்),
கரூர் மாவட்டம் - 639 108.

## மகளிர் சுய உதவிக் குழுக்களின் எழுச்சியும் தாராளமயத்தின் வீழ்ச்சியும்

பக். 211 ரூ.75

சமுதாய மாற்றத்தைச் சாதிக்கவல்லது தொழிலாளி வர்க்கம் அல்ல, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் (ம.சு.உ.கு) என்று ஒரு அசட்டுக் கம்பீரத்துடன் அறிவிக்கிறார் நூலாசிரியர். ம.சு.உ. குழுக்களை ஒழித்துக் கட்ட விரும்புவோர் எதிரிகளைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வதற்காக இந்த நூலைப் படிக்கலாம்.

*நூலாசிரியர் :* **பாரதி சின்னசாமி**
*வெளியீடு :* **எழில்மதி பதிப்பகம்,**
5/176, பூங்கா நகர் வடக்கு, தொப்பம்பட்டி (அஞ்சல்), கோவை - 641 017.

## செம்மொழி உள்ளும் புறமும்

பக். 104 ரூ.35

'தமிழ் செம்மொழி ஆக வேண்டும்' என்ற கோரிக்கை முதன்முதலில் எப்போது எழுந்தது, இதுநாள்வரை இக்கோரிக்கையைத் தடுத்து நிறுத்தியோர் யார், செம்மொழியாவதால் தமிழுக்கு ஏற்படக் கூடிய நன்மைகள் என்ன - என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிக்கிறார் ஆசிரியர். ஏற்கெனவே செம்மொழி அங்கீகாரம் பெற்றிருக்கும் வேறெந்த மொழியும், தமிழைப் போல செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிப்பாடுகளும் ஒருங்கே அமையப் பெற்றவை அல்ல என்று கூறும் ஆசிரியர், தமிழின் தனிச் சிறப்பை ஆதாரங்களுடன் எளிய நடையில் நிறுவுகிறார்.

*நூலாசிரியர் :*
**வளர்தமிழ்ச் செல்வர் மணவை முஸ்தபா**
*வெளியீடு :*
**அறிவியல் தமிழ் அறக்கட்டளை,**
AE 5, ஆறாவது தெரு, அண்ணாநகர்,
சென்னை - 600 040.

## சங்கர மடம் பற்றிய உண்மைகள்

பக். 119 ரூ.30

ஏற்கெனவே 'சங்கர மடத்துக்குச் சவுக்கடி' என்று 3 தொகுதிகள் எழுதியுள்ள நூலாசிரியர் இந்நூலில் காஞ்சி சங்கரமடம் அதிகாரபூர்வமானதல்ல என்றும் அதன் பின்னால் உள்ள பொய்க் கதைகள், அரசியல் அதிகார மட்டங்களின் பிணைப்புக்களைத் தொகுத்துத் தருகிறார்.

*நூலாசிரியர் :* **நாத்திகம் பி. இராமசாமி**
*வெளியீடு :* **நாத்திகம்,**
97/55, என்.எஸ். கிருஷ்ணன் சாலை,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

## மலிமத் குழு அறிக்கை - ஒரு பார்வை (குற்றவியல் நீதிமுறைச் சீர்திருத்தம் பற்றிய குழுவின் பரிந்துரைகள் மீது விமரிசனம்)

பக். 154 ரூ.50

"குற்றம் சாட்டப்பட்டவர்கள் தம்மை நிரூபித்துக் கொள்ள வேண்டும்" என்ற 'பொடா' சட்டத்தின் கோட்பாட்டையே மொத்த நீதி வழங்கும் முறைக்கும் விரிவுபடுத்தும் விபரீதமே மலிமத் குழு அறிக்கை. எனவே, இது ஒழித்துக் கட்டப்பட வேண்டிய இரண்டாவது 'பொடா'.

இந்நூல் மலிமத் குழு அறிக்கையை விமரிசிக்கிறது. இதன் முதல் பகுதி, பேராசிரியர் உபேந்திர பக்சியின் மலிமத் குழு மீதான விமரிசனத் தாக்குதல்; இரண்டாம் பகுதி, மலிமத் குழுவின் முறையியலைப் பற்றிய விமரிசனம்; மூன்றாம் பகுதி, மலிமத் குழுவின் பரிந்துரைகள் மனித உரிமைகளுக்கு நேர் எதிராக இருப்பது பற்றிய ஆய்வு.

*நூல் வெளியீடு :*
**மக்கள் கண்காணிப்பகம், தமிழ்நாடு,**
6, வல்லபாய் சாலை, சொக்கி குளம்,
மதுரை - 625 002.

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

**இந்த இதழுடன் (ஜூலை'04) முடியும்**
**சந்தா எண்கள்: 74, 140, 561, 67, 357**
**அடுத்த இதழுடன் (ஆகஸ்டு - செப்,'04) முடியும்**
**சந்தா எண்கள்: 6, 10, 945, 131, 320, 356, 843**

*குறிப்பு:* 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்தி விடவும். M.O. அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிய சந்தா செலுத்துவோர் 'புதிய சந்தா' என எழுதி தங்களது முழு முகவரியை பின்கோடு உள்ளிட்டுத் தெளிவாக அடிக்கட்டையில் குறிப்பிடவும். வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சல் முகவரியைத் தெரிவிக்கவும்.

## அறிவிப்பு

தவிர்க்கவியலாத காரணங்களால் அடுத்த இதழ் ஆகஸ்டில் வெளிவராது; ஆகஸ்டு - செப். இணைந்த இதழ் செப்டம்பரில் வெளிவரும்.


படிப்பகம்

www.padippakam.com

**கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர்: 22
- குரல்: 1-2
- ஜூன் - ஜூலை 2004

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-ஆவது நிழற்சாலை,
15-ஆவது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

தொலைபேசி: 044-23718706

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

*அட்டை ஓவியம்:*
**முகிலன்**

*அட்டை வடிவமைப்பு:*
**ஸ்பார்ட்டகஸ்**

## தமிழுக்குச் செம்மொழித் தகுதி:

# சமசுகிருதமயமாக்கத்துக்கெதிரான போராட்டத்தைத் தொடருவோம்!

**த**மிழைச் செம்மொழியென அறிவிப்பது நம் தாய்மொழிக்கு வழங்கப்படும் சிறப்புச் சலுகையோ, கவுரவமோ அல்ல. ஒரு வரலாற்று உண்மை இந்திய அரசால் அங்கீகரிக்கப்படுவதற்கு இத்தனைக் காலமாகியிருக்கிறது. உலகின் மொழிகளில் இலக்கணமும் இலக்கியங்களும் கொண்டவை சுமார் 300 மொழிகள். அவற்றில் 2000 ஆண்டுகளுக்கு மேல் தொன்மை படைத்த ஆறு மொழிகளில் ஒன்று தமிழ். மக்கள் மொழியாக என்றுமே இருந்திராத சமசுகிருதம், வழக்கொழிந்து பின்னர் உயிர்ப்பிக்கப்பட்ட லத்தின், கிரீக், ஹீப்ரு போன்ற செம்மொழிகளைப் போலன்றி ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாய் உயிர்த்துடிப்புடன் வாழும் மொழி தமிழ்.

செம்மொழிக்கான தகுதிகள் என்று கூறப்படும் அனைத்தையும் பெற்றிருந்தும், கி.மு. 200-ஆம் ஆண்டிலேயே இலக்கணம் (தொல் காப்பியம்) வகுக்கப் பெற்றிருந்தும், காளிதாசனுக்கு முன்னமே சங்க இலக்கியங்களைப் படைத்திருந்தும், திராவிட மொழிக் குடும்பத்தின் தாயாக இருந்தும், பிற திராவிட மொழிகளைப் போலன்றி சமசுகிருதமயமாக்கலைப் போர்க்குணத்துடன் எதிர்த்து நின்று தன் தனித்தன்மையைப் பேணியிருந்தும், தனக்குரிய இடத்தை இந்தியாவிலும், உலக அரங்கிலும் தமிழ் பெற முடியாததற்குக் காரணம் பார்ப்பன இந்து தேசிய அரசியல். 1880-ல், அதாவது ஆர்.எஸ்.எஸ். தோன்றுவதற்குப் பல பத்தாண்டுகள் முன்னமேயே, வைஸ்ராய் கர்சன் காலத்திலேயே தாய்மொழிப் பாடத்திற்குப் பதிலாக இந்தியாவெங்கும் சமசுகிருதத்தைப் பயிற்றுவிக்க பார்ப்பன தேசியக் கும்பல் முயன்றதையும், அதைத் தமிழகத்தின் மு.சி. பூரணலிங்கம் பிள்ளையும், 'பரிதிமாற் கலைஞர்' சூரிய நாராயண சாஸ்திரியும் முறியடித்து, தனது சமசுகிருத எதிர்ப்பு வரலாற்று மரபைத் தமிழ் நிலைநாட்டிக் கொண்டதையும் கூறுகிறார் திரு. மணவை முஸ்தபா. இந்திய மொழிகள் அனைத்துக்கும் சமசுகிருதமே தாய் எனக் கூறும் ஆர்.எஸ்.எஸ். கும்பல், தனது ஆட்சிக் காலத்தில் சமசுகிருதத்தைச் செம்மொழியென அறிவித்து, பரப்பவும் தொடங்கியதன் எதிர்வினையாக, தமிழ்ச் செம்மொழிக் கோரிக்கை ஒரு நூற்றாண்டுக்குப் பின் மீண்டும் உயிர்த்தது.

செம்மொழி அறிவிப்பை ஏளனம் செய்யும் சோ முதல், செம்மொழியானால் தமிழ் அரசியல் சட்டத்தின் 8-வது அட்டவணையிலிருந்து நீக்கப்படுமோ எனக் குதர்க்கமாக ஐயமெழுப்பும் இந்திரா பார்த்தசாரதி வரை, எதிர்ப்பாளர்கள் பல ரகம். சுமார் 4 நூற்றாண்டுகள் முன்னமே தமிழ் மேற்குலகின் கவனத்தை ஈர்த்துவிட்டதெனினும், தமிழின் வரலாற்றுப் பெருமையை உலகம் காணவொட்டாமல் தடுப்பதிலும் பார்ப்பன தேசியக் கும்பல் வெற்றி பெற்றுத்தானிருக்கிறது. எனவே, இக்கோரிக்கையின் பார்ப்பன தேசிய எதிர்ப்பு உள்ளடக்கம் பேணப்படுவதையே முதன்மையாக நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

சமசுகிருதத்தை மையப்படுத்தி நடத்தப்படும் வரலாற்று ஆய்வுகள், சுவடி மற்றும் கல்வெட்டு ஆய்வுகளைச் சமசுகிருதத்தின் வழிபார்ப்பது, இவற்றின் அடிப்படையில் தொகுக்கப்படும் வரலாறு - ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்குவதற்கு செம்மொழித் தகுதியினால் கிடைக்கும் நிதியும், பல்கலைக் கழக அங்கீகாரங்களும் பயன்பட வேண்டும். நிதி ஒதுக்கீடுகள் தோற்றுவிக்கக் கூடிய கல்வித்துறைப் பிழைப்புவாதம் சமசுகிருதத்துடனான (பார்ப்பனியத்துடனான) 'சமாதான சகவாழ்வை' ஆய்வுத் துறையிலும் பரப்பும். ஓட்டுப் பொறுக்கி அரசியலின் பிழைப்புவாதம் 'தமிழ் வளர்ச்சியை' ஒரு கவர்ச்சித்திட்ட முழக்கமாக மாற்றியதற்கு மேல் இதுகாறும் எதுவும் செய்யவில்லை. திராவிட மொழிகளின் தாய் தமிழ்தான் என்பதை நிறுவுவதற்கான சொல்லகராதிகளோ, தமிழிசை, இலக்கியக் களவுகளுக்கெதிரான நடவடிக்கைகளோ, தமிழ் வளர்ச்சிக்கு வழிகோலும் மொழிச் சீர்திருத்தம், புதிய இலக்கணம், அறிவியல் தமிழின் வளர்ச்சி ஆகியவையோ கல்வித்துறையளவில் கூட இதுவரை நடைபெறவில்லை. பார்ப்பனியத்துடன் சமரசம் செய்து கொள்ளும் அரசியல் பிழைப்புவாதமே இதற்கு முதற் காரணம்.

தமிழின் தொன்மையும் வரலாற்றுச் சிறப்புக்களும் தமிழ்ச் சமூகத்தின் சிறப்புக்கள். ஆனால், ஆங்கில மோகம், ஏகாதிபத்திய அடிமைத்தனம், பார்ப்பனமயமாக்கம் ஆகியவற்றால் பண்பாட்டு ரீதியாகப் பீடிக்கப்பட்டு இறையாண்மையும் தற்சார்பும் அற்றுப்போய், பிழைப்பு தேடி ஓடும் நாடோடிகளாகவும் பட்டினியால் மடியும் பரிதாபத்துக்குரியவர்களாகவும் வாழும் தமிழ் மக்களின் நிலை செம்மையானதன்று. உழைக்கும் தமிழர்க்கு உய்வின்றேல் தமிழுக்கும் உய்வில்லை! ●

படிப்பகம்

www.padippakam.com

# நாய்க்கடி மருந்துத் தட்டுப்பாடு: மருத்துவத் துறையைக் கவ்வும் ஏகாதிபத்திய வெறிநாய்

ஏகாதிபத்திய வெறிநாய்கள் என்று கூறுவதை வெறும் வசவு என்று கருத வேண்டாம். இந்த ஒப்புமை பொருளுள்ளது.

ஆண்டிப்பட்டியில் ஒரே வெறிநாய் 17 பேரைக் கடித்துவிட்டதாகச் சமீபத்தில் ஒரு செய்தி வெளிவந்தது. அமெரிக்க வெறிநாயிடம் கடிபட்ட நாடுகளோ கணக்கில் அடங்காதவை. பிலிப்பைன்ஸ், கியூபா, நிகராகுவா, கொரியா, வியத்நாம் என்ற நீண்ட பட்டியலில் கடைசியாக ஈராக்.

இருந்தாலும் இரு வெறிநாய்களுக்குமிடையில் சில வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. வெறி பிடித்த தெருநாய் வேண்டுமென்றே யாரையும் கடிப்பதில்லை. இன்னாரைக் கடிக்க வேண்டுமெனத் திட்டம் போட்டும் கடிப்பதில்லை. ஏகாதிபத்திய வெறிநாயோ தனது இலக்குகளைத் திட்டமிட்டுக் குதறுகிறது.

எல்லா நாய்களும் தவிர்க்கவியலாமல் வெறிநாய்களாக மாறுவதில்லை. கிருமித் தொற்று ஏற்பட்ட நாய்களுக்கு மட்டுமே வெறிபிடிக்கிறது. ஏகாதிபத்திய நாய்களுக்கு வெறி பிடிப்பதோ தவிர்க்கவியலாத விதியாக இருக்கிறது.

இத்தகைய வேறுபாடுகள் இருப்பினும் இந்த வெறிநாய்களுக்கிடையே வேறொரு ஒற்றுமையும் இருக்கத்தான் செய்கிறது. இரண்டு வெறிநாய்களுமே தவிர்க்கவியலாமல் மரணத்தைச் சந்திக்கின்றன. வெறி பிடித்த தெருநாய்கள் சும்மா விட்டாலும் தானே செத்துவிடுகின்றன. ஏகாதிபத்திய வெறி நாய்களையோ மக்கள் அடித்துக் கொல்ல வேண்டியிருக்கிறது.

''அமெரிக்க வெறிநாயை அடித்துக் கொல்ல முடியாது; வேறு மருந்தேதுமில்லை, அதனுடன் வாழப் (சாக) பழகிக் கொள்ள வேண்டும்'' என்கிறார்கள் பலர். கடிபட்ட ஈராக் மக்களோ அதனை எதிர்த்து அடிக்கிறார்கள்.

''அரசு மருத்துவமனைகளில் வெறிநாய்க் கடிக்கு மருந்தில்லை; சாகப் பழகிக் கொள்ளுங்கள்'' என்கிறது அரசு. மக்களோ மறுக்கிறார்கள். போராடுகிறார்கள்.

ஏகாதிபத்திய வெறிநாய்க்கும், வெறிபிடித்த தெருநாய்க்குமிடையில் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. எனினும் இது உவமானத்தை நிறுவும் முயற்சியல்ல; 'வெறிநாய்க் கடிக்குத் தடுப்பு மருந்து இல்லாமல் போனதற்குக் காரணமும் ஏகாதிபத்திய வெறிநாய்க் கடியே' என்ற உண்மையை நிறுவும் முயற்சி.

●●●

பற்றாக்குறைகளுடன் வாழ்வதற்கு நாம் பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறோம்; சாவதற்குப் பழக்கப்படுத்தப்படுகிறோம்.

''வெறிநாய்க்கடி மருந்து இல்லை'' என்ற அறிவிப்பு தமிழகத்தின் எல்லா அரசு மருத்துவமனை வாயில்களிலும் இப்போது தொங்குகிறது. கடந்த மார்ச் மாதம் சென்னை குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் நாய்க்கடி மருந்து இல்லையென்று நோயாளிகள் திருப்பியனுப்பப் பட்டனர்; மே மாதம் சென்னை கே.கே. நகர் புறநகர் மருத்துவமனையில் இதே நிலை; ஜூன் 10-ஆம் தேதி திருநெல்வேலி மருத்துவமனை வாயிலில் மக்களின் சாலை மறியல் போராட்டம்; ஜூன் 13-ஆம் தேதி ஆண்டிப்பட்டியில் ஒரே வெறிநாய் 17 பேரைக் கடித்தது; மருந்தில்லை என்று மருத்துவமனை நிர்வாகம் மக்களை விரட்டியடித்தது; அங்கேயும் போராட்டம்.

சென்னை மாநகரில் மட்டும் நாய்க் கடிக்காக ஊசி போட்டுக் கொள்ள வருபவர்கள் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 1000 பேர். புறநகர் மருத்துவமனைகளில் மருந்தில்லை. எல்லோரும் பொது மருத்துவமனைக்கு விரட்டப்படுகின்றனர். அங்கேயும் மருந்துத் தட்டுப்பாடு. முதலில் வந்த 25,30 பேருக்குத்தான் ஊசி போடப்படும் என்பதால், அதிகாலை 3 மணி முதலே கையில் பிள்ளையுடன் வரிசையில் நிற்கிறார்கள் தாய்மார்கள். இடம் பிடிப்பதற்காக முதல் நாள் இரவே மருத்துவமனை வாயிலில் படுத்துறங்குவோரும் உண்டு.

நாய்க்கடி படுபவர்களில் 80 சதவீதம் பேர் 15 வயதுக்குட்பட்டவர்கள் என்கிறது உலக சுகாதார நிறுவனத்தின் வலைத்தளம். கடிபடுவோரின் வயதைச் சொல்லும் உலக சுகாதார நிறுவனம், வர்க்கத்தைச் சொல்வதில்லை. பங்களா நாய்களால் பாதுகாக்கப்படும் வர்க்கம் தெரு நாய்களால் கடிக்கப்படுவதில்லை. இந்த உண்மையை நாம் எந்த வலைத் தளத்திலும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதுமில்லை.

நடைபாதைவாசிகள், குடிசைவாழ் மக்கள், நள்ளிரவில் வீடு திரும்பும் உழைப்பாளிகள்... இவர்கள்தான் வெறிநாய்களின் இலக்குகள். எனவே, அரசு மருத்துவமனை வாயில்களில் நாம் காணும் அழுகையும் பரிதவிப்பும் ஏழைகளுடையவை; ஏழைகளுடையவை மட்டும்தான்.

பெரியாஸ்பத்திரிகளின் வாசலை ஏழை மக்கள் தம் கண்ணீரால் அன்றாடம் கழுவுவது புதிதில்லை. லஞ்சம் கொடுக்கக் காசில்லாமல், ஆஸ்பத்திரியில் இல்லாத மருந்தை வெளியில் வாங்கிவரக் காசில்லாமல், சாகக் கிடக்கும் நோயாளிக்குப் படுக்கை கிடைக்காமல்... என்று கண்ணீருக்குப் பல காரணங்கள்.

மருந்தில்லை, ஊசியில்லை, கட்டுத் துணியில்லை, பிணம் தைக்க நூலில்லை யென அரசு மருத்துவமனைகள் கைவிரிப்பதும் புதிதில்லை - காரணம், 'கஜானாவில் காசில்லை'. மருத்துவம் உள்ளிட்ட மக்கள் நலத்திட்டங்களுக்கு பட்ஜெட்டில் ஒதுக்கீடு இல்லை.

ஆனால் வெறிநாய்க்கடி மருந்து

**ஏற்கெனவே போடப்பட்டு வரும் நாய்க்கடிக்கான மருந்து தரமற்றது என்ற 'அரிய' உண்மையைத் தமிழக அரசோ, மத்திய அரசோ கண்டுபிடிக்கவில்லை. உலக சுகாதார நிறுவனம்தான் 'கண்டுபிடித்து'க் கூறியிருக்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com

'இல்லை' என்பதற்கு அரசு கூறும் காரணமோ வேறு. "இதுநாள்வரை உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட, மலிவான (எனவே, தரம் தாழ்ந்த) வெறிநாய்க் கடி மருந்தை நோயாளிகளின் தொப்புளைச் சுற்றிக் குத்திக் கொண்டிருந்தோம். இனி உலகத்தரம் வாய்ந்த மருந்தை மட்டுமே மக்களுக்கு வழங்க விரும்புகிறோம். எனவே மருந்தில்லை" என்கிறது அரசு.

"ரொட்டி கிடைக்கவில்லையா, மக்கள் கேக் சாப்பிடலாமே" என்று கூறினாளாம் பிரெஞ்சு மன்னன் 14-ஆம் லூயியின் மனைவி மேரி ஆன்டனாய்ட். புரட்சித் தலைவியின் அரசு அதையே திருப்பிப் போடுகிறது: "நாங்கள் மக்களுக்கு கேக் மட்டுமே வழங்க விரும்புகிறோம்; எனவே ரொட்டி இல்லை."

"போட்டால் பாஸ்மதி அரிசி - ரேசன் அரிசியை நிறுத்து", "கொடுத்தால் கின்லே வாட்டர் - நகராட்சிக் குடிநீர் லாரியை நிறுத்து", "படித்தால் கான்வென்டு படிப்பு - பஞ்சாயத்துப் பள்ளியை மூடு", "படுத்தால் அப்போலோ ஆஸ்பத்திரி - அரசு ஆஸ்பத்திரியை மூடு" என்று எல்லாத் துறைகளுக்கும் அரசாங்கத்தின் இந்தக் கொள்கையை மொழி பெயர்க்கலாம்.

மக்களுக்கு வழங்கப்படும் சேவையின் தரம் குறித்த அரசாங்கத்தின் இந்த திடீர்க் கவலை மருத்துவத்தைத் தனியார்மயமாக்குவதற்கான வஞ்சக வலை. ஏற்கெனவே போடப்பட்டு வரும் நாய்க்கடிக்கான மருந்து தரமற்றது என்ற 'அரிய' உண்மையைத் தமிழக அரசோ, மத்திய அரசோ கண்டுபிடிக்கவில்லை. உலக சுகாதார நிறுவனம்தான் 'கண்டுபிடித்து'க் கூறியிருக்கிறது.

லூயி பாஸ்டர் காலத்திலிருந்து இன்று வரை பயன்படுத்தப்பட்டு வரும் 'நரம்புத் திசு தடுப்பு மருந்து' (Nerve Tissue Vaccine) ஆட்டின் மூளையில் ராபீஸ் கிருமியைச் செலுத்தித் தயாரிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே தயாராகும் இந்த மருந்தின் விலை ரூ. 4. நோயாளியின் தொப்புளைச் சுற்றிப் போடப்படும் இந்த ஊசி மருந்து வயிற்றுவலி, அரிப்பு, தசைப்பிடிப்பு, மயக்கம் போன்ற பல பக்கவிளைவுகளை ஏற்படுத்துகிறது என்றும், எனவே இது உடனே தடை செய்யப்பட வேண்டுமென்றும் கூறுகிறது உலக சுகாதார நிறுவனம்.

இதற்கென்ன ஆதாரம்? இந்த ஊசி போட்டுக் கொண்ட 1600 பேரில் *ஒருவருக்கு* பக்கவிளைவுகள் ஏற்பட்டுள்ளது என்றும், 1.5 லட்சம் பேரில் *ஒருவர்* இந்தப் பக்கவிளைவுகளால் இறந்து போவதாகவும் கூறுகிறது உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை.

இதற்கு மாற்று? நவீன முறையில் மனிதத் திசுக்கள் மூலம் தயாரிக்கப்படும் மருந்து — ஒரு ஊசிக்கான செலவு ரூ. 350 முதல் ரூ. 750 வரை. நாய்க்கடி பட்டவர் 5 அல்லது 6 ஊசி போட்டுக் கொள்வது கட்டாயம் என்பதால், நாய்க்கடி பட்டவரின் உயிருக்கு உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்துள்ள விலை சுமார் 5000 ரூபாய்.



லூயி பாஸ்டர் காலத்திலிருந்து இன்று வரை பயன்படுத்தப்பட்டு வரும் 'நரம்புத் திசு தடுப்பு மருந்து' (Nerve Tissue Vaccine) ஆட்டின் மூளையில் ராபீஸ் கிருமியைச் செலுத்தித் தயாரிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே தயாராகும் இந்த மருந்தின் விலை ரூ. 4. இந்த ஊசி மருந்தை உடனே தடை செய்யப்பட வேண்டும் என்று கூறுகிறது உலக சுகாதார நிறுவனம்.

ஆட்டு மூளை மருந்தின் பக்க விளைவுகள் குறித்து உலக சுகாதார நிறுவனம் காட்டும் பூச்சாண்டியை மறுக்கிறார்கள் இந்திய மருத்துவர்கள். "புதிய மருந்து உட்பட எல்லா மருந்துகளுக்கும் பக்க விளைவு உண்டு; பழைய மருந்தின் பக்கவிளைவுகளை சாதாரண காய்ச்சல் தடுப்பு, வலிநீக்கி மாத்திரைகளால் குணமாக்கி விடுகிறோம்" என்கிறார் டாக்டர் அகர்வால். (சப்தர்ஜங் அரசு மருத்துவமனை, புதுதில்லி).

இந்தியாவின் அரசு மருத்துவமனைகளில் வெறிநாய்க்கடிக்கு சிகிச்சை பெற்ற எத்தனை நோயாளிகள் இறந்தனர், எத்தனைப் பேருக்குப் பாரிய பக்க விளைவுகள் ஏற்பட்டன என்ற விவரம் எதுவும் அரசால் திரட்டப்படவில்லை. இந்திய மருத்துவக் கவுன்சிலும் இது பற்றி எதுவும் கூறவில்லை. உலக சுகாதார நிறுவனம் ஆணையிட்டது; உடனே தமிழகம் உள்ளிட்ட பெரும்பான்மையான மாநிலங்களில் இந்தத் 'தடை' அமலுக்கு வந்துவிட்டது.

'மக்கள் நலன்' மீதான இந்த **அக்கறை**க்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, உலக நாடுகளிலேயே இந்தியாதான் தெருநாய்களின் சொர்க்கம். இங்கே தெருநாய்களின் எண்ணிக்கை 2.5 கோடி. உலகளவில் நாய்க்கடி படுவோரில் 85% பேர் இந்தியர்கள். உலகளவில் ராபீஸ் நோயால் ஆண்டுதோறும் இறப்போர் 40,000 பேர். இதில் இந்தியாவில் மருத்துவமின்றி ஒவ்வொரு ஆண்டும் சாகிறவர்கள் 35,000 பேர். அரசு மருத்துவமனைகளில் ஒவ்வொரு ஆண்டும் வெறிநாய்க்கடிக்காக ஊசி போட்டுக் கொள்வோர் 35 லட்சம் பேர். இவையனைத்தும் உலக சுகாதார நிறுவனம் வழங்கும் புள்ளிவிவரங்கள்.

இதுநாள் வரை பன்னாட்டு மருந்துக் கம்பெனிகள் இந்தியாவில் விற்பனை செய்யும் வெறிநாய்க்கடி மருந்தின் சந்தை மதிப்பு 100 கோடி ரூபாய். 35 லட்சம் புதிய வாடிக்கையாளர்களைப் (அரசு மருத்துவமனையின் நோயாளிகள்) பிடித்தால் ஆண்டு விற்பனை சுமார் 2000 கோடியாக உயரும். மருந்தின் தரம் குறித்த உலக சுகாதார நிறுவனத்தின் அக்கறைக்கு இது முதல் காரணம்.

"2006-ஆம் ஆண்டிற்கு முன் 'ஆட்டு மூளை மருந்து' முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டு விட வேண்டும்" என்று நிர்ப்பந்திக்கிறது உலக சுகாதார நிறுவனம். இந்த **அவசரத்திற்கும்** காரணமுண்டு.

ஆட்டு மூளை மருந்திற்கான மாற்றுத் திசு மருந்தும் தற்போது இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகிறது. மனித உயிரியல் கழகம் (Human Biologicals Institute) எனும் அரசு நிறுவனம் தயாரிக்கும் 'அபய்ராப்' எனும் தடுப்பு மருந்து இந்தியாவின் தேவையில் சுமார் 30 சதவீதத்தை நிறைவு செய்கிறது. 100 சதவீதத் தேவையையும் நிறைவு செய்வதாக

www.padippakam.com

வும், மருந்தின் விலையை மேலும் குறைப்பதாகவும் இந்நிறுவனம் அறிவித்துள்ளது. தற்போது பல அரசு மருத்துவமனைகளில் போடப்படும் ஊசி இதுதான். இந்த 'அபய்ராப்' ஊசி மருந்து ஒன்றிற்கு அரசு கொடுக்கும் விலை ரூ. 138. பன்னாட்டு நிறுவன மருந்தின் சந்தை விலை ரூ. 350.

எனினும் இந்த மருந்துத் தயாரிப்புக்குத் தேவையான மூலப் பொருட்களுக்கு அமெரிக்க, பிரெஞ்சு பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளைச் சார்ந்திருக்கிறது இந்த அரசு நிறுவனம்.

2005-ஆம் ஆண்டு முதல் அமலுக்கு வரவிருக்கும் உலக வர்த்தகக் கழகத்தின் அறிவுச் சொத்துடைமை விதிகள் (TRIPS) காரணமாக இந்த இறக்குமதி சாத்தியமற்றுப் போகக்கூடும். இம்மருந்தின் ஏகபோக உற்பத்தியாளர்களான 3 பன்னாட்டு நிறுவனங்கள், (ஸைடஸ் காடிலா, அவந்திஸ் பாஸ்டர், அவஸ்திஸ் பார்மா) இந்தியச் சந்தையை - அதாவது உலகச் சந்தையின் 85 சதவீதத்தைக் கைப்பற்றும். ஒவ்வொரு ஆண்டும் வெறிநாய்க்கடிக்கு இலக்காகும் 35 லட்சம் இந்தியர்களின் உயிர் பன்னாட்டு நிறுவனங்களிடம் அடமானம் வைக்கப்படும்.

உலக மக்களின் நோயற்ற நல் வாழ்வை மட்டுமே தனது இலட்சியமாகக் கொண்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் உலக சுகாதார நிறுவனம், பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளின் விற்பனைப் பிரதிநிதி - விளம்பரதாரர். சரியாகச் சொன்னால், ஐந்தாம் படை.

ஈராக்கை பேரழிவு ஆயுதங்களின் கிடங்காகச் சித்தரித்து, சோதனை நடத்தி அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஆதரவான பொதுக் கருத்தை உருவாக்கும் ஐந்தாம் படையாக ஐ.நா. செயல்பட்டதைப் போலவே உலக சுகாதார நிறுவனமும் செயல்படுகிறது.

பக்கவிளைவுகள் உத்திரவாதம் செய்யப்பட்ட சிகரெட் உற்பத்தியையும், ஆயத்த உணவு வகைகளையும், ஆங்கில மருந்துக் கடைகளில் நிரம்பியிருக்கும் தடை செய்யப்பட்ட அபாயகரமான மருந்துகளையும் கண்டு கொள் ளாத உலக சுகாதார நிறுவனம் நாய்க்கடி மருந்தின் தரம் குறித்து பெரிதும் கவலைப்படுவதன் ரகசியம் இதுதான்.

> ஆட்டு மூளையிலிருந்து தயாரிக்கப்படும் நாய்க்கடி மருந்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடை என்பது தரமற்ற மருந்துகளை ஒழிக்கும் முயற்சியல்ல; 5000 ரூபாய் கொடுத்து நாய்க்கடி மருந்து வாங்கமுடியாத, *தரமற்ற மக்களை* ஒழித்துக் கட்டும் சதி.

எனவே ஆட்டு மூளையிலிருந்து தயாரிக்கப்படும் நாய்க்கடி மருந்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடை என்பது தரமற்ற மருந்துகளை ஒழிக்கும் முயற்சியல்ல; 5000 ரூபாய் கொடுத்து நாய்க்கடி மருந்து வாங்க முடியாத, **தரமற்ற மக்களை** ஒழித்துக் கட்டும் சதி.

எனினும் கருணையற்ற இந்தக் கொலையை கருணைக் கொலையாகக் காட்டுவதற்குக் களத்தில் இறங்கியிருக்கிறது உலக வங்கி. ''கல்வி, மருத்துவம், மின்சாரம், விவசாயம் ஆகிய எதற்கும் அரசு மானியம் கூடாது'' என்று ஆணையிடும் உலக வங்கி, பன்னாட்டு நிறுவனங்களிடம் வெறிநாய்க்கடி மருந்து வாங்குவதற்குக் கடன் தரத் தயாராக இருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் 204 அரசு மருத்துவமனைகளில் ஜன 2004 முதல் 'உலக வங்கி வழங்கும் நாய்க்கடி மருந்து' மக்களுக்குப் போடப்படுகிறது.

மாநில பட்ஜெட்டில் சுகாதாரத்துக்கான மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்கை நாய்க்கடி மருந்துக்கே செலவிட வேண்டியிருக்கும் என்கிறது கர்நாடக அரசு. சென்னை குரோம்பேட்டை மருத்துவமனையின் ஊழியர் சம்பளம் முதல் மருந்துகள் வரை அனைத்துக்குமான ஆண்டு ஒதுக்கீடு ரூ. 25 லட்சம். புதிய நாய்க்கடி மருந்து வாங்குவதாக இருந்தால் அதற்கு ஆகக் கூடிய செலவு மட்டும் ரூ. 40 லட்சம். இந்தக் கணக்கின்படி, அரசு பட்ஜெட்டில் சுகாதாரத்துக்கான ஒதுக்கீடு அனைத்தையும் ஏகாதிபத்திய வெறிநாய்களே கவ்விவிடும்.

இனிமேல், வெறிநாய்க்கடி படும் ஏழைகள், கந்துவட்டிக்குக் கடன் வாங்கி காசை வெளிநாட்டுக் கம்பெனியிடம் கொடுக்க வேண்டும். அல்லது அரசாங்கம் உலக வங்கியிடம் கடனுக்கு மருந்து வாங்கினால், அந்தக் கடனை மறைமுக வரிகள் மூலம் மக்களே அடைக்க வேண்டும்.

''தலை விழுந்தால் எனக்கு வெற்றி; பூ விழுந்தால் உனக்குத் தோல்வி'' என்பதே இந்த பூவா தலையா ஆட்டத்திற்கு ஏகாதிபத்தியங்கள் வகுத்திருக்கும் விதி.

இந்த விதியை யாரும் கேள்விக்கு உள்ளாக்கவில்லை. ராணி மேரிக் கல்லூரியை இடித்து தலைமைச் செயலகம் கட்டும் விவகாரத்தில் மத்திய அரசின் தலையீட்டை எதிர்த்த 'புரட்சித் தலைவி', ''ஊராட்சிகளுக்கு மத்திய அரசு நேரடியாக நிதி ஒதுக்கி எங்களை ஓரங்கட்டுவதா?'' என மாநில அரசின் உரிமைக்குக் குரல் கொடுக்கும் 'புரட்சித் தலைவி', உலக சுகாதார நிறுவனம் மாநில அரசுக்கு நேரடியாக ஆணையிடுவதை எதிர்க்கவில்லை. நேற்றைய பா.ஜ.க. அரசும், இன்றைய அமைச்சர் சின்னய்யா அன்புமணியும் கூட இதை எதிர்த்து

### சென்னை கிங் இன்ஸ்டிடியூட்:

## அரசால் கொல்லப்படும் அரசு நிறுவனம்!

சென்னை மாகாணத்தின் சுகாதார ஆணையராக இருந்த லெப்டினன்ட் கர்னல் கிங் என்ற ஆங்கிலேயரால் 1899-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை கிங் இன்ஸ்டிடியூட் மருத்துவ ஆய்வில் பெரும்பங்காற்றியிருக்கிறது. அம்மை நோய், காலரா, டைஃபாய்ட், மஞ்சள் சுரம், டெடனஸ், வெறிநாய்க்கடி, பாம்புக்கடி போன்ற பலவற்றிற்கும் தடுப்பு மருந்துகளையும், முறிவு மருந்துகளையும் இக்கழகம் தயாரித்துள்ளது.

ஆட்டு மூளையிலிருந்து தயாரிக்கப்படும் வெறிநாய்க்கடி மருந்தின் உற்பத்தி தற்போது தடை செய்யப்பட்டுள்ளதால் திசு முறையில் இம்மருந்தைத் தயாரிக்கிறது இந்நிறுவனம். இம்மருந்தைப் பெருமளவில் (large scale) உற்பத்தி செய்தால் விலையைக் குறைக்க முடியும். ஆனால் அதற்குத் தேவையான மூலதனத்தை வழங்க அரசு மறுக்கிறது. ஊழியர்களின் எண்ணிக்கை 700-லிருந்து 397 ஆகக் குறைக்கப்பட்டு விட்டது. இந்நிறுவனத்துக்கு ஒரு ஆண்டுக்கு ஒதுக்கப்படும் நிதி ரூ. 7.76 கோடி. இதில் ஊழியர்களுக்கான சம்பளத்திற்கே ரூ. 4 கோடி போய் விடுவதால் ஆய்வு மற்றும் உற்பத்திப் பணிகள் முடங்கி வருகின்றன.

இந்த அநீதிகள் போதாதென்று, தன் விரலைக் கொண்டே தன் கண்ணைக் குத்திக் கொள்ள கிங் இன்ஸ்டிடியூட்டை நிர்பந்திக்கிறது அரசு. தடுப்பு மருந்துத் தயாரிப்பில் தனியார் முதலாளிகளைப் பயிற்றுவிக்குமாறு இந்நிறுவனத்தை நிர்ப்பந்திக்கிறது.

எனவே மருந்தின் தரம் என்ற பேச்சு ஒரு தந்திரம். அது தனியார் முதலாளிகளின் கொள்ளைக்கு ஒரு முகாந்திரம்!



படிப்பகம்

வாய் திறக்கவில்லை.

ஏனென்றால், இவர்கள் ஏகாதிபத்திய வெறிநாய்கள் ஒதுக்கித் தள்ளும் எலும்புத் துண்டுகளைக் கடித்தவர்கள் மட்டுமல்ல, அந்த வெறிநாய்களால் சித்தாந்த ரீதியாகவே கவ்வப்பட்டவர்கள்.

வெறிநாயின் எச்சில் இரத்தத்தில் கலந்தால் அது கடிபட்ட மனிதனின் மத்திய நரம்பு மண்டலத்தைத் தாக்குகிறது. ஏகாதிபத்திய வெறிநாய்க்கடியும் மூளையைத்தான் தாக்குகிறது. காய்ச்சல், பரபரப்பு, தசை இறுக்கம் போன்ற நோய்கள் வெறிநாய்க்கடிபட்ட மனிதனை ஆட்டிப்படைப்பதைப் போலவே, தரம், சந்தை, லாபம் என்ற சொற்கள் இவர்களை ஆட்டிப் படைக்கின்றன. இதற்குத் தடுப்பு மருந்து எதுவும் இல்லை.

வெறிநாய்க்கடிக்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்த பிரெஞ்சு மருத்துவ விஞ்ஞானி லூயி பாஸ்டர் அந்த மருந்தை ஒரு மனிதனின் மீது செலுத்திச் சோதித்துப் பார்க்கப் பெரிதும் தயங்கினாராம். மனித உயிரின் மீது அவர் கொண்டிருந்த மதிப்பிற்கு அது சான்று. இன்று பன்னாட்டு நிறுவனங்கள் திணித்திருக்கும் இந்தத் தடை மனித உயிர்கள் மீது அவர்கள் கொண்டிருக்கும் வெறுப்புக்குச் சான்று. லூயி பாஸ்டரின் மருந்து கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் வெறிநாய்க்கடி பட்டவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள், அல்லது மற்றவர்களால் அடித்துக் கொல்லப்பட்டார்கள். அத்தகைய இருண்ட காலத்திற்குள் மக்களைத் தள்ளுகின்றன ஏகாதிபத்தியங்கள்.

1885 ஜூலை 6-ம் தேதி ஜோசப் மெய்சர் என்ற 9 வயதுச் சிறுவனின் உடலில் தனது மருந்தைச் செலுத்தி வெறிநாய்க்கடியிலிருந்து அவனைக் குணமாக்கினார் லூயி பாஸ்டர்.

வெறிநாய்க் கடியிலிருந்து உயிர் பிழைத்த உலகின் முதல் மனிதனான மெய்சர், லூயி பாஸ்டர் மறைந்த பின்னும் அவரது ஆய்வுக் கூடத்தின் காவலாளியாகப் பணியாற்றினார். 1940-இல் பாரிஸ் நகரை ஆக்கிரமித்த இட்லரின் படை, லூயி பாஸ்டரின் ஆய்வுக் கழகத்தில் நுழைந்தது. 'பிரெஞ்சு தேசத்தின் நாயகன்' என்று மக்களால் போற்றப்பட்ட லூயி பாஸ்டரின் உடலை கல்லறையிலிருந்து தோண்டியெடுத்து வெளியில் வீசுமாறு காவலாளி ஜோசப் மெய்சருக்கு ஆணையிட்டது.

பாசிஸ்டு வெறிநாய்களுக்கு அடிபணிய மறுத்த மெய்சர், பாஸ்டருடைய கல்லறையின் எதிரிலேயே தற்கொலை செய்து கொண்டார். அது கம்பீரமான மரணம்.

அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பைக் களவாடி, முடக்கி தமது லாப வெறிக்காக மக்களைத் தற்கொலைக்குத் தள்ளுகின்றன பன்னாட்டு நிறுவனங்கள்; ஜெர்மன் நாஜிகள் செய்ய முயன்ற அவமதிப்பைக் காட்டிலும், இழிந்த முறையில் அந்த மாபெரும் விஞ்ஞானியை அவமதிக்கின்றன.

தற்கொலை இதற்குத் தீர்வல்ல. இன்றும் நமது கிராமப்புறங்களில் வெறிநாய்களைக் கண்டால் உலக்கையால் அடித்துக் கொன்று விடுகிறார்கள். ஏகாதிபத்திய வெறிநாய்களுக்கும் பொருந்தக் கூடிய தீர்வு இதுதான்.

●●●

**குறிப்பு:** வெறிநாய்க்கடி என்ற நோயை முதன்முதலாக மனிதன் அடையாளம் கண்ட ஆண்டு கி.மு. 2300. இடம்: பாபிலோன் - அதாவது இன்றைய ஈராக். வெறிநாய்களுக்கும் ஏகாதிபத்திய வெறிநாய்களுக்குமிடையில் தான் எத்தனைப் பொருத்தங்கள்!

*செய்தித் தொகுப்பு:*
மேகலை, ஜென்னி, கார்மேகம்.

## நீலச்சிலுவைச் சங்கம்: நாய்க்குப் பிறந்தவர்களோ?

'நீலச்சிலுவைச் சங்கம் (Blue Cross) என்ற அமைப்பும், "விலங்குகள் மீதான சோதனைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தடை செய்தலுக்கான குழு" (CPCSEA) என்ற அமைப்பும் இந்த வெறிநாய்க்கடி மருந்து உற்பத்தியைத் தடை செய்வதில் பெரும் பங்காற்றியுள்ளன.

இம்மருந்து தயாரிப்புக்காக ஆண்டுதோறும் 30,000 ஆடுகள் இந்தியாவில் கொல்லப்படுகின்றனவாம். 35 லட்சம் மனித உயிர்களைக் காட்டிலும் 30,000 ஆடுகளின் உயிர் இவர்களுக்கு முக்கியம்.

இதேபோல கிங் இன்ஸ்டிடியூட்டில் தயாரிக்கப்பட்டு வந்த பாம்புக்கடி மருந்தையும் இந்தக் கும்பல் தடை செய்து விட்டது. இராணுவத்தில் சுட்டுக் கொல்லப்படும் பயன்படாத குதிரைகளை வாங்கி அவற்றின் உடலில் பாம்பின் நஞ்சைச் செலுத்தி, பிறகு குதிரையின் உடலில் உருவாகும் நோய் எதிர்ப்பு உயிரிகளைக் (anti-bodies) கொண்டு இந்த மருந்து தயாரிக்கப்பட்டு வந்தது. குதிரைகளுக்குக் கொடுமை இழைப்பதாகக் கூறி இம்மருந்து உற்பத்தி தடை செய்யப்பட்டு, இதற்கும் பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளிடம் கையேந்தும் நிலையை இக்கும்பல் உருவாக்கி விட்டது. ஆனால் "இந்நாட்டுப் பாம்புகளின் விஷத்தை பன்னாட்டுப் பாம்புக்கடி மருந்தால் முறிக்க முடியாது" என்று கூறுகிறார்கள் கிங் இன்ஸ்டிடியூட் மருத்துவர்கள். இந்தத் தடையால் பலியாகப் போகிறவர்கள் லட்சக்கணக்கான விவசாயிகள்.

கிங் இன்ஸ்டிடியூட் போன்ற ஆய்வு நிறுவனங்களில் போலீசை வைத்து 'ரெய்டு' நடத்தி செயல்பட விடாமல் முடக்கியதில் இந்தக் கும்பலுக்குப் பெரும்பங்கு உண்டு. இதற்கெல்லாம் சட்டரீதியான அதிகாரம் வழங்க ஏற்பாடு செய்தவர் பா.ஜ.க. அரசில் அமைச்சராக இருந்த மேனகா காந்தி — இவர்களின் தானைத் தலைவி.

ஜெயலலிதாவின் கிடாவெட்டுத் தடைச் சட்டம், யானைகள் ஓய்வுத் திட்டம், பள்ளி சோதனைச்சாலைகளில் எலி, தவளை அறுக்கத் தடை, சென்னை நகர பால் வியாபாரிகளின் மாடுகளை வெளியேற்றும் திட்டம் ஆகிய எல்லா மக்கள் விரோத நடவடிக்கைகளிலும் தங்கள் பங்கு இருப்பதைப் பெருமையுடன் பிரகடனம் செய்கிறது இந்தக் கும்பல். தெருநாய்களைக் கொல்லக்கூடாது என்பதற்காக, அவற்றுக்கு 'குடும்பக் கட்டுப்பாடு' செய்ய ஒரு குளுகுளு வசதி செய்யப்பட்ட ஊர்தியையும் இயக்கி வருகிறது.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடும் வள்ளலாரைப் போல நடிக்கும் இந்த மிருகாபிமான மேட்டுக்குடி வர்க்கம் மிருகங்கள் முதல் மனிதக் கரு வரை அனைத்தையும் பயன்படுத்தி அழகு சாதனங்கள் தயாரிக்கும் அந்நியக் கம்பெனிகளுக்கு எதிராக எப்போதும் போராடியதில்லை. இவர்களுடைய முகத்தையும் உதட்டையும் அலங்கரிப்பவையே அவைதான்.

அரியானாவில் கோமாதாவைக் கொன்றதற்காக 5 தலித்துகளை வெட்டிக் கொன்ற வர்க்கம்தான், நாய்களுக்கும் ஆடுகளுக்கும் கண்ணீர் விடும் புளூ கிராஸ் வர்க்கம். இது மிருக அபிமானமல்ல, மறுகாலனியாக்கமும் மனு நீதியும் இணைந்த மக்கள் வெறுப்பு! ●



www.padippakam.com

www.padippakam.com



# கல்வி: தனியார்மயக் கனவு கலைகிறது

ஒரு பெருநகர பாதாள சாக்கடைக் குழாய்கள் அடைத்துக் கொண்டு, தெருக்களிலெல்லாம் கழிவுநீர் பெருக்கெடுத்து ஓடுவதைப் போல உயர்நிலை, தொழிற்கல்வித் துறை நெருக்கடியில் சிக்கி நாற்றமடிக்கிறது. தமது உடுப்பிலோ, உடம்பிலோ சிறிதளவு சாக்கடை நீர் பட்டுவிட்டாலே துடிதுடித்துப் பதறிப் போகும் மெத்தப்படித்த மேல்நிலை நடுத்தர வர்க்கத்தினர், இந்தச் சாக்கடைக் கழிவுநீரில் தங்களது குலவாரிசுகளுடன் துணிந்து இறங்கி விட்டார்கள். கழிவுநீர்க் குட்டையானாலும் அவர்களை இழுத்துக் கொண்டு போய் எப்படியாவது பொறியியல் வல்லுநர்களாக்கி, மருத்துவ மேதைகளாக்கி, மேலை நாடுகளுக்கு வழியனுப்பி விட எத்தனிக்கிறார்கள்.

மேல்நிலைப்பள்ளி (+2) இறுதித் தேர்வை இரண்டாவது, மூன்றாவது முயற்சியாக எழுதி கூடுதல் மதிப்பெண்கள் பெற்று தரவரிசையில் முந்திக் கொள்பவர்கள் (இம்ப்ரூவ்மெண்ட் தேர்வு எழுதிய மாணவர்கள்) அதிக எண்ணிக்கையில் சேர்க்கப்படுகிறார்கள். இதை எதிர்த்த வழக்கு விசாரணையில் இருக்கும்போதே, மற்றவர்களைத் தரவரிசைப்படி சேர்ப்பதற்கான கவுன்சிலிங் நடத்த உயர்நீதி மன்றம் இடைக்கால அனுமதி அளித்தது.

அதற்கான 'கவுன்சிலிங்' தொடங்கிய சில நிமிடங்களில், 'இம்ப்ரூவ்மெண்ட்' மாணவர்கள் பெற்றோர்களுடன் மருத்துவக் கல்வி இயக்குநரகத்துக்குள் புகுந்து முழக்கமிட்டனர். ''இந்த மாணவர்களின் தலைவிதி மீது முடிவெடுங்கள்; பிறகு கவுன்சிலிங் நடத்துங்கள்'' என்று கூச்சலிட்டனர். ஏழு மாணவர்களுக்கு மட்டுமே கவுன்சிலிங் நடந்தது. அப்புறம் எல்லாம் தடுக்கப்பட்டது. எல்லோரும் கோர்ட்டுக்குப் போகும்படி அலுவலர்கள் விரட்டினர்.

இம்ப்ரூவ்மெண்ட் தேர்வு மூலம் தரவரிசை பெற்ற மாணவனின் தந்தை, மதுரையைச் சேர்ந்த ஒரு பொறியியலாளர், ''நான் எந்த ஒரு கோர்ட்டுக்கும் உள்ளே போய்ப் பார்த்தது கூடக் கிடையாது. சினிமாவிலும் தொலைக்காட்சித் தொடரிலும்தான் வக்கீல்களைப் பார்த்திருக்கிறேன். இப்போது, 'போ, சென்னையில் ஒரு வக்கீலைப் பார்' என்று என்னிடம் சொல்கிறீர்கள், நான் எங்கே போவேன்'' என்று அலறுகிறார்.

நீதிமன்றத்துக்குப் போவதில் நம்பிக்கை இழந்த பெற்றோரும் மாணவர்களும், திடீரென்று ஆத்திரமடைந்து மருத்துவக் கல்வி இயக்குநரகத்துக்கு வெளியே வந்து சாலை மறியலில் குதிக்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வரவில்லை. அமைச்சர் வரவில்லை. வண்டி, வண்டியாகக் குண்டாந்தடிகளுடன் போலீசுப் படைதான் வந்தது. சாலைமறியல் செய்தவர்களைச் சூழ்ந்து கொண்டு, ''தெருவில் இறங்குவது பிரச்சினைகளைத் தீர்க்காது, மேலும் மோசமாக்கத்தான் செய்யும், போய்விடுங்கள்'' என்று நயந்தும், மிரட்டியும் விரட்டினார்கள். பெற்றோர்களும், மாணவர்களும் மீண்டும் இயக்குநரக வளாகத்துக்குத் திரும்பினர். பலமணிநேரம் தங்களுக்குள் புலம்பிக் கொண்டும், 'விதி'யை நொந்து கொண்டும் செய்வதறியாமல் வெறுமனே காத்திருந்து விட்டுத் திரும்பினர்.

'இம்ப்ரூவ்மெண்ட்' மாணவர் சேர்க்கைக்கு எதிரான வழக்கு விசாரணையின்போது எப்படியாவது நீதிதேவதையின் கவனத்தை ஈர்த்து கருணையைப் பெற்றுவிடும் முயற்சியாக ''மைலார்ட், மைலார்ட்'' என்று மாணவர்களும் பெற்றோர்களும் கூச்சல் போட்டனர். கருணைக்குப் பதில், ஆத்திரம் பொங்கத் தலைமை நீதிபதி, ''அரசு வக்கீல் பேசும்போது எந்த வக்கீலுமே குரல் எழுப்பக் கூடாது; நீங்கள் அவர்களுக்கும் கீழானவர்கள். தொலைத்துப் புடுவேன்!.... தொலைத்து! நீங்கள் நினைத்தபடி பேசுவதற்கு இது என்ன உங்கள் கல்லூரியா? இது முதன்மை அமர்வு கோர்ட். இதற்கென்று ஒரு கண்ணியம் இருக்கிறது'' என்று மிரட்டினார்.

வெளியே வந்து செய்தியாளர்களிடம் பேசிக் கொண்டிருந்தனர், பெற்றோர்கள். அவர்களில் ஒருவரை திடீரென்று அறைந்து தாக்கினார்கள், இளநிலை வழக்கறிஞர்கள். மிரண்டு போய், விக்கித்து நின்றார் அவரது மகள்.

இவையெல்லாம் அவர்களுக்குப் புது அனுபவங்கள். குடிதண்ணீர் கேட்டோ, ஒரு லாக்-அப் கொலையால் ஆத்திரமுற்றோ சாலைமறியலில் ஈடுபடும் மக்களைப் பார்த்து இந்த மெத்தப் படித்த மேல்நிலை நடுத்தர வர்க்கம் எப்படி நடந்து கொண்டிருக்கிறது? ஏதாவது கோரிக்கைக்காக நடக்கும் கடையடைப்பு, பொது வேலை நிறுத்தத்துக்கு இவர்களின் எதிர்வினைதான் என்ன? இவர்கள் அலுவலகங்களுக்கு நேரத்திற்குப் போக முடியவில்லை என்றதும் ''இவன்களுக்கு வேறு வேலையில்லை; எதற்கெடுத்தாலும் சாலைமறியல் போராட்டம்தான். இவன்களால்தான் நாடே கெட்டுப் போகிறது. இவன்களையெல்லாம் இழுத்துக்கிட்டுப் போய் முட்டிக்கு முட்டி தட்டி உள்ளே தள்ளணும், சுட்டுப் பொசுக்கணும்!'' என்று ஆத்திரத்தோடு பொங்குகிறார்கள்.

www.padippakam.com

போலீசு, லாக்-அப், கோர்ட் இவையெல்லாம் எந்த ஒழுங்கில் இயங்குகின்றன? இங்கெல்லாம் கொஞ்சமாவது மரியாதை, மனிதத்தன்மை இருக்கிறதா என்று இந்த மெத்தப்படித்த மேல்நிலை நடுத்தர வர்க்கத்தினர் அறிவார்களா? அடுத்தவர் முதுகிலேறித் தம் குலக் கொழுந்துகளைக் கரையேற்றிவிடும் இந்த முயற்சியிலாவது நாட்டு நடப்பின் யதார்த்தத்தை அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியிருக்கிறதே; மகிழ்ச்சி அடைவோம்.

அரசு மருத்துவக் கல்லூரிகள் தவிர, தனியார் மருத்துவக் கல்லூரிகள், துணை நிலை மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள் ஆகியவை மட்டும் 180-க்கும் மேலுள்ளன. இவை அனைத்துக்குமான மாணவர் சேர்க்கையில் மட்டுமல்ல, இந்த நிறுவனங்களை நிர்வகிப்பதிலும், தகுதியற்ற - மலிவான ஊதியம் கொடுத்துக் கொத்தடிமைகளை வைத்து வகுப்புக்கள் நடத்துவது, தேர்வுகள் நடத்துவது, விடுதிகள், போக்குவரத்து வாகனங்கள், நன்கொடைகள், கல்விக் கட்டணங்கள் என்று வசூல் வேட்டை நடத்துவதிலும் ஏராளமான குளறுபடிகள், மோசடிகள்.

மருத்துவக் கல்வித் துறையைப் போலவே, பொறியியற் கல்வித் துறையிலும் மாணவர் சேர்க்கை முதற்கொண்டு, இறுதித் தேர்வு, பிறகு வேலைக்கு அமர்த்துவது வரை எல்லா நிலையிலும் நடக்கும் குளறுபடிகள், பகற்கொள்ளை மோசடிகள் கணக்கிலும் வகையிலும் அடங்காதவை.

ஆண்டுக்கு 80,000 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளக்கூடிய 280 தனியார் சுயநிதிப் பொறியியற் கல்லூரிகள் தமிழ்நாட்டில் கடந்த 25 ஆண்டுகளில் புற்றீசல்களைப் போலப் பெருகிவிட்டன. இவற்றில் பெரும்பாலானவை பெருநகரங்களில் உள்ள விடுதிகளில் அறைபோட்டோ, வாடகை வீடுகளிலோதாம் தொடங்கப்பட்டன. பெரும்பாலும் அரசுப் புறம்போக்கு நிலங்களில் தகரக் கொட்டகைகள் போடப்பட்டுக் கொத்தடிமை விரிவுரையாளர்களை வைத்து வகுப்புக்கள் நடத்தப்பட்டன. ஒரு மாணவனுக்கு ஐந்தாண்டுகளில் சராசரி 10 இலட்சம் ரூபாய் வரை வசூலித்தார்கள். இப்படிப் பகற்கொள்ளை அடித்தே இன்று ஒவ்வொன்றும் பல நூறு கோடி ரூபாய் சொத்துக்களைக் கொண்ட, அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொண்ட கல்லூரிகளாக வளர்ந்து விட்டன.

சுயநிதிக் கல்லூரிகளின் அராஜகம், தான் தோன்றித்தனம் ஆகியவற்றுக்கு எதிரான ஒரு வழக்கில் இரண்டு நிரந்தரக் கமிட்டிகள் போட்டு மாணவர் சேர்க்கையையும், கட்டண வசூலையும் மேற்பார்வையிட்டுக்கட்டுப்படுத்தும்படி உச்சநீதி மன்றம் உத்திரவு போட்டது. சுயநிதிக் கல்லூரி முதலாளிகள் கூட்டமைப்பு ஏற்படுத்திக் கொண்டு, தாமே சொந்த நுழைவுத் தேர்வு நடத்தி மாணவர்களைச் சேர்க்கப் போவதாக மிரட்டினர். இந்தச் சேர்க்கை முறையும் அங்கீகரிக்கப்பட்டு, அதை மேற்பார்வையிடும் அதிகாரம் அரசுக் கமிட்டிக்குக் கொடுக்கப்பட்டது. சுயநிதிக் கல்லூரிகளின் தனித்தேர்வு முடிவுக்குக் காரணம் கடந்த ஆண்டு மட்டும் 15,000 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாகவே கிடந்தன. எனவேதான் தாமே நுழைவுத் தேர்வு நடத்தி. கேட்கும் தொகையைச் செலுத்தக் கூடிய எந்த மாணவனையும் சேர்த்துக் கொள்வது என்று சுயநிதிக் கல்லூரி முதலாளிகள் முடிவு செய்தனர்.

**போலீசு, லாக்-அப், கோர்ட் இவையெல்லாம் எந்த ஒழுங்கில் இயங்குகின்றன? இங்கெல்லாம் கொஞ்சமாவது மரியாதை, மனிதத் தன்மை இருக்கிறதா என்று இந்த மெத்தப் படித்த மேல்நிலை நடுத்தர வர்க்கத்தினர் அறிவார்களா?**

இந்த ஆண்டு அரசு நடத்திய நுழைவுத் தேர்வில் குளறுபடிகள் நடந்து, வழக்குகளில் சிக்கிக் கொண்டது. மேலும் தாமதமாக அரசு அமைத்த மாணவர் சேர்க்கைக்கான சுப்பிரமணியம் கமிட்டி விதிமுறைகளை வரையறுப்பதில் தாமதம் செய்தது. இதற்குள்ளாகவே, தாமே அறிவித்த பொது நுழைவுத் தேர்வு நடத்தாமலேயே சுயநிதிக் கல்லூரிகள் இரகசியமாக(!) மாணவர் சேர்க்கையை நடத்தி முடித்து விட்டன. ஒவ்வொரு மாணவரும் ஏறக்குறைய 50,000 ரூபாய் கட்டணமும், அதற்கு மேல் நன்கொடையும் கட்டியுள்ளனர்.

ஆனால், இந்தச் சேர்க்கைகள் எல்லாம் சட்டவிரோதமானவை, செல்லத்தக்கவை அல்லவென்று அரசுக் கமிட்டி அறிவித்து விட்டது. அரசு நடத்திய தொழிற்கல்வி நுழைவுத் தேர்வு, சுயநிதிக் கல்லூரிகளே நடத்தவிருந்த பொது நுழைவுத் தேர்வு இரண்டின்படியும் மாணவர்கள் சேர்க்கப்படவில்லை. ஒற்றைச் சாளர முறை கவுன்சிலிங் மூலம் சேர்க்கை அனுமதியும் பெறவில்லை என்கிறது அரசுக் கமிட்டி. மேலும், வெளிநாட்டில் வாழும் இந்தியர் அல்லது தாழ்த்தப்பட்ட - பழங்குடி இனத்தவர் என்பதற்கு போலிச் சான்றிதழ்கள் தயாரித்து இந்த மாணவர்களில் பலர் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இதனாலும் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் நடந்த சேர்க்கைகள் சட்டவிரோதமானவை என்று அண்ணா பல்கலைக் கழகம் அறிவித்து விட்டது.

இனி, என்ன செய்வது? கட்டிய பணம் திரும்பி வருமா? எந்தக் கல்லூரியில் சேர்ந்து எப்படிப் படிப்பது? தவிக்கிறார்கள் பெற்றோர்களும் மாணவர்களும். பகற்கொள்ளையடிப்பதற்காகவே நிழல் மனிதர்களால் தொடங்கப்பட்டவைதாம் இந்தச் சுயநிதிக் கல்லூரிகள். தம்பிதுரை, ஏ.சி. சண்முகம், ஜேப்பியார், ஜெகத்ரக்ஷகன், சங்கரமடம், வாழப்பாடி, விஜயகாந்த், ஜி.விஸ்வநாதன் என்று இப்படிப்பட்ட கருப்புப்பண, கள்ளப் பண, நிழல் பேர்வழிகள் கல்விச் சேவைக்காகவா சுயநிதிக் கல்லூரிகள் தொடங்கி நடத்துகின்றனர்?

''அரசுத்துறை நிறுவனங்கள் என்றால், இடஒதுக்கீடு முறையை அலமாக்கும் அமைப்புகள் என்றால் அங்கே தரம், ஒழுங்கு, திறமை இருக்காது. அரசுத்துறை, இடஒதுக்கீடு மூலம் படித்து வேலைக்கு வந்தவர்கள் மருத்துவம் - அறுவைச் சிகிச்சை செய்தால் நமது கதி என்னாவது? அவர்கள் கட்டிய கட்டிடங்கள், போட்ட இரயில் பாதைகள், தயாரித்த வாகனங்கள், உற்பத்தி செய்த இயந்திரங்கள் எல்லாம் தரக் குறைவாகத்தானே இருக்கும்?'' என்று நவீன அக்கிரகாரத் திண்ணைகளில் வம்பளந்தார்கள். தினமணி, இந்து ஏடுகளில் ஆசிரியர்க்குக் கடிதம், நடுப்பக்கக் கட்டுரைகள் வரைந்தனர்.


இதோ! தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கை புழுத்து நாறுகிறது. இனி என்ன செய்வது? திருப்பதிக்குப் போய் மொட்டை போடலாம், பெருமாளைச் சேவிக்கலாம். ஆனாலும் சங்கரமடம் நடத்தும் கல்லூரிகள் - மருத்துவமனைகளில் கூட 'தட்சிணை' வைக்காமல் நுழைய முடியாது.

● பாலன்

www.padippakam.com

திரை விமரிசனம்:

# 'நாளை மறுநாள்' அல்ல இன்றே... இக்கணமே!



**"வி**யட்நாம் போருக்குப் பின், அமெரிக்காவின் திமிரை உலகின் முன் முழு அம்மணமாக உரித்துக் காட்டிய விவகாரம் சுற்றுச் சூழல்தான். புஷ் எங்களுக்காகத்தான் பேசுகிறார். ஏனெனில் நாங்கள்தான் இந்த உலகத்திலேயே கடைந்தெடுத்த சுயநலவாதிகள். ஏகாதிபத்தியங்கள் வளரும் நாடுகளின் மனிதர்களையும், இயற்கை வளங்களையும் சுரண்டுவதைப் போலவே எங்கள் தேவைகள் உலக வளங்களைச் சுரண்டுகின்றன."

- *'பாஸ்டன் குளோப்'* - *அமெரிக்கப் பத்திரிக்கையாளர்.*

ஹாலிவுட் பொய்கள் பலவிதம், இரண்டாம் உலகப் போரில் ரஷ்யாவின் பங்கை மறைத்து, இட்லரிடமிருந்து தானே உலகை மீட்டதாக வரலாற்றைத் திரிக்கும் படங்கள்.

வியட்நாமை ஆக்கிரமித்ததை மறைத்து, கம்யூனிச அபாயத்திலிருந்து மக்களை மீட்டதாக வரலாற்றை புரட்டும் ''ராம்போ'' வகைப்படங்கள். ''வட கொரிய அணுஆயுத அழிப்பு'' என்ற பெயரில் எதிர்காலத்தில் தான் செய்யப் போகும் அயோக்கியத்தனத்திற்கு வெள்ளோட்டமாக வெளிவந்த டுமாரோ நெவர் டைஸ் போன்ற ஜேம்ஸ்பாண்ட் படங்கள்.

தானே உலக எதிரி என்பதை மறைக்க, வேற்றுக்கிரக எதிரிகளைப் புனைந்து அவர்கள் உலகத்தைத் தாக்குவதாகவும், அவர்களிடமிருந்து அமெரிக்கா எனும் நாயகன் உலகைக் காப்பதாகவும் சித்தரித்து வெளிவந்த இண்டிபெண்டன்ஸ் டே, காட்ஜீல்லா போன்ற படங்கள்.

இந்த வரிசையில் நடப்பு விவகாரங்களில் அமெரிக்காவின் பங்கை மறைத்து, ஒரு பொய்ப் பிரச்சாரமாக வெளிவந்துள்ளது *'த டே ஆஃப்டர் டுமாரோ'* என்ற ஹாலிவுட் திரைப்படம் - தமிழில் *'நாளை மறுநாள்'.*

●●

**'ஆ**லைக் கழிவுகளாகக் காற்றில் மிதமிஞ்சிக் கலக்கும் கரியமில வாயுவினால் ஏழக்கூடிய தட்பவெப்ப மாறுதல்களை (புவி சூடேறுதல்: Global warming) மயிர்க் கூச்செறியும் கிராஃபிக்ஸ் உத்தியுடன் காண்பிக்கிறது இந்தத் திரைப் படம்.

இக்கதையின் நாயகனான விஞ்ஞானி, துருவப் பகுதியில் ஆராய்ச்சி மேற்கொண்டிருக்கும் பொழுது, பெரிய பனிப்பாறையொன்று உடைந்து கடலில் கரைவதைக் காண்கிறான். உடனடியாக அனைத்து நாடுகளும் தங்கள் தொழிற்சாலைக் கழிவுகளைக் கட்டுப்படுத்தாவிட்டால் 100 ஆண்டுகளில் உலகம் அழிந்துவிடுமென உலகத் தலைவர்கள் அனைவரும் பங்குபெறும் மாநாட்டில் எச்சரிக்கிறான். அவனுடைய பரிந்துரையை ஏற்றுக் கொள்ளாத அமெரிக்கத் துணை ஜனாதிபதி கழிவுகளைக் கட்டுப்படுத்தத் தொடங்கினால் அமெரிக்கத் தொழில்துறையே திவாலாகிவிடும் எனக் கூறி மறுக்கிறார்.

ஆனால் விஞ்ஞானி கூறியதைவிட விரைவாக, மறுநாளே பிரச்சினை தொடங்குகிறது. டில்லியில் பனிமழை! டோக்கியோவில் பனிக்கட்டி மழை! அமெரிக்காவோ 'டொர்னாடோ' எனப்படும் சுழற்காற்றினாலும் 'சுனாமி' எனப்படும் ராட்சத அலைகளாலும், பின்பு நீடித்த பனிமழையினாலும் நிர்மூலமாக்கப்படுகிறது!

இந்நிலையில் அமெரிக்க அரசு தனது குடிமக்களை உடனடியாக மெக்சிகோவிற்குப் புலம் பெயரச் செய்ய வேண்டுமென மன்றாடுகிறார் விஞ்ஞானி. 'ஈவு இரக்கமற்ற கல்நெஞ்சுக்காரனான' துணை ஜனாதிபதியோ அதை மறுத்து விடுகிறான். ஆனால் 'கருணையே உருவான' அமெரிக்க ஜனாதிபதி, விஞ்ஞானியின் கோரிக்கையை ஏற்று மக்கள் புலம்பெயருவதற்கு உதவுமாறு இராணுவத்திற்கு ஆணையிடுகிறார். வாஷிங்டனிலிருந்து கடைசி ஆளாக வெளியேறுகிறார்.

ஒரு நோய்வாய்ப்பட்ட சிறுவனின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தனது உயிரையே பணயம் வைக்கிறாள் விஞ்ஞானியின் மனைவி. விஞ்ஞானியின் மகனோ உறைபனியில் ஓநாய்களுடன் போராடித் தன் காதலிக்கு மருந்து கொண்டு வருகிறான். நியூயார்க் நூலகத்தில் தஞ்சம் புகுந்த ஒரு நாத்திக அறிஞர், உறைபனியிலிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கூட பைபிளை எரிக்க மறுக்கிறார்.

இத்தனையும் நடப்பது அமெரிக்காவில்தான். 5000 ஆண்டு தொன்மை வாய்ந்த சிற்பங்களையும், நூல்களையும் ஈராக்கில் சூறையாடிய அதே அமெரிக்கா; ஈராக் மக்களை அம்மணமாக்கிச் சித்திரவதை செய்து, அதைப் படமெடுத்து மகிழ்ந்த அதே அமெரிக்க நாட்டில்தான் இதுவும் நடக்கிறது.

இப்படியாக இயற்கையின் சீற்றத்துக்கெதிராக அமெரிக்கா நடத்தும்



படிப்பகம்

www.padippakam.com

போராட்டத்தில் அமெரிக்க மக்களின் ஈடிணையற்ற மனிதநேயம் வெல்கிறது. ஹாலிவுட் சென்டிமெண்டிடம் தமிழ்ச் சினிமா தோற்கிறது.

கடைசிக் காட்சியில் கல் நெஞ்சுக்காரரான துணை ஜனாதிபதி மனம் திருந்துகிறார். ''புவி சூடேறுதலிலிருந்து உலகைக் காக்க எங்களுடன் இணையுங்கள்'' என்று பனியும் கசிந்துருகும் வண்ணம் நம்மிடம் இறைஞ்சுகிறார். ''நாம் என்ன குற்றம் செய்தோம்?'' என்று ரசிகர்கள் யோசிப்பதற்குள் படம் முடிந்துவிடுகிறது.

சாதாரண ரசிகர்கள் கிராஃபிக்ஸை எண்ணி வியக்க, கணினிக் குஞ்சுகளோ, தாங்கள் கண்ணால் காண்பதற்குள் தமது கனவுத் தேசம் அழிந்து விடுமோ என்று கொஞ்சம் கலங்குகின்றனர்.

●●

திரையரங்கிலிருந்து உண்மை உலகத்திற்கு நாம் வருவோம். புவி சூடேற்றத்தினால் அமெரிக்காதான் அழியும், நாம் தப்பி விடுவோம் என்று கருதுபவர்கள், நாம் இன்றே பலியாகிக் கொண்டிருக்கிறாம் என்பதை உணரவில்லை. பருவ மழை பொய்ப்பதும், ஆறுகள் வறண்டு போவதும் நாம் சந்திக்கும் பஞ்சமும், பட்டினிச் சாவும் புவி சூடேறுதலின் விளைவுகள்.

கலைக்கும் உண்மைக்கும் உள்ள தொடர்பை அறுத்து, பொய்யைச் சித்தரிப்பதற்கே படத்தில் கிராஃபிக்ஸ் பயன்படுகிறது. அமெரிக்கா அழிவது போன்ற பொய்யை உண்மை போலத் தோன்ற வைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சி, படம் சித்தரிக்கும் அமெரிக்காவின் ''உலக இரட்சக'' அவதாரத்தை நியாயப்படுத்தும் நோக்கத்தை நிறைவேற்றுகிறது. இந்தத் திசைதிருப்பல் தான் கிராஃபிக்ஸின் வெற்றி.

இத்திரைப்படத்தில் கூறப்படும் 'புவி சூடேறுதல்' என்றால் என்ன?

பூமியில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய்ப் புதைந்திருக்கின்ற கரி, வாயு மற்றும் எண்ணெய் போன்ற எரிபொருள்களை 'தொழில்வளம் மிகுந்த நாடுகள்' என்று தங்களை அழைத்துக் கொள்ளும் ஏகாதிபத்தியங்கள்தான் பெருமளவில் பயன்படுத்துகிறார்கள். அதன் கழிவான கரியமிலவாயு காற்றுவெளியில் கலந்து விடுகிறது. இப்படிக் காற்று வெளியில் கலக்கும் கரியமிலவாயுவை மீண்டும் பூமி உறிஞ்சிக் கொள்கிறது. தனது மிதமிஞ்சிய நுகர்பொருள் உற்பத்தியாலும், ஆயுத உற்பத்தியாலும் இந்நாடுகள் காற்று வெளியில் நிரப்பும் கழிவுகளை பூமியால் உறிஞ்சிக் கொள்ள முடிவதில்லை. கரியமில வாயு காற்றுவெளியில் தங்கி அதன் சமநிலையைப் பாதித்து வெப்பத்தை மிகுதியாக்குகின்றது. காற்றுவெளியின் வெப்பம் மிகுதியான காரணத்தினால் பூமியின் வெப்பமும் உயர்கின்றது. இந்த வெப்பம் உலகின் பனிமலைகளையும், துருவங்களிலுள்ள பனிப்பாறைகளையும் உருக்கி கடலில் கலக்கச் செய்கிறது. இத




னால் கடல்நீர் மட்டம் உயருகிறது. சுத்தமான நீர் கடலில் திடீரென அதிகம் கலப்பதால் கடல்நீரின் தன்மை பாதிக்கப்படுகிறது. பருமழைகளைத் தீர்மானிக்கும் ''ஆழ்கடல் நீரோட்டம்'' (Underwater current) தனது வழமையான முறையிலிருந்து திசை மாறுகிறது. இது தட்பவெப்ப நிலைகளில் பல விபரீதமான மாற்றங்களை உண்டாக்குகிறது.

''புவி சூடேறுதல்'' எனும் இந்தப் பிரச்சினைக்குக் காரணமான தொழிற்துறைகளில் கரி, எண்ணெய், வாகன உற்பத்தி, மின்சாரம் மற்றும் அணு ஆராய்ச்சி ஆகியவை முக்கியமானவை. இவையனைத்தும் ஏகாதிபத்திய நாடுகளின் கைகளில் குவிந்துள்ளன. உலகின் மொத்தக் கரியமில வாயு வெளியேற்றத்தில் 85%-ற்கு ஏகாதிபத்தியங்களே காரணம். ஆனால் இத்திரைப்படமோ அமெரிக்காவையும் தொழில் உற்பத்தி என்றால் என்னவென்றேயறியாத சோமாலியாவையும் ஒன்றாகச் சித்தரிக்கிறது.

இத்திரைப்படத்தில் செய்யப்படும் மற்றுமொரு பொய்ப்பிரச்சாரம் பூமத்திய ரேகைக்கு மேலுள்ள பணக்கார நாடுகள்தான் புவி சூடேற்றத்தினால் அழிகிறது என்பது. உண்மையோ இதற்கு நேர்மாறானது. பொதுவாக இது மனித இனத்தின் பிரச்சினையென்றாலும் இதனால் அதிகம் பாதிக்கப்படுவது பூமத்திய ரேகைக்குக் கீழே உள்ள தென் பகுதியைச் சேர்ந்த ஏழை நாடுகள்தான். செஞ்சிலுவைச் சங்கத்தின் புள்ளி விவரப்படி கடந்த 10 ஆண்டுகளில் இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுள் 88 சதவீதமும் அதனால் உயிர் இழந்தவர்களில் 70 சதவீதமும் ஏழை நாடுகளைச் சேர்ந்தவர்களே. ஏனென்றால் எந்தவொரு இயற்கைச் சீற்றத்தையும் எதிர்கொள்ளும் அறிவியல் வளர்ச்சியோ அடிப்படைக் கட்டுமான வசதிகளோ இந்நாடுகளுக்கு இல்லை.

தொடர்ச்சியாகப் பொய்த்து வரும் பருவ மழை, வறண்டு போன ஆறுகள், காலம் தவறிப் பெய்யும் மழை, கோடையில் சுட்டெரிக்கும் வெயில், நாடெங்கும் வருடந்தோறும் பல நூறு உயிர்களைப் பலிவாங்கும் வெப்ப அலை. ஒரிசாவில் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களையும் கால்நடைகளையும் பலிவாங்கிய பெருவெள்ளம், அதைத் தொடர்ந்த வறட்சி, நிலச்சரிவுகள், கடல் நீர் அரிப்பு ஆகியவை புவி சூடேறுதலின் விளைவாகக் கடந்த சில ஆண்டுகளில் இந்தியா சந்தித்த விளைவுகள். இது போன்ற அழிவுகளை லத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க, தெற்கு ஆசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளும் சந்தித்திருக்கின்றன. பருவமழை பொய்த்து வாங்கிய கடனை அடைக்க முடியாமல் சொந்த நாட்டிலேயே அகதிகளாக ஓடும் விவசாயிகளின் அவலத்திற்கும் தற்கொலை செய்து கொள்ளும் கொடுமைக்கும் காரணம் புவி சூடேறுதல் தான். இந்த உண்மையைச் சித்தரிக்க கிராஃபிக்ஸ் தேவையில்லை. ஆனால் அமெரிக்காவே அழிந்து அந்நாட்டு மக்

www.padippakam.com

கள் மெக்சிகோவுக்கு அகதிகளாகச் செல்வதுபோலச் சித்தரித்து அவலச் சுவை சேர்க்கிறது *'நாளை மறுநாள்'*

புவி சூடேற்றத்திற்கு அனைத்து ஏகாதிபத்தியங்களும் பொறுப்பானாலும் அதில் அமெரிக்காதான் முதல் குற்றவாளி. உலக மக்கள் தொகையில் வெறும் 4% கொண்ட அமெரிக்கா, காற்றை மாசுபடுத்தும் கரியமில வாயு வெளியேற்றத்தில் 25% பங்கு வகிக்கிறது. மேலும் புவி சூடேற்றத்தினால் அமெரிக்கா லாபமே அடைகிறது. இந்தியா உள்ளிட்ட வெப்ப மண்டல நாடுகளின் விவசாயத்தை நிர்மூலம் ஆக்குவதனால் தானிய உற்பத்தியில் அமெரிக்க மேலாதிக்கம் உறுதி செய்யப்படுகிறது. இந்த உண்மைக்கு நேரெதிராக அமெரிக்காவே ஒரு புல், பூண்டில்லாமல் அழிந்து விடுவதாகச் சித்தரிக்கிறது இந்தப் படம்.

தற்போதைக்கு பாதிப்பு ஏழை நாடுகளுக்கே எனினும், இந்த அராஜகம் தொடர்ந்தால் முதலுக்கே மோசமாகி விடும் என்பதால் ஏகாதிபத்தியங்கள் ஒன்று கூடி ஜப்பான் - கியோடோ நகரில் ''கியோடோ ஒப்பந்தம்'' என்ற ஒன்றை முன்வைத்தார்கள். இதன்படி ''காற்று வெளியை யார் எத்தனை சதவிகிதம் மாசுபடுத்தலாம்?'' எனப் பங்கு பிரித்தார்கள். இயற்கை எனும் இந்தப் பொன்முட்டையிடும் வாத்தை ஒரேயடியாக அறுத்துவிடாமல் அதை முறையாகக் கொள்ளையிட செய்யப்பட்ட ஏற்பாடே இந்த ஒப்பந்தம். இயற்கை மீது உலக மக்கள் அனைவருக்கும் சம உரிமை உண்டு. ஆனால் இந்த கியோடோ கட்டப்பஞ்சாயத்து, இயற்கையை மாசுபடுத்தும் உரிமையை மக்கள் தொகையின் அடிப்படையில், பிரிக்கவில்லை. மாறாக, ஏகாதிபத்தியங்களின் அரசியல் மேலாண்மை, பொருளாதார வலிமை ஆகியவற்றின் அடிப்படையில் பூமியின் மீதான அதிகாரத்தைப் பங்கு பிரித்திருக்கிறது. இதுதான் இந்தத் திருடர்களின் ஒழுக்கம். இதையும் மதிக்காததுதான் அமெரிக்காவின் ஒழுக்கம்.

''இந்த ஒப்பந்தம் நியாயமற்றது என்றும், இதனை ஏற்றால் தொழிற்துறை திவாலாகிவிடும்'' எனக் கூறி அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தையும் நிராகரித்தது. உலகே காறி உமிழும் இந்த அமெரிக்க அராசகத்தைப் பற்றி இப்படம் மூச்சுவிடவில்லை. மாறாக, அமெரிக்க அதிபரை மக்கள் நலனில் அக்கறை உள்ளவராகச் சித்தரிக்கின்றது.

சுற்றுச் சூழல் ஒப்பந்தம் எனப் பேசப்பட்ட பொழுதே ''எந்த ஒரு ஒப்பந்தமும் அமெரிக்க வாழ்க்கை முறையை மாற்ற முடியாது'' என மார்தட்டினார் அப்பன் புஷ். தற்போதைய அதிபர் மகன் புஷ் ''கரியமில வாயுவைக் காற்றில் கலக்கும் ஆலைகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பேன்'' என தேர்தல் பிரச்சாரத்தில் அமெரிக்க மக்களிடம் புளுகி விட்டு, பதவிக்கு வந்தபின் ''கரியமில வாயுவை நஞ்சு எனச் சொல்லியதே தவறு'' என பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டு, மாற்று எரிபொருள் திட்டத்தைக் கைவிட்டு அந்தக் காசையும் கரி எரிபொருள் செலவில் கூட்டினார்.

இந்த புஷ் - எக்ஸான் - மோபில் - என்ரான் கூட்டணிதான் உலகின் எண்ணெய்வளத்தில் மேலாதிக்கம் செலுத்துகிறது. அதை உறுதிப்படுத்துவதான ஈராக், ஆப்கான் போர்களின் சூத்திரதாரிகளும் இவர்களே. புவி சூடேறுதலின்

**தனது மிதமிஞ்சிய நுகர்வுக் கலாச்சாரத்தினாலும் கட்டுப்பாடில்லாத வர்த்தக வெறியினாலும் 'இன்று' உலகையே அழித்துக் கொண்டிருக்கும் அமெரிக்காதான் *'நாளை மறுநாள்'* தமது நாடே அழிந்து போகப் போவதாகத் திரைப்படமெடுத்து அனுதாபத்தைத் தேடுகிறது.**

நாயகர்களான இந்தப் பன்னாட்டு நிறுவனங்களைப் பற்றி படம் வாயே திறக்கவில்லை.

உலகமயமாக்கத்திற்குப் பிறகு மனித குலத்தின் சொத்து எனக் கருதப்படும் இயற்கை வளங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் அதிவேகமாகத் தனியுடைமையாக்கி வருகின்றன. நீர், நிலம், காற்று, வெளி என எங்கும் எதிலும் தனியார்மயம். நாளை மறுநாளை விடுங்கள், நாளை என்னவாகும் என்பதைப் பற்றிக் கூடக் கவலைப்படாத லாப வெறி கொண்ட மிருகங்கள் இவர்கள். கியோட்டோ மாநாடு நடைபெறுவதற்கு முன்னரே தொடர்ச்சியான விளம்பரங்கள் மூலம் அதற்கெதிரான ஒரு பொதுக்கருத்தை இவர்கள் அமெரிக்க மக்களிடம் உருவாக்கினர். மாநாட்டில் தனது கைக்கூலிகளான அரசியல்வாதிகளையும், அறிஞர்களையும் ஏவி தீர்மானத்திற்கு எதிராகப் பேச வைத்தனர். 'ஷெல்' என்ற பன்னாட்டு நிறுவனம் மட்டும் 40 கைக்கூலிகளை மாநாட்டிற்கு அனுப்பி வைத்தது; ஒப்பந்தம் தோற்றது; அமெரிக்கா மூன்று சலுகைகளை வென்றது.

*முதலாவதாக,* காற்று வெளியை மாசுபடுத்த தமக்கு ஒதுக்கப்பட்ட பங்கை பயன்படுத்த முடியாத ஏழை - நாடுகளிடமிருந்து அதை விலைக்கு வாங்கிப் பயன்படுத்தும் வழி. தாழ்த்தப்பட்ட பெண்களை பாலியல் பலாத்காரம் செய்துவிட்டு, மேல்சாதி வெறியர்கள் பஞ்சாயத்தில் அபராதப் பணம் கட்டுவதைப் போலவே இயற்கையைக் கற்பழிப்பதைத் தனது உரிமையெனக் கருதும் அமெரிக்கா, அதற்குண்டான அபராதத்தை உலக நாடுகளின் முகத்தில் வீசி எறிகிறது. இந்த வெப்பக் காற்று வர்த்தகத்தில் (Hot Air Treaty) மட்டும் இதுவரை பல நூறு கோடி (பில்லியன்) டாலர்கள் கைமாறியுள்ளன.

*இரண்டாவது சலுகையானது,* மூன்றாம் உலக நாடுகளுக்கு ''காடு வளர்ப்புத் திட்டம்'' என்ற பெயரில் கடனுதவி அளித்தால் அதற்குத் தக்க அளவிற்கு காற்றை மாசுபடுத்தலாம் என்பது. இந்தச் சலுகை பன்னாட்டு நிறுவனங்களின் காடுகளைத் தனியுடைமையாக்கும் சதித் திட்டத்துடன் ஒத்துப் போவது தற்செயலானது அல்ல.

*மூன்றாவது சலுகையின்படி,* ஏழை நாடுகளுடன் 'கூட்டு முயற்சி' என்ற பெயரில் அந்நாடுகளின் தொழிற்சாலைகளைத் தூய்மைப்படுத்தி (கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல்) அதன்மூலம் அவர்கள் குறைத்த கழிவை தன் கணக்கில் குறைத்துக் கொள்வது. இதன்மூலம் மூன்றாம் உலக நாடுகளின் முதுகெலும்பாயுள்ள தொழிற்துறைகள் சுற்றுச் சூழலின் பெயரால் முடக்கப்பட்டு அடிப்படைத் தேவைகளுக்குக் கூட ஏகாதிபத்தியங்களிடம் கையேந்தும் நிலை மேலும் மேலும் அதிகமாகும்.

இப்படித் தனது மிதமிஞ்சிய நுகர்வுக் கலாச்சாரத்தினாலும் கட்டுப்பாடில்லாத வர்த்தக வெறியினாலும் 'இன்று' உலகையே அழித்துக் கொண்டிருக்கும் அமெரிக்காதான் *'நாளை மறுநாள்'* தமது நாடே அழிந்து போகப் போவதாகத் திரைப்படமெடுத்து அனுதாபத்தைத் தேடுகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதற்கான போராட்டத்தை நாம் தொடங்கி விட்டால் நாளை மறுநாளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியிருக்காது. இதுதான் தீர்வு; சந்தேகமிருந்தால், முதல் பத்தியைப் படியுங்கள்!

● **கார்மேகம்**


படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கை:

# கிணற்றில் தெரியும் முகங்கள்



"**நீ**ரின்றி அமையாது உலகு" என்பது தண்ணீரின் முக்கியத்துவம் பற்றி திருவள்ளுவர் கூறிய அனுபவ மொழி. நதிக்கரை ஓரம் பிறந்து வளர்ந்த நாகரீகம் இன்று காலி குடங்களுடன் சண்டையிட்டு நிற்கிறது. ஆதிகாலத்து அகத்திய முனிவனின் கையில் உள்ள கமண்டலத்தில் புனிதமாய் இருப்பதாகச் சொல்லப்பட்ட பொருள் கூட தண்ணீர்தான். இன்றோ தண்ணீர் லாரிகளின் தரிசனத்துக்கு முன்னே அகத்திய புராணம் எம்மாத்திரம்! தண்ணீருக்காகத் தவிக்கிறது உலகம்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் நிலத்தடி நீர் அநேகமாக 98 சதவீதம் உறிஞ்சி எடுக்கப்படுகிறது. இது தொடர்ந்தால் இன்னும் 10 ஆண்டுகளில் நிலத்தடி நீரே இருக்காது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். கோக், பெப்சி போன்ற பன்னாட்டுத் தண்ணீர் வியாபாரிகளும் நகரமயமாகி வரும் அடுக்குமாடிக் குடியிருப்புகளும் ஆழ்துளைக் கிணறுகள் என்கிற எந்திர நாக்குகள் மூலம் மண்ணின் மார்பை ஒட்ட உறிஞ்சுகின்றன. இதன் விளைவாக நிலத்தடி நீர்மட்டம் வெகுவேகமாகத் தாழ்ந்து போகிறது. உடனடிப் பாதிப்பாக நடுத்தர மக்கள் பயன்படுத்தும் கிணறுகள் வறண்டு போகின்றன. இங்கு தான் கிணறு வெட்டும் தொழிலாளிகளின் அளப்பரிய உழைப்பு நடுத்தர மக்களுக்குத் தேவைப்படுகிறது.

நம்முடைய புராணங்களிலும், இலக்கியங்களிலும் நதிகளை ஓடவிட்டு நமக்கு ரசிக்கத்தந்த இலக்கியவாதிகளை உங்களுக்குத் தெரியும். ஆனால் உங்களுடைய இருப்பிடத்திற்கே தண்ணீரைத் தருவித்துத் தந்து தலைமுறைகளின் தாகம் தீர்க்கும் கிணறு வெட்டும் தொழிலாளிகள் என்ற மாபெரும் படைப்பாளிகளின் கதையை நீங்கள் கேட்டதுண்டா?

"உயிர பணயம் வைக்கிற
வேலதாங்க
பூமிக்குள்ள போறோம் - போறவங்க
உள்ள போனா பொணம்
வெளிய வந்தா பணம்.
எந்த நேரமும் உசாரா இருக்கணும்.
தைரியம் இல்லையின்னா
வேல செய்ய முடியாது.
நமக்கு இந்த வேலைய விட்டா
வேற தெரியாது
ஆபத்தில்லாத வேலையின்னு
ஏதாவது இருக்கா?
மனுசனுக்கு உயிர்மேல
பயம் வந்துட்டா
அதுக்கு என்ன மருந்து இருக்கு?"

— இது ராஜா என்கிற நாற்பத்தி ஐந்து வயது கிணறு வெட்டும் தொழிலாளி நம்மைப் பார்த்துக் கேட்கும் கேள்வி. உயிரைப் பணயம் வைத்து இறங்குவது என்பது நான்கு தலைமுறைக்குச் சொத்து சேர்ப்பதற்காக அல்ல; கிணறு வெட்டும் தொழிலாளர்களைப் பொருத்தவரையில், அது அன்றாட வாழ்க்கைப் போராட்டத்திற்கான நிர்ப்பந்தம். ஒருபுறம் வசதி படைத்தவர்கள் ஆழ்துளைக் கிணறு இறக்கும் பேரிரைச்சல்; மறுபுறம் சாதாரண மக்களுக்காக உறை கிணறு இறக்கும் தொழிலாளர்களின் ஓசையில்லாத மரணம்! இதனை இருவேறு உலகத்து இயற்கை என்று சொல்லலாமா, முடியாது. சென்னை அடுக்குமாடிக் குடியிருப்புக்களின் ஆழ்துளைக் கருவிகள், தாய்மண்ணின் மார்பைச் சூறையாடும் வெறியோடு மண்ணடுக்குகளைப் பிளந்து கொண்டு இயற்கையின் மீதான ஒரு தாக்குதலாக உள்ளிறங்குகின்றன. கிணறு வெட்டும் தொழிலாளர்களோ ஒரு பெண்ணுக்குப் பிரசவம் பார்க்கும் மருத்துவத் தாதியைப் போல, மெல்ல மண்ணை அகழ்ந்து நமக்குத் தண்ணீரின் முகத்தைக் காட்டுகிறார்கள்.

"பாறை ஏரியாவா, போர் போடலாம். தப்பில்ல. 15-20 அடி நீர்மட்டம் இருக்கிற எடத்துல இன்னாத்துக்கு போரு? இதுனால அக்கம்பக்கத்துல இருக்குற கெணறும் கெட்டுப் போயிடும்; தண்ணீர் டேஸ்ட் மாறும், துரு நாத்தம் அடிக்கும், மஞ்சளா போயிரும். தண்ணிக்கு நாய்படாதபாடு படுற ஊர்ல சிலது மோட்டார் போட்டுவுட்டு குளிக்கப் போச்சுங்கன்னா டாங்க் மட்டும் ரொம்பி வழியுது; பக்கத்து வீட்டுல இருக்கறவன்கூட ஒரு கொரலு குடுக்க மாட்றான்."

— இது சுதா என்ற கிணறு வெட்டும் தொழிலாளியின் குரல். அவருடைய சமூகப் பொறுப்புணர்ச்சி; தண்ணீரின் அருமை தெரிந்த இந்தத் தொழிலாளர்களின் இதயம் தண்ணீரை விட ஈரமானது. ஆனால் அடிக்கடி உறை கிணறுகளின் அடியாழத்தில் மண் சரிந்து மாண்டு போகும் இவர்களுக்காகக் குரல் கொடுக்கத்தான் வெளியே யாருமில்லை.

வறட்சி ஒருபக்கம் தண்ணீரைத் தேடி மக்களைத் துயரத்தில் தள்ளுகிறது. அதே வறட்சியின் காரணமாக காடு, கழனிகளில் வேலையிழந்து கையறு நிலையில் தவிக்கும் கிராப்புறத்துத் தொழிலாளர்களை, நகர்ப்புறத்தில் கிணறு வெட்டும் வேலைக்காகக் கிணற்றில் பிடித்துத் தள்ளுகிறது.

கிணறு வெட்டும் தொழிலாளிகள் ஒரு குழுவாகச் சேர்ந்து வேலை செய்கின்றனர். "முழுக்காளி" என்பவர் நீருக்குள்



படிப்பகம்

www.padippakam.com

மூழ்கி மண்ணை அள்ளுவார். 'கயிறு போடுவோர்' கிணற்றின் மேலிருந்து மண்ணை மேலே தூக்குவர். வீசியெறியப்படும் வாளியில் வரும் 35 - 40 கிலோ மண்ணை இலாவகமாய்ப் பிடித்துக் கொட்டுவார் 'பெரியாள்'. அப்படித் தூக்கியெறியப்படும் போது நைந்து போன வாளியின் விளிம்புகள் பட்டு ஏற்படும் காயத்திற்குக் கணக்கில்லை. கிணற்றில் ஒரு வாளி தண்ணீர் இறைக்கவே முக்கி முனகுபவர்கள், கிணற்றின் மேல் விட்டத்தில் நின்று கொண்டு 35-40 கிலோ மண்ணை குனிந்து தூக்குபவரின் மார் வலியை நினைத்துப் பாருங்கள். பெத்த குழந்தையையே நீண்ட நேரம் தூக்கிப் பிடிக்கச் சிரமம் பார்க்கும் மனிதர்களால் அந்தத் தொழிலாளிகளின் மண் பாரத்தை உணர முடியுமா?

சென்னையைப் பொருத்தவரை 90% உறைகிணறுகள் இருக்கின்றன. வறண்டு போன கிணறுகளை ஆழப்படுத்தித் தண்ணீர் தருவது, கிணற்றின் அடியில் சேர்ந்த மண்டி, இடிந்து விழுந்த மண் முதலியவற்றை அகற்றித் தூர் வாருவது, கிணற்றில் தவறி விழுந்து சாகும் பூனை, எலி, காக்கை போன்றவற்றை அகற்றிக் கிணற்றைச் சுத்தம் செய்து தருவது - ஆகியவை இந்தத் தொழிலாளர்களின் பிற வேலைகளாகும். ஒரு அணிற்பிள்ளை கிணற்றில் தவறி விழுந்து செத்தாலே பரிதாபப்படும் மெல்லிதயம் கொண்டவர்கள் 'கரணம் தப்பினால் மரணம்' என்ற கட்டாயத்தோடு அன்றாடம் இந்த வேலையில் ஈடுபடும் தொழிலாளிகளுக்காகத் துயரப்படுவதுண்டா? பிறர் அதை எப்படிப் பார்க்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்க, அந்தத் தொழிலாளிகளே கருதுவது என்ன?

"மூணு பிள்ளைகள வச்சுகிட்டு நான் என்ன பண்ணுவேன்? கெணத்து வேலையில செத்துப் போறாங்க, பல செய்தி காதுலபடுது. இந்த வேலைக்குப் போக வேணாமுன்னு வீட்டுல கூட அழுகுறாங்க. அதுக்காக என்ன பண்ண முடியும்? வேலைக்குப் போகலன்னா கொளந்த குட்டிய எவன் காப்பாத்துவான்? அங்கே போய் செத்தாலும் கூட ஆயிரம், இரண்டாயிரம் குடுத்துட்டு விட்டுவாங்க. அப்பவும் பொண்டாட்டி புள்ளைங்க அனாதையாத்தான் திரியும்!"

— இது வாழ்வுக்கும் சாவுக்கும் தனது உழைப்பின் மூலம் ராஜா என்ற தொழிலாளி கொடுக்கும் விளக்கம்.

தனக்கு எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பதைப் பற்றி அறிந்தும் அறியாமலும் போய்க் கொண்டிருக்கும் இந்த தொழிலாளிகள் எந்த இடத்தில், எந்த மாதிரியான தண்ணீர் கிடைக்கும் என்பதை அறுதியிடுவதில் நிபுணர்கள். சென்னையில் எந்தப் பகுதியில் என்ன வகை மணல்திட்டு, எந்த வகை நீரூற்று எவ்வளவு தண்ணீர் தரும், நீரின் சுவை, நிறம் அனைத்தையும் மண்ணைப் பார்த்தே துல்லியமாகச் சொல்லிவிடுவார்கள்.

20-25 அடி நீருக்குள் மூழ்கி மண்ணைக் குத்திப் பெயர்ப்பதென்றால் லேசான காரியமல்ல, முத்துக் குளிக்கும் தொழிலாளர்களைப் போலவே இவர்களும் மூச்சப் பிடித்துக் கொண்டு தண்ணீருக்குள் போய் மண்ணை அள்ளுகிறார்கள். இரண்டே அடி விட்டமுள்ள உறை கிணற்றில் இறங்கி உடலை இரண்டாக மடக்கிக் குறுக்கி மண்ணை அள்ளும் போது பாம்பு நெளிவது போல அவர்களது உடல் நெளியும்.

"காலையில 6 மணிக்கு வேலையப் புடிச்சா நீர்மட்டத்தப் பார்த்துட்டா டிபன் சாப்புட கௌம்புவோம், மணல் வந்திருச்சுன்னு வச்சுக்குங்க, அப்புறம் சாப்பாடு கிடையாது. தண்ணி சொரக்க ஆரம்பிச்சிரும். தண்ணியில முழுகுனா வயித்துல எதுவும் இருக்கக் கூடாது. பல தண்ணியில எறங்குறதால சளி புடிக்கும், கை கால் கொடச்சல் இருக்கும், முக்கியமா பக் கெட்ட தண்ணியில வச்சு அமுக்குறதால மார் வலிக்கும், தூசிய வேற முழுங்கறதால வயிறு வலி, காஸ் (வாய்வு) பிரச்சினை வரும். பொதுவா 35-40 வயது வரையும் வேல பார்க்கலாம். ஒடம்புல தெம்பு இருக்கந்தட்டியும் கெணறு முழுகலாம்"

— இது தங்களது உழைப்பைப் பற்றி ஒரு தொழிலாளியின் சுருக்கமான தொகுப்பு.

மண் சரிந்து சாவது, கிணற்றுக்குள் விஷ வாயு தாக்கிச் சாவது, பிடி நழுவி விழுந்து கீழே பாறையில் தலை தெறித்தும், கீழே குத்தி வைத்திருக்கும் கடப்பாறையில் கழுவேறிச் சாவதுமாய் மண்ணுக்குள் புதைந்து போன தொழிலாளிகளின் சோகக் கதைகள் கிணற்றுக்குள் குரலாய் யாருக்கும் கேட்காமலேயே போய்விடுகிறது. கிணற்றுக்குள் ஐம்பது, அறுபது அடி இறங்குவதென்பது சாதாரணமானதல்ல. உயிரை வெறுத்துவிட்டுத்தான் இறங்க வேண்டும். 31 ஆண்டு அனுபவம் வாய்ந்த 52 வயது ராகவன் என்கிற தொழிலாளி கூறும்போது...

"வள்ளி தியேட்டர் பக்கம்... அறியாத கத்துகுட்டிங்கள வேலைக்கு கூட்டிக் கிட்டுப் போயிட்டேன். 19 அடி நீர்மட்டம். நடுவுல பாற வந்து மாட்டிகிச்சு. 5 அடி தண்ணியாவது வேணுமேன்னு நானும் வுடல; கவுத்த புடிங்கடான்னு சொல்லிட்டு உள்ள எறங்குறேன்; 2 அடி

**கிணறு வெட்டும் தொழிலாளர்களைப் பொருத்தவரையில், அது அன்றாட வாழ்க்கைப் போராட்டத்திற்கான நிர்ப்பந்தம். ஒருபுறம் வசதி படைத்தவர்கள் ஆழ்துளைக் கிணறு இறக்கும் பேரிரைச்சல்; மறுபுறம் சாதாரண மக்களுக்காக உறை கிணறு இறக்கும் தொழிலாளர்களின் ஓசை இல்லாத மரணம்! இதனை இருவேறு உலகத்து இயற்கை என்று சொல்லலாமா, முடியாது.**





படிப்பகம்

www.padippakam.com

கைக்கு, காலுக்கு, கழுத்திற்கு, உயிருக்கு என ஒவ்வொன்றிற்கும் காப்பீடு செய்து அதைத் தனது சந்ததிக்கு வழங்குவதையே பெருமிதமாகக் கூறும் நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில், உயிர்வாழ எந்த உத்திரவாதமும் இல்லாத தொழிலில் ஈடுபட்டு அதில் ஊராரின் தலைமுறைக்குத் தண்ணீரைக் காப்பீடு செய்துதரும் இந்தத் தொழிலாளிகளின் பெருமிதம், தியாகம் அளப்பரியது.



தான் போயிருப்பேன். கவுத்த உட்டுட்டான். அப்புடியே போய் விழுந்தேன் பாரு, பக்கத்துல 5 அடி கடப்பாரை கீது. மேல ஏறிருந்தா மாருக்கு வந்திருக்கும். நல்ல வேள தள்ளிப்போய் விழுந்தேன். தோ, இந்த காலு ஒடிஞ்சு போச்சு!''

மண்ணின் அடியாழத்திற்குச் சென்று தண்ணீர் என்ற தலைமுறைச் செல்வத்தை பிறருக்கு வாரி வழங்கும் இந்தத் தொழிலாளிகளின் விழுப்புண்கள், நாட்டையே புதைகுழிக்குள் தள்ளிய வாஜ்பாயியின் மூட்டு ஆப்பரேசனைப் போல வரலாற்றில் இடம் பெறப் போவதில்லை.

சுவரில் ஒரு ஆணி அடிக்க ஏறும் போது சொந்த மனைவி மக்களாய் இருந்தாலும் பத்து முறை 'ஏணிய பத்திரமாப் புடிச்சுக்க, பத்திரமாப் புடிச்சுக்க' என்று நம்பிக்கை இல்லாமல் ஏணியேறும் நம்மவர்கள் மத்தியில் பூமியின் அடியாழத்திற்கு இறங்கும் கிணறு வெட்டும் தொழிலாளியின் நம்பிக்கை, சக தொழிலாளியின் கையில் இருக்கிறது. குடும்ப உறவில் தாலிக் கயிற்றை விடவும் பொறுப்பானது, கீழே இறங்கிய முழுக்காளிகளுக்காக மேலேயிருக்கும் தொழிலாளி பிடித்திருக்கும் தாம்புக் கயிறு.

''குமணஞ்சாவடியிலே 28 அடி நீர் மட்டம். 9 பேர் வேலை செய்யுறோம். மண்ணு லூசு குடுக்குது. வேணான்னு சொல்லிகினே இருக்கிறேன், செல்லப்பா எறங்கிட்டான். பொத பொதன்னு விழுது. டக்குன்னு கவுத்தவுட்டு தூக்கிட்டேன். மிஸ்ஸானா மஞ்சு துணிய போத்தி தூக்கினு போவ வேண்டியதுதான்.... எத்தினி பேர காப்பாத்தி உட்டுகிறேன் தெரியுங்களா?'' — இது ராகவனின் அனுபவம். சக தொழிலாளிகள் உயிரில் மேல் ராகவன் வைத்திருக்கும் மதிப்பு!

உள்ளே சென்ற முழுக்காளி மேல் மணல் சரிந்து மூடியபோது செய்வதறியாது துடித்த தொழிலாளிகளின் கதைகள் உண்டு; கிணற்றிலிருந்து ஏறிவரும்போது கயிறு உருவி விழுந்து, கழுமரம் போல் கடப்பாரை ஏறி மாண்டவர்கள் பலர்; இது தவிர கை கால் முறிவது, தலையில் கல் விழுந்து தையல் போடுவது எல்லாம் இந்தத் தொழிலாளிகளின் வாழ்வில் அனிச்சைச்செயல்கள் போன்றவை.

''தலையில கல்லு விழுந்து தையல் போடாத எடம் தவம் செஞ்ச எடம்'' — இது திருக்குறள் போல சுருங்கச் சொல்லும் தொழிலாளியின் துயரக் குறிப்பு.

கழனிகளில் வேலை பார்த்தவர்கள், ஏதாவது ஒரு கைத்தொழில் செய்து காலத்தை ஓட்டியவர்கள், சிறு நகரங்களில் சர்வர்கள், இப்படி அனைவரது உழைப்பையும் ஒழித்துக் கட்டிய புதிய பொருளாதாரக் கொள்கையும், உலகமயமும் அதற்கு ஒத்து ஊதும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள், படிப்பாளிகள் என்பவர்கள் தான் கிராமத்துத் தொழிலாளர்களை இப்படிக் கேட்பாரற்றுக் கிணற்றில் தள்ளிய அயோக்கியர்கள். வாழ முடியாமல் கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டவர்களின் கதையை ஊரார் மணிக்கணக்கில் பேசுவதுண்டு. ஆனால், வாழ்வதற்காகவே தினம் தினம் கிணற்றில் விழுந்து சாகும் இந்தத் தொழிலாளர்களின் நிலைமையை யார் பேசுவது? அவர்களே கூட அப்படிப் பேசுவதில்லை. ஊரெங்கும் கிணறு தோண்டி பிறருக்குத் தண்ணீரைத் தருவித்துத் தந்த தொழிலாளர்கள் தமது கண்ணீரின் வரலாற்றைவிடவும் தண்ணீரின் வரலாற்றையே தமதாக்கி மகிழ்கிறார்கள்.

''மெட்ராஸ்ல மேற்கே பெரியார்நகர் வரையிலும் கிணறு போட்ருக்கோம்; சேலையூர், பீச், ராயப்பேட்டை இப்படி பல எடத்துல, எம்.ஜி.ஆர் நகர்ல மட்டும் ஆயிரம் கெணறு போட்ருக்கோம். வடபழனி டிப்போ பக்கத்துல பத்தடி (விட்டம்) கெணறு அஞ்சு போட்டுருக்கோம்.'' - இது ராகவனின் பெருமிதமான வார்த்தைகள். கைக்கு, காலுக்கு, கழுத்திற்கு உயிருக்கு என ஒவ்வொன்றிற்கும் காப்பீடு செய்து அதைத் தனது சந்ததிக்கு வழங்குவதையே பெருமிதமாகக் கூறும் நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் உயிர் வாழ எந்த உத்திரவாதமும் இல்லாத தொழிலில் ஈடுபட்டு அதில் ஊராரின் தலைமுறைக்குத் தண்ணீரைக் காப்பீடு செய்துதரும் இந்தத் தொழிலாளிகளின் பெருமிதம், தியாகம் அளப்பரியது.

நான் எழுதிய நாவல் இத்தனைப் பிரதிகள் விற்றது, நான் வரைந்த ஓவியம் இத்தனை ரூபாய்க்குப் போனது... என்று கலை, இலக்கியப் படைப்பாளிகள் சந்தை மதிப்பு தேடிக் கொண்டிருக்கும் உலகில் கிணறு வெட்டும் தொழிலாளிகளோ ''இத்தனை ரூபாய் சம்பாதித்தேன்'' என்பதற்குப் பதிலாக தன்னுடைய சாதனையாக ''இத்தனைப் பேருக்குத் தண்ணீர் கொடுத்தேன், இத்தனைக் கிணறுகளில் என்னுடைய உழைப்பு ஊற்றெடுத்து ஊருக்குப் பயன்படுகிறது'' என்று அவர்கள் அடையும் பெருமிதம் இவர்களை உழைப்பாளிகளாய் மட்டுமின்றி சமூகப் பொறுப்புள்ள படைப்பாளிகளாகவும் நமக்கு அடையாளம் காட்டுகிறது.


ஆம். ஒவ்வொரு கிணற்றுக்குள்ளிருந்தும் நூற்றுக்கணக்கான கிணறு வெட்டும் தொழிலாளிகளின் உழைப்பும் உயிரும் உங்களின் தாகம் தீர்க்க ஊற்றெடுத்துக் கொண்டேயிருக்கிறது!

● செம்புலம்



படிப்பகம்

www.padippakam.com



# தோபா தேக் சிங்

பிரிவினைக்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் போயிருக்கும். இந்துஸ்தா்ன், பாகிஸ்தான் இரண்டு அரசாங்கங்களுக்கும் திடீரென ஒரு யோசனை தோன்றியது. சாதாரண சிவில் கைதிகளை இரண்டு தரப்பிலும் பரிமாற்றம் செய்து கொண்டதைப் போலவே மனநலக் காப்பகத்தில் இருக்கிற மனநோயாளிகளையும் மாற்றிக் கொண்டாலென்ன? இந்துஸ்தானில் உள்ள முசுலீம் மனநோயாளிகளையும், பாகிஸ்தானில் உள்ள இந்து, சீக்கிய மனநோயாளிகளையும் மாற்றிக் கொள்வது.

இப்படிச் செய்வது சரியா என்று கறாராகச் சொல்லவும் முடியாது. அறிவாளிகள் முடிவெடுத்து விட்டார்கள்; அதனால் இருநாடுகளிலும் உள்ள அதிகாரிகள் உயர்மட்ட மாநாடுகளை நடத்தி ஆலோசித்தார்கள்; மாற்றிக் கொள்வதற்கான நாளும் குறித்துவிட்டார்கள். அதைத் தொடர்ந்து யார்யாரை மாற்றலாம், யார்யாரை மாற்ற வேண்டாம் என்று பக்காவாக ஆய்வும் நடத்தினார்கள்.

அப்படி ஒரு முசுலீம் மனநோயாளியின் குடும்பம் இந்துஸ்தானில் தொடர்ந்து வாழ்ந்து வந்தால் அந்த நோயாளி மாற்றப்பட மாட்டார்; மற்றவர்கள் எல்லைக்கு அனுப்பப்படுவார்கள். பாகிஸ்தானில் இருந்த அனேக இந்து, சீக்கியர் குடும்பங்கள் இந்துஸ்தானுக்குப் புலம் பெயர்ந்துவிட்டதால் அப்படி ஒரு பிரச்சினை எழவில்லை. எல்லா இந்து, சீக்கிய நோயாளிகளையும் போலீசு காவல்போட்டு எல்லைக்கு அனுப்பிவிடுவார்கள்.

செய்தி கசிந்ததும் லாகூர் காப்பகம் பரபரப்பானது. 'ஜமீந்தார்' என்ற நாவலை கடந்த பனிரெண்டு வருசமாக மறுபடி மறுபடி படித்துக் கொண்டேயிருந்த ஒரு முசுலீம் நோயாளியிடம் அவர் நண்பர் கேட்டார்: ''மவுல்வி சாகேப் பாகிஸ்தான்னு சொல்றாங்களே, அப்படீன்னா என்ன?''

மவுல்வி சாவகாசமாக யோசித்து விட்டுப் பிறகு சொன்னார்: ''அது இந்துஸ்தானத்தில் இருக்கிற ஒரு இடம். அங்க ஆட்ட அறுக்கற மாதிரி கழுத்துல கத்திபோட்டு ஒரே இழு இழுத்துடுவாங்க...''

மவுல்வியின் நண்பருக்கு அந்தப் பதில் பொருத்தமாகத் தோன்றியது.

ஒரு சீக்கிய மனநோயாளி இன்னொரு சீக்கிய நோயாளியைக் கேட்டார்: ''சர்தார்ஜி, நம்மள எதுக்கு இந்துஸ்தானுக்கு அனுப்புறாங்க? அங்க அவுங்க பேசற மொழியே நமக்குத் தெரியாதே.''

மற்றவர் சொன்னார்: ''அடேய். எனக்கு இந்துஸ்தானியரின் மொழி நல்லா தெரியும். அந்தப் பயமக்க பயங்கரமான பிசாசுப் பயலுக... தலக்கனம் பிடிச்சி மெதப்பா நடப்பானுங்க....''

ஒரு முசுலீம் நோயாளி குளித்துக் கொண்டேயிருந்தவன் ''பாகிஸ்தான் ஜிந்தாபாத்!'' என்று ஓங்கிக் கத்திக் கொண்டேயிருந்த போதே சறுக்கிக் கீழே விழுந்து மண்டையில் அடிபட்டு அதே இடத்திலேயே செத்து விழுந்து விட்டான்.

காப்பகத்திலிருந்த சிலர் பைத்தியமே கிடையாது. அவர்கள் கொலைகாரர்கள். அவர்களின் நெருங்கிய உறவுகள் அதிகாரிகளைப் பார்த்துக் காதும் காதும் வைத்தது போல கையில் பணத்தை வைத்துக் கிள்ளி அவர்களும் 'பைத்தியம்' என்று காகிதத்தில் எழுதி இங்கே அனுப்பினார்கள். சட்டப்படி அவர்களின் கொலைகளுக்குத் தூக்குக்கு அனுப்பியிருப்பார்கள். அவர்க


படிப்பகம்

www.padippakam.com

ளுக்கு இந்துஸ்தானம் பிரிக்கப்பட்டதைப் பற்றியோ, பாகிஸ்தான் என்றால் என்ன என்பது பற்றியோ முழுதாகத் தெரியாது.

காவலுக்கு நின்ற போலீசுக்கு ஒரு மண்ணும் தெரியாது. அவர்கள் படிப்பு வாசனை இல்லாதவர்கள். அவர்கள் பேச்சைக் கவனித்து லேசில் எதையும் விளங்கிக் கொண்டு விடமுடியாது. முகம்மது அலி ஜின்னா என்று ஒருத்தர் இருக்கிறார் - பெரிய தலைவர். அவர் முசுலீம்களுக்காக பாகிஸ்தான் என்றொரு புதிய நாட்டைக் கட்டியிருக்கிறார் - இந்த அளவில்தான் அவர்களுக்குத் தெரியும்.

பாகிஸ்தான் எங்கே இருக்கிறது? கிழக்கே, மேற்கே, தெற்கே, வடக்கே அதன் எல்லைகள் என்ன என்ன? எதுவும் அவர்களுக்குத் தெரியாது. முழுப் பைத்தியம் அல்லாத காப்பகத்தின் நோயாளிகள் பலருக்கு ஒரே குழப்பம். இந்துஸ்தானில் இருக்கிறோமா, அல்லது பாகிஸ்தானில் இருக்கிறோமா?

ஒருத்தர் இந்த இந்துஸ்தான் - பாகிஸ்தான் விடுகதையின் முடிச்சை அவிழ்க்கப் படாதபாடுபட்டு இன்னமும் மோசமான பைத்தியமாகி விட்டார். ஒருநாள் அவர் தரையைப் பெருக்கிக் கொண்டே இருந்தவர் ஓடிப்போய் பக்கத்தில் இருந்த மரத்தில் கிடுகிடுவென ஏறிவிட்டார். ஒரு கிளையில் ஏறி, சாவகாசமாக இரு பக்கமும் கால்களைத் தொங்கப் போட்டு ஆட்டிக் கொண்டு இந்துஸ்தான் - பாகிஸ்தான் பற்றி குத்துமதிப்பாக ஒரு இரண்டு மணிநேரம் நீண்ட உரையாற்றி அதன் நெளிவு சுளிவுகளுக்குள் போய் வந்தார்.

காவலாளிகள் ஓடிவந்தார்கள் - கீழே இறங்கச் சொன்னார்கள்; அவர் இன்னமும் மேலே மேலே ஏறிக் கொண்டே போனார். அவரை மிரட்டினார்கள்; அவர் கொஞ்சமும் கவலைப்படவில்லை: ''எனக்கு இந்துஸ்தானமும் வேண்டாம்; பாகிஸ்தானும் வேண்டாம்... இந்த மரத்திலேயே வாழ்ந்து கொள்கிறேன்.''

பல மணிநேரம் அவரிடம் கெஞ்சினார்கள். பிறகுதான் அவர் கீழே இறங்க ஒப்புக் கொண்டார். கீழே வந்தவர் இந்து, சீக்கிய நண்பர்களை இறுக அணைத்துக் கொண்டு ஓவெனக் கதறிக் கதறி அழுதார். எல்லோரும் தன்னைத் தனியே இங்கே விட்டுவிட்டு இந்துஸ்தான் போய்விடப் போகிறார்கள் என்ற கவலை அவரை வாட்டியது.

லாகூரிலிருந்து ஓர் இளம் இந்து வழக்குரைஞர் இங்கே இருந்தார். காதல்தோல்வி அவரைப் பைத்தியமாக்கிவிட்டது. அமிருத்சர் நகரம் இந்துஸ்தானத்திற்குப் போய்விட்டது என்று தெரிந்ததுமே அவர் இதயம் நொறுங்கி விட்டது. அவரது இந்துக் காதலி அங்கே தான் இருக்கிறாள். காதலி அவரை மறுத்தபிறகும் கூட பைத்திய நிலையிலும் அவர் அவளை மறக்கவில்லை. அதனால், ஒவ்வொரு நாளுமே இந்துஸ்தானத்தை இரண்டாகப் பிளந்த இந்து-முசுலீம் தலைவர்களைக் காது கூசும்படி திட்டித் தீர்த்தார். காதலியை இந்துஸ்தானியாகவும், தன்னை பாகிஸ்தானியாகவும் பிரித்து விரட்டியது, அந்த அயோக்கியர்கள்தானே?

நோயாளிகளைப் பரிமாறிக் கொள்வது பற்றிப் பேச்சு வந்ததும், ஒரு சில பைத்தியங்கள் அந்த வழக்குரைஞரைத் தேற்றினார்கள் — ''இப்போ உன்னை இந்துஸ்தானுக்கு அனுப்பி விடுவார்கள். நீ உன் காதலியைப் பார்க்கலாம், கவலைப்படாதே.'' ஆனால், லாகூரை விட்டுப் போய்விட்டால் அமிருத்சரில் வக்கீல் பிசினஸ் பிராக்டீஸ் கொடிகட்டிப் பறக்காதே. அதுதான் தன் கவலை என்று எல்லோரிடமும் சொன்னார் அந்த வழக்குரைஞர்.

'ஐரோப்பிய வார்'டில் இரண்டு ஆங்கிலோ - இந்தியப் பைத்தியங்கள் இருந்தார்கள். ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டு ஓடிவிட்டார்கள் என்று கேள்விப்பட்டதும் அவர்களுக்குப் பெரிய அதிர்சசி. அடிக்கடி ரகசியமாகக் கூடி இருவரும் பேசுவார்கள். இந்தக் காப்பகத்தில் தங்களுக்குப் பழைய கவுரவமே தொடருமா, தொடராதா? ஐரோப்பிய வார்டு தனியே இருக்குமா, இருக்காதா? காலையில் 'பிரேக் ஃபாஸ்ட்' (சிற்றுண்டி) கிடைக்குமா, கிடைக்காதா? மேல்நாட்டு முறையிலான 'பிரெட்' தருவார்களா? ''பிளடி இந்தியச் சப்பாத்தியத் தின்னுட்டுப் போடா நாயே'' என்று சொல்லி விடுவார்களா?

●●●

இங்கே ஒரு சீக்கியர் - பெயர் பிஷன்சிங். பதினைந்து ஆண்டுகளுக்கும் மேல் அங்கே இருந்தார். அவர் வாய் ஓயாது ஏதோ சொற்களை உருட்டிக் கொண்டே இருக்கும். ''ஓ பார் தி / குர்குர்தி / அனெக்ஸ் தி / பே தியானா தி/ மூங்தி / தால் ஆஃப் தி / லால் தெயின்...'' அவர் இரவிலும் பகலிலும் தூங்கமாட்டார். பதினைந்து வருசத்தில் ஒரு நொடிகூட அவர் கண் மூடி யாரும் பார்க்கவில்லை என்று காவலாளிகள் சத்தியம் செய்தார்கள். அவர் தரையில் படுத்ததே கிடையாது. ஏதாவது ஒரு சுவரில் சாய்ந்து நிற்பார் - அதுதான் அவருக்கு ஓய்வு.

அவரது கால்பாதங்களும், கணுக்கால்களும் வீங்கிக் கிடந்தன. இவ்வளவு உடல் வாதனை இருந்தாலும் அவர் கீழே கிடக்க மாட்டார். காப்பகத்தில் எங்கே எந்த மூலையில் இந்துஸ்தான் - பாகிஸ்தான் விவாதங்கள் சூடாக நடந்தாலும் அவர் நின்று கூர்ந்து கவனிப்பார். யாராவது அவர் கருத்தைக் கேட்டால் ரொம்ப அக்கறையோடு பதில் சொல்வார். அது பெரும்பாலும் இப்படிப் போகும்: ''ஓ பார் தி / குர்குர் தி / அனெக்ஸ் தி / பே தியானா தி / மூங் தி / தால் தி கவர்ண்மெண்ட் ஆஃப் பாகிஸ்தான்.''

பிறகு எப்படியோ 'கவர்ன்மெண்ட் ஆஃப் பாகிஸ்தான்' என்பது மாறி, 'கவர்ன்மெண்ட் ஆஃப் தோபா தேக்சிங்' ஆகிவிட்டது; மற்ற நோயாளிகளைப் பார்த்து அவர் அடிக்கடி கேட்க ஆரம்பித்தார் - தான் பிறந்து வளர்ந்த தோபா தேக் சிங் கிராமம் எங்கே இருக்கிறது என்று. அது பாகிஸ்தானில் இருக்கிறதா, இந்துஸ்தானில் இருக்கிறதா, யாருக்கும் தெரியவில்லை. ஒருசிலர் விளக்க முயற்சி செய்தார்கள். முன்பு இந்துஸ்தானில் இருந்த சியால்கோட் இப்போது

**பாகிஸ்தான் எங்கே இருக்கிறது? கிழக்கே, மேற்கே, தெற்கே, வடக்கே அதன் எல்லைகள் என்னென்ன? எதுவும் அவர்களுக்குத் தெரியாது. முழுப் பைத்தியம் அல்லாத காப்பகத்தின் நோயாளிகள் பலருக்கு ஒரே குழப்பம். இந்துஸ்தானில் இருக்கிறோமா, அல்லது பாகிஸ்தானில் இருக்கிறோமா?**


படிப்பகம்

www.padippakam.com



## சாதத் ஹசன் மேன்டோ

'சாதத் ஹசன் மேன்டோ' பாகிஸ்தான், இந்தியா இரு நாடுகளிலுமே பிரபலமான உருது இலக்கிய உலகில் பெயர் பெற்ற எழுத்தாளர். இவர் 1947-இல் புதிதாக உருவான பாகிஸ்தானுக்குச் சென்றார். நூற்றுக்கணக்கான சிறுகதைகள், வானொலி நாடகங்கள் மற்றும் கட்டுரைகள் எழுதியவர். 1955-ஆம் ஆண்டு மிக மோசமான வறுமைச் சூழலில் பாகிஸ்தானில் இறந்தார்.

அவரது வாழ்க்கையில் மிக முக்கியமான கட்டம்: பகத்சிங்கின் போராட்டங்களும், அவரது ஆதர்சமும், ஜாலியன் வாலாபாக் எழுச்சிப் போராட்டமும். அடுத்ததாகச் சொல்லப்படுவது - முப்பதாம் ஆண்டுகளில் அவர் அலிகார் முசுலீம் பல்கலைக் கழகத்தில் படித்தபோது மாணவர்கள் மத்தியில் இந்தியச் சுதந்திரப் போராட்ட இயக்கங்களும் முற்போக்கு எழுத்தாளர் இயக்கமும் ஏற்படுத்திய தாக்கமும், சோவியத் ரசியா மீது அவருக்கு ஏற்பட்ட ஈர்ப்பும்.

அவரது கதை மாந்தர்கள் பெரும்பாலும் அடித்தட்டு மக்கள் - பஞ்சைப் பராரிகள். உழைப்பாளிகளான முசுலீம், 'இந்து'க்கள் மற்றும் விபச்சாரத்தில் தள்ளப்பட்டு ஒடுக்கப்பட்ட பெண்கள் ஏராளமான பேர் இவரது கதைகளில் சித்தரிக்கப்பட்டார்கள்.

தனது படைப்புக்கள் பற்றி அவர் சொல்லிச் சென்ற புகழ்மிக்க செறிவான வரிகள் இவை:

"நாம் வாழ்கின்ற இந்தக் கால கட்டம் பற்றி நீங்கள் ஏதும் அறியா விட்டால், என் கதைகளைப் படியுங்கள். என் கதைகளை உங்களால் சீரணிக்க முடியவில்லையா, அப்படியானால், இந்தக் காலகட்டமே சகிக்க முடியாத அளவு போய் விட்டது என்று உணர்ந்து கொள்ளுங்கள்..."

பாகிஸ்தானுக்கு வந்துவிட்டது; இன்று பாகிஸ்தானோடு இருக்கும் லாகூர், இந்துஸ்தானுக்கு நாளை மாறிவிடாது என்று யாராவது சொல்ல முடியுமா? ஒருவேளை மொத்த இந்துஸ்தானமும் பாகிஸ்தானாக மாறிவிடுமோ? இன்னொருநாள் இந்துஸ்தானும், பாகிஸ்தானும் சேர்ந்து இரண்டுமே கூட பூமியிலிருந்தே காணாமல் போய்விடாது என்பதற்கு யாராவது உத்திரவாதம் சொல்ல முடியுமா? இப்படியெல்லாம் அவர்கள் குழம்பினார்கள்.

அவர் ஒழுங்காகக் குளிப்பதில்லை. தலைமுடி புதர்போல வளர்ந்து தாடியோடு பின்னிக் கொண்டு பார்ப்பதற்கே அச்சம்தரும் தோற்றத்தோடு திரிந்து கொண்டிருப்பார். ஆனால் அவர் யார் சோலிக்கும் போகமாட்டார். பதினைந்து ஆண்டுகளில் ஒரே ஒரு முறை கூட சக நோயாளிகளோடு சின்னத் தகராறு கூட செய்ததில்லை. காப்பகத்தின் பழைய ஊழியருக்கு அவரைப் பற்றிய மொத்த விவரங்களும் தெரியும். அவருக்கு ஊரில் நிறைய நிலபுலன் உண்டு. தோபா தேக் சிங் பிராந்தியத்தைச் சேர்ந்தவர். எந்த முன் எச்சரிக்கையும் கொடுக்காமல் ஒருநாள் திடீரென்று புத்தி பேதலித்துப் போய்விட்டது; அவரது உறவினர்கள் கைகால்களில் இரும்புச் சங்கிலி போட்டுக் கட்டி இந்தக் காப்பகத்தில் சேர்த்தார்கள்.

மாதமொரு முறை உறவினர் யாராவது வந்து அவரது உடல்நலம் பற்றி விசாரிப்பார்கள்; திரும்பிப் போவார்கள். இப்படி வெகுகாலம் நடந்தது. இந்துஸ்தான், பாகிஸ்தான் கலவரங்கள் தீவிரமான பிறகு அவர்களின் வருகையும் நின்றுவிட்டது.

பிஷன்சிங்கை எல்லோரும் தோபா தேக் சிங் என்றுதான் அழைத்தார்கள். அவரது சிந்தனையில் காலம் தேங்கிப் போனது - என்ன கிழமை, என்ன தேதி, என்ன வருசம் எதுவும் தெரியாது; காப்பகத்துக்கு வந்து எத்தனை வருசமாயிருக்கும் என்பதும் அவருக்குத் தெரியாது. ஆனால் ஒவ்வொரு மாதமும் அவரது உறவினர், நண்பர்கள் வரும்நாள் மட்டும் ஒரு ஊகத்தைப் போல அவருக்குத் தெரியும். அன்று சுத்தமாகக் குளிப்பார், சோப்புப் போட்டு உடம்பு தேய்ப்பார், தலைக்கு எண்ணெய் அள்ளித் தடவிச் சீவுவார், புதிய துணிகள் கேட்டு வாங்கி அணிவார்; உறவினர்கள் என்ன விசாரித்தாலும் பேசாமல் இருப்பார்; அல்லது சிலசமயம் "ஓபார் தி குர்குர்..." என்று உரக்கக் கத்த ஆரம்பிப்பார்.

அவருக்கு அழகான பெண் குழந்தை உண்டு. பதினைந்து வருடங்களில் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பெரிதாகிவிட்டது. இப்போது பூவாய் மலர்ந்த இளம்பெண். பிஷன்சிங்குக்கு அடையாளம் கூடத் தெரியவில்லை. குழந்தையாக அவரைப் பார்க்க வரும்போது அவள் தகப்பனைப் பார்த்த உடனே அழுதுவிடுவாள். பிறகு வரும் போதெல்லாம் உணர்ச்சி மேலிடக் கண்ணீர் ததும்ப தந்தையைப் பார்த்து நிற்பாள்.

இந்துஸ்தான் - பாகிஸ்தான் பிரச்சினை தொடங்கியதும் தோபா தேக் சிங் எந்த நாட்டில் இருக்கிறது என்று கேட்டு நச்சரிக்கத் தொடங்கினார். யாரும் அவருக்குச் சரியான பதில் தரவில்லை. அதைத் தெரிந்து கொள்ள ஒரு தாகம், ஒரு வெறி இப்போதெல்லாம் அவரைப் பிடித்து ஆட்டியது. இப்போது அவரைப் பார்க்கவும் யாரும் வருவதில்லை. முன்பு அவர்கள் வந்தபோதெல்லாம் அவர்கள் வரவை முன்கூட்டியே சொல்வார். இப்போதெல்லாம் அது அவருக்குத் தேவைப்படவில்லை; அவர்கள் வருவதை முன் கூட்டியே ஊகித்துச் சொல்லும் இதயக்குரல் தேய்ந்து தானாகவே அமைதியாகி விட்டது.

ஆனால் அவர் தன் உறவினர்களுக்காக ஏங்கினார். அவருக்கு நிம்மதி தந்தவர்கள் அவர்கள். வரும்போது பழங்களும் இனிப்புகளும் உடுப்புகளும் தந்தவர்கள் அவர்கள். தோபா தேக் சிங் எங்கே இருக்கிறது என்று அவர்களைக் கேட்டிருந்தால் நிச்சயமாக ஓர் அடையாளத்தைச் சொல்லியிருக்கக் கூடும்; தனது நிலபுலன்கள் குவிந்திருக்கும் தோபாவிலிருந்துதான் அவர்கள் வருகிறார்கள் என்று அவர் நம்பினார்.

●●●

மனநோயாளிகளை அவரவர் நாடுகளுக்கு அனுப்புகின்ற தயாரிப்பு முழுமையாக முடிந்து விட்டது. இரண்டு நாடுகளின் தரப்பிலிருந்தும் பட்டியல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டு விட்டன. மாற்றிக் கொள்வதற்கான நாளும் குறிக்கப்பட்டது.

அன்று கடுமையான பனி. அடிக்கடி பனி மழை வீசி வீசித் தொந்திரவு செய்தது. பாகிஸ்தான் தரப்பிலிருந்து இந்து, சீக்கிய மனநோயாளிகளை நிரப்பிக் கொண்ட லாரிகள் போலீசு காவலோடு எல்லை நோக்கி விரைந்தன. கூடவே ஜீப்புகளில் அதிகாரிகள் விரைந்தார்கள். வாகா எல்லையில் அதிகாரிகள் பரஸ்பரம் கைகுலுக்கிப் பேசிக் கொண்



படிப்பகம்

www.padippakam.com



டார்கள்; பரிமாற்றம் தொடங்கி இரவு முழுக்க நடந்தது.

மனநோயாளிகளை லாரிகளிலிருந்து இறக்கி, அந்தந்த அதிகாரிகளிடம் ஒப்படைத்து அவரவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை லாரிகளில் ஏற்றிக் கொள்வதற்குள் முதுகு முறிந்து போனது.

சிலர் தாங்கள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து அசையவே மறுத்தார்கள்; ஒப்புக் கொண்டு வெளியே வந்தவர்கள் திடீரென்று சிதறி எல்லாத் திசைகளிலும் ஓடினார்கள். எப்போதும் அம்மணமாகவே இருந்து பழக்கப்பட்டவர்கள் பலவந்தமாக அவர்களுக்கு ஆடை அணிவிக்கப்பட்டதுமே எல்லாத் துணிகளையும் சுக்கல் சுக்கலாகக் கிழித்து விட்டுப் பழையபடி அம்மணமாக ஓடினார்கள். ஒருத்தர் கெட்ட வார்த்தை போட்டுத் திட்டினால், மற்றவர் சரளமாகப் பாட்டை எடுத்து விட்டார். ஒரு சிலர் ஒண்டிக்கு ஒண்டி வரச் சொல்லிச் சவால் விட்டுச் சண்டையும் போட்டார்கள் — புழுதி பறந்தது. மற்றவர்களில் சிலர் மூசு மூசென்று சத்தமில்லாமல் அழுதார்கள்; சிலர் ஓவென்று ஒப்பாரி வைத்தார்கள். அந்த இடம் ஒரே சந்தை இரைச்சலாக இருந்தது. பெண் மன நோயாளிகள் அவர்களுக்கே உண்டான வசவுகள், ஓலங்களோடு அலைந்து திரிந்தார்கள். பனியின் கடுமையால் பற்கள் கடகடத்துக்கிட்டித்தன. மனநோயாளிகள் இயற்கையின் கடுமை பற்றிக் கவலைப்படவேயில்லை; பெரும்பாலானவர்கள் மாற்றிக் கொள்ள நடத்தப்படும் ஏற்பாட்டையே வெறுத்தார்கள், எதிர்த்தார்கள்.

பிஷன்சிங் முறைவந்தது. எல்லைக்கு அப்பாலிருந்து வந்திருந்த சம்பந்தப்பட்ட அதிகாரி அவர் பெயரைப் பதிவேட்டில் எழுதினார். அவரிடம் பிஷன் சிங் கேட்டார்: ''தோபா தேக் சிங் எங்கே இருக்கிறது?... பாகிஸ்தானிலா? இந்துஸ்தானிலா?''

அந்த அதிகாரி சிரித்தார். ''ஏன் பாகிஸ்தானில்தான் இருக்கிறது?'' என்று சொன்னார். அவ்வளவுதான் தாமதம், பிஷன்சிங் ஒரே பாய்ச்சலில் பாகிஸ்தான் எல்லையில் நின்ற தன் நண்பர்களோடு போய்ச் சேர்ந்து கொண்டார். பாகிஸ்தான் இராணுவத்தினர் அவரைப் பிடித்து எதிர்ப்பக்கம் தள்ள முயன்றனர். ஆனால் பிஷன் சிங் நகர மறுத்தார். ''தோபா தேக் சிங் இங்கே பாகிஸ்தானில்தான் இருக்கிறது!'' என்று சொல்லிவிட்டுக் கத்த ஆரம்பித்தார்: ''ஓ பார் தி / குர்குர் தி / அனெக்ஸ் தி / பே தியானா தி / மூங் தி / தால் ஆஃப் தோபா தேக் சிங் அண்டு பாகிஸ்தான்.''

பாகிஸ்தான் இராணுவத்தினர் சமாதானப்படுத்திப் பார்த்தார்கள். தோபா தேக் சிங் இந்துஸ்தானுக்குப் போய்விட்டது என்றார்கள். பிஷன்சிங் பிடிவாதமாக இருந்தார். இந்துஸ்தான் பக்கம் அவரை வலுவந்தமாக இழுத்தார்கள். இரண்டு எல்லைகளுக்கும் நடுவில் போய் பிஷன்சிங் நின்று கொண்டார் — அவர் கால்கள் பொதுபொதுவென வீங்கி மினுங்கிக் கிடந்தன — இந்த உலகத்தில் எந்த ஒரு அதிகாரத்தாலும் இனி என்றுமே அவரை அந்த இடத்திலிருந்து பிடுங்கி எறிந்துவிட முடியாது என்பது போல அவர் முகத்தில் ஓர் அசாத்திய உறுதி பளிச்சிட்டது.

காப்பகத்தில் அப்பாவிப் பூச்சி என்று பேர் எடுத்தவர் இந்த பிஷன் சிங், அதனால் அதற்கு மேலும் அவரை யாரும் தொந்திரவு செய்ய விரும்பவில்லை. பரிமாற்றம் தொடர்ந்து நடந்தது — அதுவரை பிஷன்சிங் அங்கேயே நின்று விட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டார்கள் போலும்.

●●●

இன்னும் சில நிமிடங்களில் பொழுது விடிந்துவிடும். அந்த நேரத்தில் பிஷன்சிங் தொண்டைக் குழியிலிருந்து பிளிறல் ஒன்று சீறிக் கிளம்பிற்று. அதுவரை கொஞ்சம் கூட அசைவில்லாமல் அவர் நின்றிருந்தார். அதிகாரிகள் ஓடிவந்தார்கள். எந்த மனிதரைக் கடந்த பதினைந்து ஆண்டுகளாக நின்றது நின்றபடி மட்டுமே பார்த்திருந்தார்களோ அதே மனிதர் இப்போது முகம் தரையில் மோதி அழுந்தக் கீழே கிடந்தார்.

அதோ முள் கம்பிவேலிக்கு அப்பால் இந்துஸ்தான்; இதோ முள் கம்பிவேலிக்கு இப்பால் பாகிஸ்தான். இடையே ஒரு துண்டு நிலம் - அதற்கு ஏதும் பெயரில்லை - அங்கே தோபா தேக் சிங் கீழே படிந்து கிடந்தார் - மண்ணை முத்தமிட்டு.

***(நன்றி: 'கதா' நூல் வெளியீட்டகத்தின், ''கறுப்பு ஓரக் கோடுகள் - சாதத் ஹசன் மேன்டோவின் கதைகள்'', தமிழில் (சுருக்கி) மொழி பெயர்த்தவர்: புதூர் இராசவேல்).***

●



படிப்பகம்

www.padippakam.com

# அம்பேத்கரைத் தள்ளி வைத்த தலித்தியம்

● வே. மதிமாறன்

**தலித், தலித்தியம் என்ற சொற்களுக்குத் தலித் சிந்தனையாளர்கள் எனப்படுவோர் பலவிதமான விளக்கங்களையும், விளக்கங்களுக்கான உரைகளையும் அளித்த வண்ணமிருக்கிறார்கள். ஆனால் உரைகள் தேவையில்லாதவாறு தலித்தியம் தன்னைத்தானே நிரூபித்துக் கொண்டு வருகிறது.**

பார்ப்பன எதிர்ப்பில், இந்து மத எதிர்ப்பில் கறாராக இருந்தார் அம்பேத்கர்.

தன் மக்களைத் தவிர்த்து, அல்லது தன் மக்களை திரட்டிக் காட்டி, தான் மட்டும் முன்னேறுவதற்குத் தடையாக இருக்கிறார் அம்பேத்கர்.

ஆனால், இந்தியச் சமூக அமைப்பில், ஒரு தனிநபரின் முன்னேற்றம் பார்ப்பனியத்தோடு - இந்து மதத்தோடு சமரசம் செய்து கொள்ளாமல், 'கூடிக் குலவாமல்' நிகழாது. அதனால் தன்னை மட்டும் முன்னேற்றிக் கொள்வதற்குத் தடையாக, குறுக்கே வந்து நிற்கிறார் அம்பேத்கர்.

'என்ன செய்வது? சந்தர்ப்பவாதத்தையும் முற்போக்காகக் காட்ட என்ன செய்யலாம்?'

'தலித்தியம்' என்று பெயர் வைத்துக் கொள்ளலாம்!

●

தலித்தாக இருக்கிற ஒருவர், கருணாநிதி, ராமதாஸ் போல் மக்கள் விரோதத் தலைவராக -

சுஜாதா, சுந்தர ராமசாமி போல் மக்கள் விரோத எழுத்தாளராக ஆவதற்கு -

அவர்களைப் போலவே எந்த மாதிரியான சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம். தவறில்லை.

அப்படிப் பயன்படுத்திக் கொள்வதை மற்றவர்கள் 'சந்தர்ப்பவாதம்' - 'பிழைப்புவாதம்' என்று சொல்லி கொச்சைப்படுத்தக் கூடாது.

அப்படியானால் அதை எந்தப் பெயர் கொண்டு சொல்வது?

அழகாக, முற்போக்காக, 'தலித்தியம்' என்று சொல்லலாமே!

வரலாறு நெடுக சந்தர்ப்பவாதத்திற்குப் பல புனைப்பெயர்கள் உண்டு. அதன் சமீபத்திய பெயர் 'தலித்தியம்'.

●

சரி, முழுக்க முழுக்க, தலித் மக்களுக்கு மட்டும் துரோகம் செய்து சந்தர்ப்பவாதத்தை - பிழைப்புவாதத்தைப் பயன்படுத்தி... மன்னிக்கவும் 'தலித்தியத்'தைப் பயன்படுத்தி தான் மட்டும் முன்னேறுவதற்குக் குறுக்கே நிற்கிறாரே அம்பேத்கர், அவரை எப்படிக் குப்புறத் தள்ளுவது?

'இந்து மதம் மட்டும்தான் மோசமானதா? பார்ப்பனர்களும் மனிதர்கள் தான். கிராமங்களில் தலித் மக்களின் குடிசைகளைப் பார்ப்பனர்களா கொளுத்துகிறார்கள்? அம்பேத்கர் சொல்லிவிட்டதற்காகக் கண்மூடித்தனமாகப் பார்ப்பனர்களை நாம் எதிர்க்க வேண்டியதில்லை' என்று நேரடியாக அம்பேத்கரை எதிர்கொள்ளலாம்.

அப்படி எதிர்கொண்டால், இவர்களின் நிழலே இவர்களை விரட்டியடிக்குமோ என்ற பயத்தினால், பார்ப்பனியத் தந்திரத்தோடு அம்பேத்கருக்கு நேர் எதிரானவர்களை இவர்களின் சந்தர்ப்பவாதத்திற்கு... மன்னிக்கவும், 'தலித்தியத்'திற்குப் பொருத்தமானவர்களை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் விழுகிற நிழலில் அம்பேத்கரை இருட்டடிப்புச் செய்வது.

அதைத் தலித்திய தத்துவ வார்த்தைகளில் சொல்வதானால் ''பிற்படுத்தப்பட்ட பெரியார், நம் தலைவர்களை (உட்சாதி) இருட்டடிப்பு செய்துவிட்டார். அவர்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவோம்'' என்று பெரியாருக்கு எதிராக* அரசியல் நடத்துவதாகச் சொல்லி அம்பேத்கருக்கே குழி தோண்டுவது. தலித் மக்கள் ரெட்டைமலை சீனிவாசன், அயோத்திதாசர் இவர்களைப் புறக்கணித்துவிட்டு, பெரியாரை ஏற்கவில்லை. அம்பேத்கரைத் தான் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது. (பெரியாருக்கு எதிராகப் பயன்படுத்துகிற ஒவ்வொரு சொல்லும் அம்பேத்கரையும் போய்ச் சேரும்).

## குழிதோண்டும் முறைகள்

''தெளிவற்ற சொற்கள் எனக்குப் பிடிக்காது'' என்று சொன்ன அம்பேத்கருக்கு இணையாக, இவர்களைப் போலவே குழப்பமான சொற்களுக்குச் சொந்தக்காரரான அயோத்திதாசரை நிறுத்திக் குழப்புவது.

வேத, பார்ப்பனிய இந்து மத எதிர்ப்பில் தோன்றியதுதான் பவுத்தம். ''தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்றால், இந்து மதத்தை ஒழிக்க வேண்டும். அதனால் புத்த மதத்திற்கு மாறுங்கள்'' என்று தலித் மக்களுக்கு வழிகாட்டிய அம்பேத்கரைக் குப்புறத் தள்ளி, ''புத்த மதத்தில் இருந்து தோன்றியதுதான் இந்துமதம்; புத்தரே சிவனின் அவதாரம்'' என்று புத்தரை இந்து மதத்தோடு சேர்த்துக் கட்டிய 'வேஷ பிராமணர்' அயோத்திதாசரின் இந்து பவுத்தத்தை, அம்பேத்கரின் இந்து எதிர்ப்புப் பவுத்தத்தை விட உயர்வாகக் காட்டுவது.

'அம்பேத்கருக்கே முன்னோடி அயோத்திதாசர்' என்று சித்தரிக்க முயல்வது.

'ஒழித்துக் கட்டுங்கள் இந்து மதத்தை' என்று அம்பேத்கரின் வழி காட்டுதல் இருக்க, அதற்கு எதிராக இந்து மதத்தோடு சமரசமாக வாழ்ந்து, அம்பேத்கருக்கே குழி பறித்த எம்.சி. ராஜாவை அம்பேத்கரின் இடத்தில் வைத்து அழகு பார்ப்பது. தன்னுடைய தனிப்பட்ட முன்னேற்றத்திற்காக, வரலாறை, தத்துவத்தைப் பின்னோக்கி இழுப்பது.

பிற்போக்கையே முற்போக்கு என்று உயர்த்திப் பிடிப்பது. 'ஏன் இந்த மோசடி?' 'ஏன் இந்தத் தலித் துரோகம்?' என்று எதிர்த்தால்,

'இது தலித்துகளின் ராஜதந்திரம், பொறாமையால் இதை எதிர்ப்பவன் தலித் விரோதி' என்று மீண்டும் அவதூறுகளையே பதிலாக அள்ளி வீசுவது.

இந்தச் சந்தர்ப்பவாத 'தலித்தியத்'தை ஆதரிப்பவன் தலித் மக்களை, அவர்களின் உடைமைகளைக் கொளுத்தியவனாக இருந்தாலும் அவன் தலித் ஆதரவாளன்.

இப்படித்தான் மூப்பனாரின் ஆசி பெற்றது 'தலித்தியம்'.

●

தலித் அல்லாத, தலித் ஆதரவு அறிஞர்கள் மத்தியில், திட்டமிட்ட ஒரு நாடகம் நடக்கிறது.

www.padippakam.com

தலித் மக்கள் மீது ஜாதிவெறியர்களின் தாக்குதல்கள் நடந்தபோது, அதை எதிர்த்து இந்த அறிஞர்கள் முழங்கியதை விடவும், இன்னும் நெருக்கிச் சொல்ல வேண்டுமானால் அன்று கருணாநிதியின் ஆட்சியில் அவரின் ஏவல் துறை (போலீசு) தாமிரபரணி ஆற்றில் தலித் மக்கள் சாகும்வரை அவர்கள் மீது தடியடி நடத்தியபோது அந்தக் கொடூரச் சம்பவத்தை இந்த அறிஞர்கள் கண்டித்ததைவிடவும், இன்று 'தலித் கட்சிகளுக்கு கருணாநிதி தேர்தலில் சீட்டுத் தரவில்லை' என்பதைக் கோபம் கொப்பளிக்கக் கண்டிக்கிறார்கள், இந்தப் பிற்படுத்தப்பட்ட அறிஞர்கள்.

ஆம், இன்றைய தலித் அரசியல், சந்தர்ப்பவாத உச்சியில் இருப்பதைப் பார்த்து, உச்சிமீது வைத்துக் கொண்டாடுகிறார்கள் அறிஞர்கள். இது அவர்களுக்கு மகிழ்ச்சி மட்டுமல்ல, இப்படியாகத் தங்களை மிகப் பெரிய தலித் ஆதரவாளர்களாகக் காட்டிக் கொள்வதன் மூலமாகத் தங்களின் தலித் விரோத சிந்தனையை அல்லது சுய சாதி உணர்வை மறைத்துக் கொண்டு தன்னை முற்போக்காளனாகக் காட்டிக் கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பம் அல்லவா?

சந்தர்ப்பவாதத்தை சந்தர்ப்பவாதங்கள் ஆதரிக்கின்றன.

•

ஆக, இந்த தலித் அரசியலில் யாருக்கெல்லாம் இடமுண்டு?

அமெரிக்க ஏகாதிபத்தியத்தையே நடுநடுங்க வைத்த ஏகாதிபத்திய எதிர்ப்பாளன் சுப்பிரமணியசாமிக்கு இடமிருந்தது.

தலித் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் சுந்தர ராமசாமி என்கிற எழுத்துப் போராளிக்கு இடமுண்டு.

'மாயாவதி என்கிற தலித் பெண்ணை ஒழித்துக் கட்டாமல் ஓயமாட்டேன்' என்று முழங்குகிற தலித் ஆதரவாளர் முலாயம்சிங் கோனாருக்கு தலித் அரசியலில் பங்கெடுக்க அழைப்புண்டு.

தலித் தலைவர்களுக்கு ஒரு தெளிவான வழிகாட்டிய 'காம்ரேட்' கண்ணப்பன் யாதவ்விற்கும் பங்குண்டு.

தலித் விடுதலைக்காகத் தாமிர பரணி ஆற்றங்கரையில் போராட்ட வகுப்பு நடத்திக் காட்டிய கருணாநிதிக்கு இடமிருந்தது.

வடமாவட்டங்கள் முழுக்க உள்ள பாட்டாளிகளான தலித் மக்களுக்கு நெருப்பின் பயங்கரம் பற்றிச் செயல் முறைப் பாடம் நடத்திய டாக்டர் ராமதாசுக்கு இடமிருந்தது.

முத்துராமலிங்கத் தேவரய்யா காட்டிய வழியில் தலித் விடுதலை அடைய உழைத்த டாக்டர் சேதுராமனுக்கு இடமிருந்தது.



**புத்தரை இந்து மதத்தோடு சேர்த்துக் கட்டிய அயோத்திதாசரின் 'இந்து பவுத்தத்தை' உயர்வாகக் காட்டுகிறார்கள். "தீண்டாமையை ஒழிக்க வேண்டுமானால் இந்து மதத்தை ஒழிக்க வேண்டும்" என்று வழிகாட்டிய அம்பேத்கரையோ குப்புறத் தள்ளுகிறார்கள்.**

இவர்கள் எல்லோரையும் விட தலித் விடுதலைக்கு 'ஆயுதம் தாங்கி எப்படிப் போராடுவது?' என்று இரகசிய ஆலோசனை தந்த, தலித் இயக்கங்களின் தலைமறைவு இயக்கத் தலைவர் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கும் இடமுண்டு.

ஆனால்,

மேற்சொன்ன இந்த தலித் ஆதரவாளர்களின் எதிர்ப்பான டாக்டர் அம்பேத்கருக்கு தலித் அரசியலில் எப்போதுமே இடமில்லை. சுவரொட்டியில் மட்டும்தான் இடமுண்டு.

காரணம், அவருக்குத்தான் சந்தர்ப்பவாதம் தெரியாதே, மன்னிக்கவும், 'தலித்தியம்' தெரியாதே.

•

** 'ரெட்டை மலை சீனிவாசன், அயோத்திதாசர், எம்.சி. ராஜா இவர்களை பெரியார் இருட்டடிப்பு செய்து விட்டார்' என்று ஆதாரத்தோடு புளுகுகிறார்கள் அறிஞர்கள். 'காரணம், இவர்கள் தலித்துகள்' என்ற காரணமும் சொல்கிறார்கள்.*

*இன்று தலித் தலைவர்கள் என்று தம்மை நியமித்துக் கொண்டுள்ளவர்கள் தங்களது சந்தர்ப்பவாதத்தை ஆதரிக்காத அனைவரையும் தலித் விரோதிகள் என்று முத்திரை குத்துகிறார்கள். இதே முத்திரைதான் பெரியார் மீதும் குத்தப்படுகிறது.*

*இதே முத்திரையை அம்பேத்கர் மீதும் குத்தலாம். தற்போது தலித்தியவாதிகள் அயோத்திதாசரின் பவுத்தத்தைச் சிலாகிக்கிறார்கள். ஆனால், டாக்டர் அம்பேத்கர் அதைப் பொருட்படுத்தவில்லை. அதே காலத்தில் வாழ்ந்த லட்சுமி நரசு எழுதிய பவுத்த நூலை 'குறிப்பிடத்தக்க நூல்' என்று குறிப்பிடுகிறார். அதுமட்டுமல்லாமல், தன் முன்னுரையோடு அந்த நூலைப் பதிப்பித்துமிருக்கிறார் அம்பேத்கர்.*

*அயோத்திதாசர் தலித் என்பதற்காக அவர் கருத்தை அம்பேத்கர் ஆதரிக்கவும் இல்லை. லட்சுமி நரசு தலித் அல்லாதவர் என்பதற்காக அவரை அம்பேத்கர் தள்ளி வைக்கவும் இல்லை.*

*டாக்டர் அம்பேத்கரே குறிப்பிட்டுப் பாராட்டிய தமிழ்நாட்டுக்காரரான அறிஞர் லட்சுமி நரசுவை, இன்றைக்கு எத்தனைப் பேருக்குத் தெரியும்?*

*அவர் 'நாயுடு' சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பது அந்தச் சாதிச் சங்கத்துக் காரர்களுக்குக் கூடத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.*

*சொல்லுங்கள், இவரையும் பெரியார்தான் இருட்டடிப்புச் செய்தாரா?*

www.padippakam.com

**பா**ர்ப்பன மதவெறியை ஒரு முனையாகவும், சீரழிவுக் கலாச்சாரத்தை ஒரு முனையாக வும், மேட்டுக்குடி அறிவுஜீவி திமிர்த்தனத்தை இன்னொரு முனையாகவும் கொண்டு, தொகாடியா கொடுத்த சூலாயுதத் திற்குச் சற்றும் குறைவில்லாத ஆயுதமான தனது திரைப்படங்க ளின் மூலம் பார்வையாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வருபவர் மணிரத்னம். உயர் தொழில் நுட் பத்தை, அழகியலை மட்டுமல்ல ரசனையைக் கூட அதிக லாபத் திற்கு விற்பனை செய்ய முடியும் என்பதை நிரூபித்த வணிக நிர் வாகஇயல் முதுநிலைப் பட் டதாரி. இம்முறை இந்தியிலும் தமிழிலுமாக விற்பனைக்குக் கொண்டு வந்திருப்பது ஆய்த எழுத்து.




# 'நல்லவர்கள்' வருகிறார்கள்... எச்சரிக்கை!

படப்பிடிப்பு நடக்கும் போதே ''மணிரத்னத்தின் தீவிர அரசியல் படம்'' என்று மர்ம மான கருத்துக்களைப் பத்திரிக் கைகள் மூலம் ஊதி ஊதிப் பெருக்க வைத்த ஆய்த எழுத்து எனும் பலூன் கடைசியில் வெடித்துச்சிதறிவிட்டது.

சில பத்திரிக்கைகள் சரக்கு தீர்ந்து விட்டதோ என்கிற பாணி யில் எழுதியிருக்கிறார்கள். மணி ரத்னம் விற்பது சரக்குதான் என்ப தற்கு இதுவும் ஒரு சாட்சி.

படம் என்ன சொல்கிறது?

ஜென்டில்மேன், இந்தியன், முதல்வன், தளபதி போன்ற படங்களில் அரைத்த மாவுதான். அதன் கலவை தான்.

'தமிழகத்தைச் சீரழித்த திராவிடக் கட்சிகளின்' அழுக்கு அரசியல் மந்திரி யாக செல்வநாயகம் (பாரதிராஜா) இவ ரின் அடியாளாக இன்பா (தாமரைக் கனி மகன் அல்ல - மாதவன்) சேரிப்புற ரௌடி. அவனைத் திருத்துவதற்குப் போராடித் தோற்கும் காதல் மனைவி - நடுத்தரவர்க்கம்.

பலசாலி, ஜீனியஸ், கல்லூரி மாண வர் தலைவன் மைக்கேல் (சூர்யா) வீரன். நாட்டைத் திருத்த மாணவர்கள் அரசியலில் குதிக்க (?) வேண்டும் என்று சொல்பவன். குதிப்பவன். காதலி டெல்லி ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் படித்த சப்பாத்தி மாவு.

இன்னொரு மாணவன் அர்ஜுன் (சித்தார்த்). அப்பா ஐ.ஏ.எஸ். மகன் அமெரிக்கா போகத் துடிப்பவன். பெண் உரசலுக்காக, சுகத்திற்காக, கூசாமல் புளுகுபவன். பொறுக்கி. அதாவது, 'ஜாலிடைப்'. காதலி, டிஸ்கொதேயில் டான்ஸ் ஆடும் குடும்பவிளக்கு.

அர்ஜுனை தன் பைக்கில் லிஃப்ட் கொடுத்து மைக்கேல் இறக்கிவிட்டுச் செல்லும்போது இன்பா மைக்கேலை மூன்று முறை சுடுகிறான் (ஹே ராம்!) இந்தச் சம்பவத்திலிருந்து தான் படம் தொடங்குகிறது.

மைக்கேலைக் காப்பாற்றும் அர்ஜு னுக்கு மைக்கேல் அம்மா நன்றி சொல் வதைக் கேட்டும், மாணவர்களிடம் மைக்கேலுக்கு இருக்கும் புகழைப் பார்த்தும் பரவசமுண்டாகிறது. பிழைத் துக் கொண்ட மைக்கேல், அமைச்சர் செல்வநாயகத்திற்கு எதிராக இடைத் தேர்தலில், 'அரசியல்பத்தி எதுவும் தெரி யாது. இனிமேல் கத்துக் கொள்ள லாம்' என்று கூறும் அர்ஜுன் உள்பட 4 பேரை நிறுத்தி வெற்றி யடைகிறான். நால்வரும் சட்டச பைக்குள் நுழைகிறார்கள். அமைச்சர் (இப்போது பதவி போன எம்.எல்.ஏ) வரவேற்கி றார். 'லட்சியத்தோடு இங்க நுழைஞ்சவங்க உன்னப் போல எத்தனையோ பேர்'' என்று சொல்பவரை ஒதுக்கிவிட்டு எம்.எல்.ஏ இருக்கையில் அமர்கி றான் மைக்கேல். படம் முடிகி றது.

இன்பா, மைக்கேல், அர்ஜுன் ஆகியோர் தற்செயலாகச் சந்திக் கும் இந்தப் புள்ளியிலிருந்து தொடங்கி, ஒவ்வொரு கதாபாத் திரத்தின் கதையையும் தன் சொந் தப் பார்வையில் வழங்குகிறார் மணிரத்னம்.

ஆனால் ஒரே சம்பவத்தைத் தத் தம் பார்வையில் விவரித்து 'அ றுதி உண்மை என ஏதுமில்லை' எனக் கூறும் அகிரா குரோசோவாவின் ரோஷமான் திரைப்படம் தான் தனக்கு உந்து தல் என்று 'இந்து' நாளிதழுக்கு அளித்த பேட்டியொன்றில் பீலா விடுகிறார் மணி.

ஆனால் சுஜாதா மணிரத்னம் கூட்டணியின் பார்ப்பன - மேட் டுக்குடி வர்க்க பாசமும், திராவி டத் துவேசமும், மக்களை மந்தை களாகக் கருதும் திமிரும் பால் கனியிலிருந்து சேரியைப் பார்க் கும் மேட்டுக்குடி. 'அறிவாளி' களுக்கேயுரிய முட்டாள்தனமும் படம் முழுவதும் மணம் வீசுகிறது. ''ஆங்கி லம் படித்த மேட்டுக்குடி வர்க்கமே நாடாளும் தகுதியும் ஒழுக்கமும் கொண்டது'' என்ற தீர்ப்பை உறுதி செய் யும் நோக்கத்துடன்தான் கதை தயாரிக் கப்பட்டிருக்கிறது.

●●●

**ச**மீபத்திய 'அவுட்லுக்' பத்திரிக்கை யில் தற்போதைய எம்.பி.க்களில் 100 பேர் கிரிமினல்கள் என்று ஒரு கட்டுரை வந்திருக்கிறது. அதே 'அவுட்லுக்கில்' எம்.பி.க்களில் எவ்வளவு பேர் மிகப் பெரிய தொழில் நிறுவனங்களில் பங்கு தாரர்களாக இருக்கிறார்கள் என்பது பற் றியும் கட்டுரை வந்திருக்கிறது. உண்மை யில் இன்றைய நாடாளுமன்றத்தின் முக் கியப் பிரச்சினை இதுதான்.

அதாவது, ஐ.ஏ.எஸ்., முதலாளிகள்,


படிப்பகம்

www.padippakam.com

அரசியல்வாதிகளின் குலக்கொழுந்து கள் (தயாநிதி மாறன், அன்புமணி இராமதாஸ், ராகுல்காந்தி போன்ற) புதிய மேட்டுக்குடி, ஆங்கில, என்.ஆர்.ஐ. தலைமுறை அரசியலை விழுங்குவதே புதிய போக்காக இருக்கிறது. இந்தப் போக்கைக் கொண்டாடுகிறது ஆய்த எழுத்து - அதாவது மைக்கேல், அர்ஜுன் வர்க்கத்தினரை நாடாள அழைப்பதன் மூலமாக.

'அன்பே சிவம்' படத்தில் மாதவன் என்கிற மேட்டுக்குடி இளைஞன், சமூக அக்கறை கொண்ட, நடுத்தர வர்க்க போலி கம்யூனிஸ்டால் சீர்திருத்தப்படுகிறான். ஆய்த எழுத்திலோ 'அன்பே சிவம்' மாதவனின் வர்க்கம், சமூகத்தைச் சீர்திருத்த வருகிறது.

மீட்பருக்காகக் காத்திருக்கும் மந்தைகளாகச் சித்தரிக்கப்படுகிறார்கள் கிராமப்புற ஏழை மக்கள். அவ்வப்போது நகரங்களிலிருந்து பைக்கில் வந்து இறங்கும் அறிவாளி மாணவர்கள், லயோலா கல்லூரியின் தொண்டு நிறுவனச் செயல் வீரர்கள் போன்றோரின் சமூக உணர்வு - சுஜாதா, மணிரத்னத்தின் பார்ப்பனப் பார்வை வழியே உருவான 'அரசியலா'க வெளிப்படுகிறது.

சுஜாதாவின் அறிவியல் அறிவும் அசட்டுத்தனமும் காதலை, 'குரோமோசோம்களின் திருவிளையாடல்' என்றும், உயிர்வேதியல் தொழிற்பாடு என்றும், (Bio-chemical activity) என்றும் மைக்கேலைத் தத்துவம் பேச வைக்கிறது. திருமணம் என்ற 'நிறுவனத்தை' நிராகரிக்கும் புரட்சி வசனம் பேசவைக்கிறது.

காதல் போலவே பேராசை, புகழ் நாட்டம், வன்முறை உணர்வு எல்லாமே உயிர் - வேதியல் தொழிற்பாடுகள் தானே! பிறகெதற்குப் போராட்டம்? அரசியல்?

குடும்பம் போலவே சட்டசபையும் ஒரு நிறுவனம்தானே! குடும்பத்தை நிராகரிக்கும் சூரியாவின் புரட்சி ஏன் சட்டசபையை நிராகரிக்க மறுக்கிறது?

● *ஆண் - பெண் உறவுகளின் வெளிப்பாடுகளை உளவியல் சார்ந்து காட்சிப்படுத்தும் மணியின் அரைநீலத் திறமை இதில் எப்படியிருக்கிறது?*

ரௌடி இன்பாவினுடைய மனைவியின் காதல் அவனைத் திருத்தவில்லையாம். ஆனால் த்ரிஷாவின் காதல் சித்தார்த்தை (ஐ.ஏ.எஸ். மகன்) திருத்துகிறதாம்; சமூக உணர்வு கொள்ளவும் வைக்கிறதாம். உண்மை இதற்கு எதிரானது. சமூகத்துடன் உள்ள உறவு காரணமாக ரௌடிகள் கூட மாறுவதற்கான வாய்ப்புகள் உண்டு - ஆனால், சமூக உணர்வற்ற தனிநபராக, காமநுகர்வாளனாக, உள்ள, அமெரிக்க மோகம் கொண்ட *யுப்பி* வர்க்கம் திருந்த வாய்ப்பே இல்லை. இந்தச் சித்தரிப்பும் கூட மணிரத்னம், சுஜாதா கும்பலின் வர்க்கப் பாசத்தைத்தான் அசிங்கமாக வெளிக்காட்டுகிறது.



**சுஜாதா, மணிரத்னம் கூட்டணியின் பார்ப்பன - மேட்டுக்குடி வர்க்க பாசமும், திராவிடத் துவேசமும், மக்களை மந்தைகளாகக் கருதும் திமிரும், பால்கனியில் இருந்து சேரியைப் பார்க்கும் மேட்டுக்குடி. 'அறிவாளி'களுக்கேயுரிய முட்டாள்தனமும் படம் முழுவதும் மணம் வீசுகிறது.**

பார்வையாளனிடம் எந்த ஒரு உணர்ச்சியையும் (எரிச்சலைத்தவிர) தோற்றுவிக்காமல் ஒரு சர்க்கஸ் போல படம் இருப்பதின் காரணம், மணிரத்னத்தின் அழகியல் தொழில்நுட்பங்கள் இந்தப் படத்தின் அடிப்படையாய் இருப்பதினால் அல்ல.

செயற்கை ரோஜாவின் இதழ்களும், வடிவமைப்பும், வண்ணமும், திருத்தமாக, நேர்த்தியாக இருப்பதினால் தானா அது இயற்கை ரோஜாவைப் போல மணக்காமல் போனது? இல்லை. செயற்கை ரோஜா மணக்காமலிருப்பதற்குக் காரணம் அதன் உள்ளடக்கம் - பிளாஸ்டிக் - என்பதால்தான். உள்ளடக்கத்திற்கும் உண்மைக்கும் உள்ள தூரம் தான் செயற்கை ரோஜாவை மணமற்றதாக்குகிறது.

சுயமைத்தனமும், சுயநலமும் நிறைந்த வேடதாரிகளான இவர்களின் மக்கள் நலன் குறித்த மன வேதனை வெளியிடும் அழகியல், வயிற்று வேதனையின் காரணமாக வெளிவரும் காற்றைப் போலவே நாறுகிறது.

மணிரத்னம் தற்கால அரசியலை அழுக்குப் பிடித்த அரசியல் என்கிறார். எந்த அரசியல் என்பதுதான் கேள்வி. இந்த சட்டமன்ற, பாராளுமன்ற அரசியலென்றால், இதை அழுக்காக்கியது திராவிடக் கட்சிகள் மட்டும்தானா எனக் கேட்கிறோம். நல்லவர்கள், படித்தவர்கள், யோக்கியர்கள் அரசியலுக்கு இனிமேலாவது வரவேண்டும் என்கிறார். அப்படியானால் நேரு முதல் மன்மோகன் சிங் வரை, ராஜாஜி முதல் ஜெயலலிதா வரையிலான படித்த அயோக்கியர்கள் தானே நாடாளுமன்ற அரசியலின் மூதாதையர்கள்!

''எம்.ஜி.ஆரின் கனவை நிறைவேற்றி ஜெயலலிதா அடைந்த ஆனந்தம்'' என்கிற உச்சக்கட்டக் காட்சியோடு 'ஆனந்தம்' என்றொரு படம் எடுத்து, ஜெ. முதல்வரானதும் சமர்ப்பிக்க இருந்த வேளையில், எதிர்பாராமல் கருணாநிதி முதல்வரானதால், 'ஆனந்தம்' 'இருவர்'ாகி, ''அரசியலால் பிரிக்கப்பட்டுத் துயரம் கொண்ட நண்பர்கள் இருவர்'' என்கிற உச்சகட்டக் காட்சியாக மாற்றினார் யோக்கியர் மணிரத்னம்.

ஏனென்றால், மணிரத்னம் - சுஜாதா - சோ வகையறாக்களின் மனதில் உறைந்திருக்கும் வெறுப்பு திராவிடத்தின் மீதான வெறுப்பு.

●●●

**ஆ**சியாவின் பொருளாதார மேதை, ஹார்வர்டு பட்டதாரி, உச்சநீதிமன்ற வழக்குரைஞர், இலக்கியவாதி, செட்டிநாட்டுச் சீமான் ப.சிதம்பரம் — அடிதடி தவிர அனைத்தும் கற்ற ஆய்த எழுத்து நாயகன் — கழிசடை ரஜினியின் பாபா படப்பெட்டியை வரவேற்க காரைக்குடி ரயில் நிலையத்தில் காத்து நின்றார்.

ஒரிஜினல், அக்மார்க் கழிசடை யாரென்று தெரிகிறதா?

● **குருசாமி மயில்வாகனன்**


படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை:



# டைகர் பாம்

"அன்புள்ள சகுந்தலாவுக்கு... பிள்ளையைப் பார்த்துக் கொள். இப்போது ஆறுமுகம் பத்தாவது முடித்திருப்பான். எந்தப் படிப்பில் சேர்ந்தால் நல்லது? பாலிடெக்னிக் சேர்க்கலாமா அல்லது வேறு பள்ளிக்கூடத்தில் சேர்க்கலாமா என்ற விவரங்களை எதிர்த்த வீட்டு ராமமூர்த்தி அய்யரிடம் கேட்டு அதன்படி செய்யவும். அதற்கேற்றாற் போல் நான் பணம் அனுப்புகிறேன்.

பட்டீஸ்வரம் மூர்த்தியிடம் சொல்லி அறுப்பு முடிந்தால் பத்தாயத்தில் எட்டு மூட்டை நெல் போடச் சொல்லவும். வழக்கம் போல நான் அவருக்குப் பணம் அனுப்பி விடுகிறேன். கப்பல் இப்போது ஜப்பானில் உள்ளது. இங்கிருந்து தாய்லாந்து போகும், தாய்லாந்து சென்றவுடன் கடிதம் எழுதுகிறேன்.

அக்கிரகாரமாக இருந்தாலும் எதிர்த்த வீட்டு அய்யரும், மாமியும் வித்தியாசமில்லாமல் பழகுவதாக நீ எழுதியிருந்ததைப் பார்த்து ஆறுதலாக இருந்தது. ராமமூர்த்தி அய்யர் கேட்டிருந்த மாதிரி இங்கிலாந்தில் இருந்தபோதே அவருக்கு ஒரு நல்ல சொட்டர் வாங்கி வைத்துள்ளேன். நான் வரும்போதோ அல்லது வலங்கைமான் ரவி ஊருக்கு வரும்போதோ கொடுத்து அனுப்புவதாகச் சொல்லவும். ராமமூர்த்தி அய்யர், மங்களத்து மாமியையும் நலம் விசாரித்ததாகச் சொல்லவும்.

ஆறுமுகத்தை ஒழுங்காகப் படிக்கச் சொல்லவும், சைக்கிளில் பார்த்துப் போகச் சொல், எனக்கு அதுவேறு கவலையாக உள்ளது. இந்தமுறை நான் கப்பலுக்கு வந்தபோது ரயில்வே ஸ்டேசனில் ஆறுமுகத்தின் முகமே சரியில்லை. கவலையாக இருந்தான்.

என்ன செய்வது? நான்தான் நாலு எழுத்து படிக்காமல் உங்களையெல்லாம் விட்டு கடல்தாண்டி வந்து உழைக்க வேண்டியுள்ளது. ஆறுமுகத்தை நன்றாகப் படிக்கச் சொல்லவும். அவனுக்கு என்ன வேண்டும் என்பதை கைப்பட எழுதச் சொல்லவும், இந்த முறை நான் ஊருக்கு வர ஒன்றரை வருடம் ஆகும். நீங்கள் கவலைப்படாமல் இருக்கவும்..."

முழுக் கடிதத்தையும் படித்து முடிக்கையில் முந்தானைத் தலைப்பில் அம்மா மூக்கைச் சிந்திக் கொண்டார்.

"என்ன ஆத்துக்காரர்கிட்டேர்ந்து கடுதாசி வந்துர்க்கா! காத்தாலேயே போஸ்ட்மேன் கைல வெளிநாட்டுக் கவரப் பார்த்தேன்", சொல்லிக் கொண்டே எதிர்த்தவீட்டு மங்களத்து மாமி வீட்டுக்குள் வந்தார்.

"வாங்க மாமி. ஆமாம், ஆறுமுகம் அப்பாகிட்டேருந்துதான்" - அம்மாவின் கண்கள் கலங்கியிருப்பதை மங்களத்து மாமியும் கவனித்து விட்டார்.

"ஏன் சகுந்தலா அழுதுண்டு! பகவான் எல்லார் தலைலயும் ஒரே மாதிரி யாவா எழுதியிருக்கார்? உன் ஆத்துக்காரருக்கு கடல் கடந்து போகணும்னு இருக்கு. பக்கத்துலே இருந்தா போதுமா? எங்காத்துக்காரர் மாதிரி எல்லாம் படிச்சும் இங்கவே கெடந்து என்ன சமத்தா சேத்துண்டார்? அவா உப்புத் தண்ணில கெடந்து சம்பாதிக்கிறது உங்களுக்காகத்தானே? ஆறுமுகம் படிச்சு பெரிசா வந்தா அவன் அப்பா இங்கியே இருந்துடப் போறார்! கொஞ்ச நாள் தானே? எங்க கோபால் மாதிரி இல்லை, இவனும் சமத்தா படிக்கிறானோ இல்லியோ? ஏன் வீணா விசனப்படறே? நாங்கெல்லாம் தாயா புள்ளையாப் பழகுறோம், இருக்குறோம், ஏன் கண் கலங்கிண்டு? சிரமம் இருக்கிறதுதான், இல்லேங்கல. அதையே நெனச்சிண்டு இருந்தா மனசுக்குத்தான் பாரம், தைரியமா இருங்கோ!"



படிப்பகம்

www.padippakam.com

மாமியின் பேச்சில் நேசம் தெரிய அம்மாவுக்கு ஆறுதல் கிடைத்த மாதிரி இருந்தது. எனக்கும் நெகிழ்ச்சியானது.

''சகுந்தலா அப்புறமா வர்றேன். மாமா டாண்ணு டயத்துக்கு சாப்பிட வந் திடுவார். வரேன். ஆறுமுகம், கோபால் சந்தி பண்ணின்டு வந்து எங்கயாவது வெளையாட கூப்புட்டான்னா போகாத, அதான் அடங்க மாட்டேங்கறது. நீயா வது கைய, காலக் கழுவிண்டு, நெத்தில துன்னூற வச்சிண்டு படிக்க உக்காரு! அவன் கூப்டான்னு நீயும் விளையாட வந்துடாத. உங்கப்பா உப்புத் தண்ணில கெடந்து சம்பாதிக்கிறார். புரியறதா. ஒழுங்கா படிச்சுக்க. உன்னப் பாத்தாவது கோபாலுக்குப் புத்தி வரட்டும்.''

மாமி போய் நெடுநேரமாகியும் கோபால் வரவேயில்லை. நானும் படிக்க ஆரம்பித்தேன்.

''பார்றா! என்னமோ அக்கிரகாரத் துக்கு வந்தா சரியாப் பழகமாட்டாங் கன்னு கீழத்தெரு காலிப்பய சொன் னான்னு அதக் கேட்டுக்கிட்டு உளறி னயே! கீழத் தெருவுல இருந்தியே, இந் தப் பழக்கம் உண்டா உனக்கு? சாயங் காலம் ஆனா பசங்களோட சேர்ந்து பம் பரம் குத்துறதும், பளிங்கு விளையாடற தும், கால்ல தெரு மண்ணையே பூட்சு போட்டுக்கிட்டுல நிப்ப, என்னய்க்காச் சும் படிக்க உக்காருவியா? பாரு எவ்ளோ அந்நியோன்யமா பழகு றாங்க, பெத்தபுள்ள மாதிரி புத்தி சொல் லிட்டுப் போறாங்க, பாரு!

''அதுக்குத்தான உங்க அப்பாகிட்ட தலையால அடிச்சிகிட்டேன், வீடு வாங் குனா வேற எங்காவது வாங்குங்கன்னு. அங்க இருந்தா தினம் குழாயடில ஒருத் திய ஒருத்தி மயித்த புடுச்சிகிட்டு நிக்கிற தும், நண்டு சிண்டுலேர்ந்து கெட்ட வார்த்தை பேசிக்கிட்டு அலையறதும்... எங்க நீயும் கெட்ட வார்த்த பேச ஆரம் பிச்சிடுவியோன்னு பயந்தேன். பெரிய வங்களே பேசறப்போ, புள்ளைங்க எங்க உருப்புடுறது?

''நீ என்னடான்னா இங்க வந்தது லேர்ந்து மீனு, கறின்னு கேக்குற.... இது அக்கிரகாரம்ல, அவங்க அருவருப்புப் படமாட்டாங்களா? எப்பயாவது தின்னா போறும். நாமளும் அவங் களுக்குப் புடிக்காதத வுட்டாதான சரிக் குச்சமமா பழகுவாங்க. நாம கொஞ்சம் அப்புடி இருக்குறதாலதான் மங்களத்து மாமி அருவருப்பு பாக்காம ஒரு தக்கா ளியோ, கத்தரிக்காயோ கேட்டு வாங் கிட்டுப் போறாங்க பாரு.''

அம்மா சொன்னது சரியாகப்பட் டது. மங்களத்து மாமி மகன் கோபாலும் ஒரே வகுப்பில் படித்ததில் நெருக்கம் இன்னும் அதிகமானது. கோயிலில் உட் கார்ந்து படிக்கப் போவதிலிருந்து, ஆத் துக்குக் குளிக்கப் போவது வரை கோபா லும் நானும் சேர்ந்தே கிடப்போம்.

●●●

''ஏய் இங்க பாரு அப்பாவுக்கு லெட்டர் எழுதியிருக்கேன். கீழ கொஞ் சூண்டு இடம் விட்டிருக்கேன். நீயும் எழுதி அப்பா அட்ரஸ் இங்கிலீஸ்ல இருக்கும் பாரு, அதையும் பாத்து நிதா னமா எழுதி தா. உங் கையெழுத்து வேற கிறுக்குன மாதிரி இருக்கும். அட்ரஸ் புரியாம போயிடப் போவுது. இல் லேன்னா கோபால்கிட்ட கொடுத்து அட்ரஸ எழுதி வாங்கிட்டு வா.''

''நீ என்னடான்னா இங்க வந்ததுலேர்ந்து மீனு, கறின்னு கேக்குற.... இது அக்கிரகாரம்ல, அவங்க அருவருப்புப் படமாட்டாங்களா? எப்பயாவது தின்னா போறும். நாமளும் அவங்களுக்குப் புடிக்காதத வுட்டாதான சரிக்குச்சமமா பழகுவாங்க.''

''இல்லம்மா நானே பாத்து எழுதித் தாரேன்.''

அம்மாவின் உணர்ச்சிக்கேற்றவாறு கடிதத்தில் உள்ள எழுத்துக்களும் ஓரி டத்தில் நின்றும், அடித்துத் திருத்தியும், பிறகு நெருக்கமாகவும் வளைந்து நெளிந்தும் பசை ஒட்டும் இடம் தவிர மற்ற இடம் முழுவதும் கடிதம் நிரம்பி வழிந்தது. வழக்கம்போல ஒரு ஐந்து வரிக்கு இடம் பாக்கி இருந்தது.

''அப்பா நான் நன்றாகப் படிக்கி றேன். அம்மா பேச்சைக் கேட்டு நடக்கி றேன். நீங்கள் உடம்பைப் பார்த்துக் கொள்ளவும். கவலைப்பட வேண்டாம். நன்றாக இருக்கிறோம். உடம்பைப் பார்த்துக் கொள்ளவும். உங்கள் உடம் பைப் பார்த்துக்கொள்ளவும்.'' திரும்பத் திரும்ப எழுதியதைத் தவிர வேறு என் னென்ன வேண்டும் என்று கூட எனக்கு எழுத வரவில்லை.

''என்னடா அப்பாவுக்கு கடதா சியா?''

''வாங்க மாமி...''

''என்ன, நல்லா இருக்கோம். நல்லா இருக்கோம்னு அதையே திரும்பத் திரும்ப எழுதுறான். என்ன வேணும்னு கேட்டு அவங்களும் ஒவ்வொரு நாட் லேர்ந்தும் எழுதுறாங்க. இவன் பேனா வைத் தவிர வேற கேட்டு எழுதுறதில்ல. எனக்கும் என்னா புரியுது?'' அம்மா சிரித்துக் கொண்டே விளக்கினார்.

''அப்பாவுக்கு செலவு எதுக்குன்னு நெனைக்கிறாம் போல. சமத்து, ஏம்ப்பா, அப்பா ஜப்பான்ல இருக் கார்னு சொன்னியே அங்க எலக்ட்ரா னிக்ஸ் குட்ஸ் நன்னா இருக்கும். கால்கு லேட்டர், இந்த பி.பி. (B.P.) கண்ட்ரோல் பெல்ட் இருந்தா வாங்கி வரச் சொல் லேன். மாமி கேட்டான்னு எழுது. தாய் லாந்து போனார்னா அங்க குடையெல் லாம் நன்னா ஃபேஷனா இருக்கும், ரெண்டு பூப்போட்ட குடையும், அப்ப டியே நல்ல லேடிஸ் பர்ஸ் இருந்தா வாங்கி வரச் சொல்லி எழுது. ஏதோ நான் வேறப்பா, விகற்பம் இல்லாம சொல்லிட்டேன், எங்கெ, லெட்டர்ல எட மில்ல போலருக்கே, இல்லேன்னா விட்ரு.. நோக்கு எதுக்கு சிரமம் பாவம்!'' மங்களத்து மாமி கடிதத்தை எட்டிப் பார்த்து முகபாவம் காட்டினார்.

''ஏன் மாமி அவன் என்ன எழுதிட் டான் இடம் அடைய? பாருங்க, நாலு வரிய அடைச்சி எழுதியிருக்கான். ஏண்டா இப்படி எழுதிட்டியே மாமி சொன்னத எங்கயாவது எழுதேண்டா? அப்பா வர்றப்ப வாங்கி வருவாங் கல்ல...'' அம்மா பரபரத்தாள்.

''வேணாம் சகுந்தலா இடமில் லேன்னா வுட்ரு. என்னாலே ஏன் சிர மம்?''

''அட, நீங்க வேற...'' அம்மா கடி தத்தை ஆராய... இதற்குள் மாமி குறுக் கிட்டார். ''தோ அங்க மடிப்புப் பக்கம் இருக்கோன்னோ, அங்க கூட எழுத லாம் பாரு, செத்த கடுகு போல எழு துடா கண்ணா... நன்னா புரியற மாதிரி எழுது, திருத்தமா.''

எந்த நாட்டில் என்ன கிடைக்கும், எதைக் கேட்டு எழுதவேண்டும் என்று எனக்குக் கூடத் தெரியவில்லை. மங்

www.padippakam.com

களத்து மாமி இந்த விவரங்களையெல்லாம் தெரிந்து வைத்திருந்தது எனக்குப் பிரமிப்பாக இருந்தது.

''ஆறுமுகம், செத்த முக்கியமா, மறக்காம ஒரு வரி அந்த டைகர்பாம் வாங்கிட்டு வாங்கோன்னு எழுது. போனமுறை வந்தப்ப கொடுத்த டைகர் பாமை ஆத்துல வர்றவா, போறவாள் லாம் சுண்ணாம்பு மாதிரி வழிச்சுத் தடவிண்டு போய்ட்டா, என்னமோ சகுந்தலா, எங்காத்து மாமாவும் ஜண்டுபாம், கிண்டுபாம்னு என்னென்னமோ வாங்கிப் பாத்துட்டார். எதுவும் சரி கிடையாது, தலைவலியும் போறதில்லை. பிசுபிசுன்னு ஒட்டிண்டு சும்மா தடவினம்னு பேருதான். ஆனா இந்த டைகர் பாம் குணமே தனி. எவ்வளவுதான் தடவேன், சுத்தமா ஒட்டாது, தலைவலியும் பறந்து போய்டறது''

அம்மாவிடம் டைகர்பாம் பாட்டில் வாங்கி கொஞ்சம் எடுத்துத் தடவிக் கொண்ட பிறகு மங்களத்து மாமி நடையைக் கட்டினார்.

●●●

வழக்கம்போல படிப்பதற்காக திண்ணைப் பக்கம் நாற்காலியைத் தூக்கிக் கொண்டு போய் உட்கார்ந்து புத்தகத்தைப் புரட்டினேன். முன்னிரவு கவ்விய மாலை நேரம் தெரு விளக்கில் ஒளியை ருசிபார்க்கப் போவது போல விளக்குப் பூச்சிகள் படபடக்கும் சத்தம் கவனத்தை ஈர்த்தது. அதைவிடவும் எதிர்த்த வீட்டுப் பக்கம் ஒரு வவ்வால் கோபால் வீட்டு நிலைப்படிக்குள் வேகமாய் நுழைவது போலச் சென்று நுழையாமல் அதேவேகத்தில் திரும்பவும் தெருவாசலுக்கும் நிலைப்படிக்குமாய் மாறி மாறி அலைவதைப் பார்த்தபடியே மனம் அதில் ஈடுபாடானது.

''டேய் ஆறுமுகம் எத்தன தடவ கூப்புட்றது? இந்தாடா இந்த டைகர் பாம கொண்டு போயி அந்த மாமி கிட்ட கொடுத்துடு. பாவம் கேக்க கூச்சபட்டுக்கிட்டு கொஞ்சமா தடவிகிட்டுப் போய்ட்டாங்க. போய் கொடுத்துட்டு வந்துடு.'' அம்மா அவசரப்படுத்தினார்.

டைகர் பாமைத் தூக்கித் தூக்கிப் போட்டுப் பிடித்தபடி கோபால் வீட்டுப் பக்கம் நடந்தேன். அது இரண்டு கட்டு வீடு. முன் பகுதியான ரேழியில் நுழையும்போதே வீட்டின் உள் பகுதியில் ராமமூர்த்தி ஐயர் கோபாலைத் திட்டும் சத்தம் கேட்கவே, தயங்கியபடி ரேழியிலேயே நின்று கொண்டேன்.

''ஏண்டா, நோக்கு புத்தி மழுங்கிடுத்தா, பூணூல் போட்டிருக்க ஒழிய ஒரு ஆச்சாரம், அனுஷ்டானமே இல்லாம போய்டுத்து. எதோ அவனோட சேர்ந்துண்டு கிட்டிபுள்ளு விளையாண்ட, கேரம்போர்டு விளையாண்ட, போய்த் தொலையறதுண்டு விட்டா தண்டத்



**அவர்களுக்கே அருவருப்பான பழக்கவழக்கங்களை விட்டு விட்டால் அவர்களுக்கு நம்மைப் பிடித்துவிடும் என்று அம்மா சொன்னதை நம்பி இருந்த எனக்கு நமது பிறப்பே அவர்களுக்கு அருவருப்பாய்ப் படுவதை எண்ணி அதிர்ச்சியும், ஆத்திரமும் உடலெங்கும் பரவியது.**

துக்கு இப்ப என்னடான்னா அவன நம்மாத்து அடுப்பங்கரை வரைக்கும் கூட்டி வந்து கூத்தடிச்சிண்டு இருந்துருக்கே. நாலு தலைமுறையா ஆச்சாரமா வாழ்ந்த வீட நாஸ்தி பண்ணிட்டுப் போய்டாதே. கருமம், கருமம். என்ன கிரகச்சாரமோ நேக்கு புள்ளையா பொறந்து தொலைச்சிருக்கே. எத்தன தர சொன்னாலும் நோக்கு புத்தில ஏறமாட்டேங்கறது.''

''சரி விடுங்கோ நீங்க படபடக்காதேள், ஒடம்புக்கு ஆகாது. ஏண்டா கோபால் நோக்கு எத்தன தடவ சொல்லியிருக்கேன். அந்த ஆறுமுகத்தோட ஒரே கிளாஸ்ல படிக்கிற, சேர்ந்து வெளையாடுற. அவா யாரு? நாம யாரு? ஒன்னா பேசுறோம், பழகுறோம்ங்குறதுக்காக சூத்ராள கொண்டு வந்து நம்மாத்து அடுப்பங்கரையில வச்சிக்க முடியுமா?''

மங்களத்து மாமியும் சேர்ந்து கொண்டு பேசுவதைக் கேட்டவுடன் ஒரு கணம் என் தலைமேல் குண்டைப் போட்டது போல் நிலை குலைந்து போனேன். அவர்களுக்கே அருவருப்பான பழக்க வழக்கங்களை விட்டு விட்டால் அவர்களுக்கு நம்மைப் பிடித்து விடும் என்று அம்மா சொன்னதை நம்பி இருந்த எனக்கு நமது பிறப்பே அவர்களுக்கு அருவருப்பாய்ப் படுவதை எண்ணி அதிர்ச்சியும், ஆத்திரமும் உடலெங்கும் பரவியது.

ஒருவிதப் படபடப்பில் கையிலிருந்த டைகர் பாம் நழுவிக் கீழே விழுந்து சத்தமெழுப்பியது.

''யாரது... யாரது?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே இருந்த ராமமூர்த்தி ஐயர் ரேழிப் பக்கம் வந்தார்.

''ஓ ஆறுமுகமா... எப்ப வந்த? எப்ப வந்த?'' அதையே திரும்பத் திரும்பக் கேட்டார்.

''இப்பதாங்க, அம்மா மாமி கிட்ட டைகர் பாமைக் கொடுத்துட்டு வரச்சொன்னாங்க.''

முகத்தைப் பார்க்க மனசில்லாமல் டைகர் பாமையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''சரிப்பா. என்ன அது டைகர் பாம்தான, டைம் பாம் மாதிரி அதையே உத்துப் பாத்துண்டிருக்க? கொடு... கொடு...'' ராமமூர்த்தி ஐயர் சிரிப்பை வரவழைக்க, ''படிக்கணும் வர்றேங்க'' என்று நான் வீட்டுப் பக்கம் வந்துவிட்டேன்.

திண்ணையில் வந்து அமர்ந்தவுடன் எத்தனையோ முறை நுழைந்து வந்த கோபால் வீட்டை புதிதாகப் பார்ப்பது போல உற்றுக் கவனித்தேன். நிலைப்படிக்குள் நுழைவதுபோல அலைந்து கொண்டிருந்த வவ்வாலையும் இப்போது அங்கே காணோம்.

● துரை. சண்முகம்

www.padippakam.com

### தமிழர் கண்ணோட்டம்:

# சந்தர்ப்பவாதத்தின் கவசம் – வசவு!

தென்றல் திரைப்படத்தை தமிழர் கண்ணோட்டம் பாராட்டியிருந்ததையும், அவர்களது கட்சியைச் சார்ந்த இராசேந்திர சோழன் கவிதாசரண் இதழில் அதே படத்தை விமரிசித்திருந்ததையும் ஒப்பிட்டு, இரா.சோ. முன்வைத்த 'விமரிசனத்தின்' சாரத்தை சென்ற இதழ் பு.க.வில் கேள்விக்குள்ளாக்கியிருந்தோம். இராசேந்திர சோழனை 'த.தே.பொ.க.வின் பொதுச் செயலர்' என்று அக்கட்டுரையில் தவறுதலாகக் குறிப்பிட்டு விட்டோம். இந்த விவரப் பிழைக்காக வருந்துகிறோம்.

இதனைக் கண்டிக்குமுகமாகத் தமிழர் கண்ணோட்டம் (மே'04) எழுதியுள்ள கட்டுரையில் ''த.தே.பொ.க.வை அவதூறு செய்ய வேண்டும்'' என்பதற்காகவே இந்தத் தவறான செய்தியை எழுதியுள்ளதாகக் கூறுகிறது.

இரா.சோ. அவர்களை 'த.தே.பொ.க.வின் பொதுச் செயலர்' என்று குறிப்பிட்டதன் மூலம் அக்கட்சியை அவதூறு செய்திருக்கிறோம் என்ற விசயம் இவர்கள் சொல்லித்தான் நமக்குத் தெரிய வருகிறது!

இரா.சோ தான் இரண்டு கட்டுரைகளையும் எழுதினார் என்று நாம் குறிப்பிடவில்லை. ''கட்சிப் பத்திரிக்கையில் ஆதரித்தும் கட்சி சாராததில் எதிர்த்தும் எழுதுகிறார்களே'' என்றுதான் குறிப்பிட்டிருந்தோம். ''ஒரே கட்சிக்காரர்கள் இருவிதமாக எழுதுகிறார்களே'' என்பது தான் இதன் பொருள். ஒருவேளை இதையும் 'அவதூறு' என்பார்களோ! சரி, இனி விசயத்துக்கு வருவோம்.

''தென்றல் படத்தில் நலங்கிள்ளி செய்யும் அடாவடித்தனங்களை தாமரையும் செய்தால்'' என்று கேட்கும் இரா.சோ.வின் 'பெண்ணியத்தில்' ஒளிந்திருக்கும் அசட்டுத்தனம்,

''படைப்பாளி ஆன்ம திருப்திக்காக எழுதினால் அவனுடைய சொந்த வாழ்க்கை பற்றிக் கேட்க வேண்டியதில்லை'' என்று இரா.சோ முன்வைக்கும் அப்பட்டமான முதலாளித்துவக் கோட்பாடு —

இவை குறித்து பு.க. விமரிசகர் எழுப்பிய கேள்விக்கு த.க.வில் விடையில்லை. இவைதான் த.தே.பொதுவுடைமைக் கட்சியின் நிலைப்பாடுகள் போலும்!

நலங்கிள்ளியின் பாத்திரப் படைப்பு ''எழுத்து என்ற நுட்பம் சார்ந்த அக இயக்கத்தின் வெளிப்பாடாய்க் காட்டப்படாமல் சாலையில் தார் போடும் பேரிரைச்சலாக'' உள்ளது என்பது இரா.சோ.வின் கருத்து. ''தார்ச்சாலை போடும் புல்டோசர் போல அரசியல் நிலைப்பாடுகளை அப்படியே கலைப் படைப்பில் கொடுத்துவிடக் கூடாது'' என்ற பொருளில்தான் இரா.சோ. எழுதியிருப்பதாக உரை எழுதுகிறது தமிழர் கண்ணோட்டம். தங்கள் கட்சி அரசியலையும் அதன் தலைவர்களையும் புல்டோசர் என்றும், இரா.சோ. போன்ற இலக்கியவாதிகளை ரோசாமலர் என்றும் அவர்களே கருதும்போது நாம் என்ன சொல்ல முடியும்?

''இலக்கியத்தில் தெறிக்கும் மிதமான முற்போக்கு மனிதாபிமானத்தைக் கொண்டு அரசியலுக்கும் இலக்கியத்துக்கும் இணைப்பு ஏற்படுத்தி இரண்டு இடத்திலும் வர்ணம் குலையாமல் தமது வர்க்க நிலைக்கு நியாயம் தேடுவதாக'' இரா.சோ.வை விமரிசித்திருந்தார் இளந்தீபன்.

த.தே.பொ.க.வின் அரசியலையும் இரா.சோ.வின் இலக்கியக் கோட்பாடுகளையும் இணைக்கும் கண்ணியைத் தான் குறிப்பிடுகிறார் விமரிசகர்.

இதன் பொருளை தொடர்பேயில்லாமல் திரித்து ''இரா.சோ.வின் எழுத்து வேறு வாழ்க்கை வேறு'' என்று பு.க. கூறியதாகக் கற்பித்து அவர் சிறை சென்ற பட்டியலை வெளியிடுகிறது தமிழர் கண்ணோட்டம். இது நகைக்கத்தக்க திசை திருப்பும் முயற்சி.

வெவ்வேறு புள்ளிகளிலிருந்து புறப்பட்ட போதிலும் தமிழர் கண்ணோட்டமும், இரா.சோ.வும் எப்படி நலங்கிள்ளி பாத்திரத்துடன் இரண்டறக் கலக்கிறார்கள் என்பதுதான் நாம் கூறவந்த கருத்தின் சாரம். எப்படியோ, இந்தக் 'கொள்கை' ஒற்றுமை குறித்துத் தமிழர் கண்ணோட்டத்திற்கு மகிழ்ச்சியே. வேற்றுமையை மறைக்கத் தான் பு.க.வின் மீது பாய்ச்சல்!

பி.கு: ''ஒரு மனிதன் நல்லவனா கெட்டவனா என்று அளவிட, அவன் 'தமிழர் நலனுக்கு'க் குரல் கொடுத்தானா என்பதுதான் இவர்களது அளவுகோல்'' என்று குறிப்பிட்டிருந்தோம். பெர்னான்டசை ஏன் பாராட்டினார்கள் என்ற விளக்கத்தில் நம் கருத்தை த.க. வழிமொழிந்துள்ளது. ''அதே நேரத்தில் தவறு செய்தால் கண்டிப்போம்'' என்று மீசையும் முறுக்குகிறது. ஆர்.எஸ்.எஸ். தமிழர்களுக்குச் செய்யும் சமூக சேவையையும் கூட இந்தக் கணக்கின்படி பாராட்டிவிட்டு, குஜராத் படுகொலையைக் கண்டிக்கலாம். புலிகளை ஆதரித்த தாக்கரேயை நெடுமாறன் பாராட்டியதற்கும், வாஜ்பாயிக்கு மனுகொடுக்கப் போனதற்கும் தமிழர் கண்ணோட்டம் எப்படிப் பொறுப்பேற்கும் — இரா.சோ.வின் கருத்துக்கே பொறுப்பேற்க முடியாத போது!

# காலச்சுவடு: தருமம் 'தலை' காக்கும்!

மறைந்த ஓவியர் உதயனின் கேலிச் சித்திரங்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளது காலச்சுவடு. விற்பனைத் தொகையில் பாதி ஓவியரின் குடும்பத்தாருக்கு வழங்கப்படுமாம். வாழ்க தர்ம சிந்தனை!

எனினும் ''ஒரு கலைஞனை கவுரவிப்பது பணமல்ல'' என்ற உண்மை காலச்சுவடுக்குத் தெரியாமல் இராது. தங்களது இலக்கிய மனத்திற்குச் சற்றும் ஒத்துவராத 'காட்டமான, இரைச்சலான' உதயனின் அரசியல் கேலிச் சித்திரங்களை வெளியிட நேர்ந்ததற்கான காரணங்களை காலச்சுவடு பதிப்பகத்தார் நாலு வரி எழுதியிருக்கலாம். உதயனின் மறைவின்போது அதுபற்றி தங்கள் பத்திரிக்கையில் நாலு வரி கூட எழுதத் தோன்றாமல் போனதற்கும், தற்போது நூல் வெளியிட்டு நிதி திரட்டுவதற்குமிடையிலான பள்ளத்தாக்கிற்குப் பாலம் போடும் வகையிலாவது நாலு வார்த்தை எழுதியிருக்கலாம்; எழுதியிருக்க வேண்டும்.

இவை குறித்துக் கவனமாக மவுனம் சாதித்தபடியே அவரது குடும்பத்தாருக்கு நிதி வழங்குவதும் அறக்கட்டளை தொடங்குவதும் நமக்கு வேறொரு விவகாரத்தை நினைவுபடுத்துகிறது. பார்ப்பன மதவெறியர்கள் நடத்திய குஜராத் இனப்படுகொலையை ஒட்டி காலச்சுவடு நிதிதிரட்டியது. அதற்காக நடத்தப்பட்ட கூட்டத்தில் 'இந்து, இந்துமத வெறி' என்ற சொற்கள் தவறிக்கூடப் பயன்படுத்தப்படவில்லையென்பதை நாம் ஏற்கெனவே எழுதியிருந்தோம். அந்த வரிசையில் இப்போது உதயன்.

நூலை வெளியிட்டுப் பேசிய ஓவியர் மதன், ''உதயனின் போர்க்குணத்தையும் எதற்கும் யாரிடமும் சமரசம் செய்து கொள்ளாத அவரது போக்கையும்'' சுட்டிக் காட்டினாராம், வெட்கக் கேடு!

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTE[illegible]R OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN/PMG (CCR)/239/03-05

www.padippakam.com



# ஊர்ப்பிணம்

• துரை.சண்முகம்

கல்யாண ஜோடியின்
காய்ந்த மாலைகளும்
காதல் ஜோடியின்
வாழைக்கட்டைப் பிணங்களும்.
எங்கள் வாழ்விலும் சாவிலும்
வந்த நதியே
நீ எங்கள் உடம்புக்கு வெளியே
ஓடிய இரத்தம்
உறவுக்கு உள்ளே ஓடிய கண்ணீர்.

நேற்றைக்கு நடந்தது போலிருக்கிறது
ஆற்றைக் கடந்த அந்தநாள் நினைவுகள்.
விழுப்பணாங்குறிச்சியில் விழுந்த சாவுக்காக
கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே
குடும்பமே நடந்து போனோம்.

அந்த மையிருட்டில்
ஆழம் அறிந்து அடிவைத்து
நெட்டை சித்தப்பாவை முன்னேவிட்டு
நீள்வரிசையில் தடுமாறிக் கால்வைக்க
''தளக் புளக்'' என்றெழுந்த தாளகதி
நினைவுகளில் இசையாய் நீள்கிறது இன்னும்.

ஆற்றின் அடிபிறழாச் சீர்நடையிலும்
நிலவொளியில் வெள்ளிக்கோடென
துள்ளித் திரியும் நெத்திலி மீன்களின்
ஓடிப்பிடி விளையாட்டிலும்
ஒன்றிப்போய் நான் கிடக்க.

கரையேறியவுடன்
இறந்தவரை நினைத்து எல்லோரும்
அரற்றி அழுதபடி ஓட்டமும் நடையுமாயினர்.
ஆற்றைப் பிரிந்த துயரத்தில்
அழுது கொண்டே போனேன் நானும்.

அடம் பிடித்து அம்மாவின் கை உதறி
மாமாவோடு மயானத்திற்கு வந்து சேர்ந்தேன்.

வரட்டி அடுக்கியபடியே
''வந்தவங்கெல்லாம் கடைசியா ஒரு தடவை
முகத்தைப் பாத்துக்குங்க'' என
எரியூட்டுபவர் குரல் கொடுக்க
அப்போதும் எனது கண்கள்
ஆற்றின் மீதே அசையாதிருந்தது.

காற்றையும் சிறகால் கவ்விப் பிடிக்காமல்
நீரிலும் கால்கள் நிலைத்து நிற்காமல்
மீன் கொத்திப் பறவையின் கொள்ளிட வேட்டையில்
கூடிக் கிடந்தது மனம்.

எல்லோரும் திரும்பிப் பார்க்காம போங்க
மீண்டும் குரல் வர
அனைவரும் முன்னோக்க
நான் மட்டும் ஆற்றை
திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே
தெரு நோக்கிப் போகிறேன்.

தகனம் முடிந்து பகலில்
பரிசலில் ஆற்றைக் கடக்கையில்
அம்மாவுக்குத் தெரியாமல் கை நனைத்து
ஆற்றின் தொடுசுகம் அனுபவித்தபோது
கொள்ளிடம் எனக்குள் குறுக்காய் ஓடியது.

''எப்படி வாழ்ந்த மனுசன்?''
இறந்தவரின் நினைவுகளை
கடந்து கரையேறின உறவுகள்.
ஊற்றாய் உணர்வுகளுக்குள் இறங்கிவிட்டதால்
கடைசிவரை மனம்
கடக்க முடியவில்லை ஆற்றை.

ஆண்டு பலகடந்து மீண்டும்
விழுப்பணாங்குறிச்சிக்கு
ஒரு சாவுக்காய்ப் போயிருந்தேன்
ஆற்றுநீர்ச் சுருக்கத்தில்
காற்றின் தடம் தெரியும்
அந்தக் காட்சிக்கு வழியில்லை,
பொட்டுத் தண்ணீராவது கேட்டு
தாகத்தால் தவித்துத் தவித்து
செத்துப் போனவனின் நாக்காய்
திறம் மாறிக் கிடந்தது நீள்மணல் பரப்பு.

திருமானூர் பாலத்து வழியே
திரும்பும் அந்த முன்னிரவில்
ஆற்றுக்குள் தெரியும்
தீக்கொழுந்தைப் பார்த்துவிட்டு
என் அன்புமகள் கேட்கிறாள்
என்னப்பா ஆத்துமேல நெருப்பு எரியுது
அங்க யாரும் செத்துட்டாங்களா?

படிப்பகம்